Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

புஷ்பார்ச்சன விதி

(மலர் வழிபாட்டுமுறை)

(இறைவழிபாட்டிற்கு ஏற்ற 200 பூவகைகளின் சேமித்தல், உபயோகித்தல், பயன்கள் இவற்றை விளக்குவது)

நூலாசிரியர்
சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் M.A.,

வெளியீடு
சைவாகம கலாசார தீபிகோத்ஸவம் (25-12-2011)
சிவாசார்யர் அறக்கட்டளை &
சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் – சென்னை–1.

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Shalinganallur, Chennai

9444391485 11.5 Pm
Kannan. chennai

உ

ஓம் ஸ்ரீ சிவாப்யாம்நம:

புஷ்பார்ச்சனவிதி
(சைவாகமம்)

(மலர் வழிபாட்டு முறை)

ஆசிரியர்
ஆகமப்ரவீணர்.வியாகரணசிரோமணி
சைவாகமக்ஞசூடாமணி. சிவாகம அருட்செல்வர்
சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர்
சைவாகமப் பேராசிரியர், முதல்வர்
சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை -1

உ
பிள்ளையார்பட்டி பாடசாலை 2022-23
கல்வியாண்டில் பயிலும் மாணவர்களுக்கும்
பாடசாலை நிர்வாகத்திற்கும் எமது சிறு
அன்பளிப்பு.

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன்
சென்னை -1

நமஸ்காரங்கள்

9500042605
அன்பளிப்பு: ஹரிஹரன் வை.
"சிவமஸ்து சர்வ ஜகதாம்"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நூல்விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	புஷ்பார்ச்சனவிதி (சைவாகமம்))
நூலின் மொழி	தமிழ்
நூலின் எழுத்து	தமிழ்
நூலின் அளவு	8.5 x 5.5
நூலின் எண்ணிக்கை	300
வெளியீடு வரிசை எண்	21
நூலின் பதிப்பு எண்	முதற்பதிப்பு – (25–12–2011) இரண்டாம் பதிப்பு – (13–07–2014) மூன்றாம் பதிப்பு – (10–02–2022)
தொகுப்பு ஆசிரியர் நூல் வடிவமைப்பு	சிவஸ்ரீவி. சோமசேகர சிவாசார்யார்
நூல் உரிமை	சிவஸ்ரீ டி. எஸ். காளிதாஸ் சிவாசார்யார்
நூலின் பக்கங்கள்	130 பக்கங்கள்
கணிணி பதிவு அச்சகம்	ராஜம்ஸ் டிஜிட்டல் , சென்னை 14
வெளியீடு	மேதா சக்ரிணீ கோஷ்டம்
தொகுத்த நிறுவனம்	சிவாசார்யர் அறக்கட்டளை.
வெளியிடுவோர்	சிவஸ்ரீ தி.ஸா. ஸ்வாமி சதாசிவோம் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. ஷண்முக சிவாசார்யர் சிவஸ்ரீ மு. கார்த்திகேய குருக்கள்
விலை	ரூ.180/–
அச்சகம்	: ஓம் டிஜி ஒர்க்ஸ், சென்னை–40.
புத்தகம் கிடைக்கும் இடம்	: அறக்கட்டளை & நூலாசிரியர்அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	: 98402 99352 / 99402 01849

உரிமை : ©
இந்தப் புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் நூலாசிரியர் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக்கக் கூடாது.

Copyright © All rights reserved including the rights of reproduction in whole or in part in any form.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புஷ்பார்ச்சனவிதி

(சைவாகமம்)

(மலர் வழிபாட்டு முறை)

பொருளடக்கம்

ஆசியுரை

சிவஸ்ரீ சாளுவ K. ராஜப்பா சிவாசார்யர், காஞ்சீபுரம்.

அணிந்துரை

சிவஸ்ரீ T.V ஞானசம்பந்த சிவாசார்யர், சித்தூர்.

பதிப்புரை

சிவஸ்ரீ T.S. காளிதாஸ சிவாசார்யர், சென்னை.

சிவஸ்ரீ T.S. ஷண்முக சிவாசார்யர், சென்னை.

மதிப்புரை

சிவஸ்ரீ N. சுவாமிநாதசிவம், செம்பூர், மும்பை.

முகவுரை

சிவஸ்ரீ V. சோமசேகர சிவாசார்யர், சென்னை.

நூலின் பொருளடக்கம்

புஷ்பார்ச்சனவிதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

ஸ்ரீ சிவாப்யாம் நம :

ஆசியுரை

சென்னை தம்புசெட்டித்தெருவில் வீற்றிருக்கும், ஸ்ரீகாளிகாம்பாளின் அருள்பெற்று, அன்னையின்பிரதிநிதியாகவிளங்கி, உலகெலாம் இந்துமதத்தைப்பரப்பி பெரும்பதவியை அடைந்த சிவாச்சாரியரின் நினைவுஅறக்கட்டளையின்சார்பாக, பிரதிமாதம் நடைபெறும் சைவசமயக்கருத்தரங்கினை சிறப்பாக நடத்திவரும் வ்யாகரணசிரோமணி, சிவாகமவாசஸ்பதிதிரு. V. சோமசேகர குருக்கள் ஆகமத்தின் ஆங்காங்கேஉள்ள புஷ்பலக்ஷணங்- களை ஆராய்ந்து புஷ்பார்ச்சனவிதி என்னும் தலைப்பின்கீழ் அரியபெரியவிஷயங்களை நம்மவர்களுக்கும், பக்தர்களுக்கும் எளிதாகப்புரியும்வண்ணம், அவருக்கேஉரியநடையில் மிகச் சிறப்பாகத் தொகுத்து எழுதியுள்ள கட்டுரையை காணும் வாய்ப்புகிடைத்தைஎண்ணி, மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மூலாகமங்களை எல்லோரும் பார்க்கும் வாய்ப்பு அரிதாகஉள்ள இக்காலத்தில் பூஜைக்கு முக்கியமாகவுள்ள புஷ்பங்களைப்பற்றி ஆமகங்களில்உள்ள ஸ்லோகங்களையும் இதில் பதிவு செய்து அதற்குரிய தமிழாக்கமும் செய்துள்ளது, அனைவருக்கும், விசேஷமாக மாணாக்கர்-களுக்கும் ஞானம்கிடைக்க வழிகோலியுள்ளதாக உள்ளது. ஒரே புஷ்பத்திற்குஉள்ள பல பெயர்களையும், பலபுஷ்பங்களுக்கு ஒரேபெயரும் உள்ளதையும் பகுத்து ஆங்காங்கே காட்டியுள்ளது மிக உதவியாகஉள்ளது. அத்துடன் ஆகமங்களில் வடமொழியில் உள்ள புஷ்பத்தின் பெயருக்கு தமிழ்மொழியில் என்னபெயர் என்பதையும் விளக்கியுள்ளது. இதுவரை கிடைக்காத சிலபூக்களின் பெயர்கள் அறியக்கூடியதாகவும், சைவஉலகிற்கு பயன்தரக் கூடியதாகவும் உள்ளது.

மேலும் புஷ்பங்களின் மருத்துவகுணங்கள், எந்தெந்தமூர்த்திக்கு எந்தெந்தபுஷ்பம் விசேஷம், எந்தெந்தபுஷ்பம் நிஷித்தம் என்பதையும் அனைவரும் அறியும்வண்ணம் மிக்க தெளிவோடு குறிப்பிட்டுள்ளார். மேலும் புஷ்பங்களை சாற்றுவதற்கான பூஜாகாலங்கள் (எந்தெந்த காலங்களில் எந்தெந்த புஷ்பம் விசேஷம்), அப்புஷ்பங்களை இறைவனுக்கு அர்ப்பணித்தால் நாம் எவ்வாறான பேறுகளை அடைவோம் என்பதையும் தெளிவுறுத்தியுள்ளார்.

அதுபோல இக்கட்டுரையின் முக்கியாம்சமாக, எந்தெந்த புஷ்பங்களை எத்தனைநாட்கள் வைத்திருந்து சாற்றாலம் என்பதை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விளக்கி, வில்வம், துளசி, பலாசம் இவைகளுக்கு நிர்மால்ய தோஷம் கிடையாது மறுபடியும் சுத்தம் செய்து இறைவனுக்கு அர்ப்பணிக்கலாம் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். பத்ரபுஷ்பங்கள் போன்றவை அதிகமாக கிடைக்காத போது நாம் எவ்வாறு, எதைக்கொண்டு பூஜை செய்யவேண்டும் என்பதனை நினைவுபடுத்தியுள்ளார் பேராசிரியர். நம் முன்னோர்கள் காலத்தில், ஒருசிலருக்கே இம்மாதிரியான விஷயங்கள் தெரிந்து இருந்தது. அவற்றையும் பல ஆகமங்களைக் காணும் வாய்ப்பைப் பெற்ற பண்டிதர்களுக்கு தெரிந்தி-ருந்ததையும் மொத்தமாக ஸங்க்ரஹம் செய்து இக்கட்டுரையின் வாயிலாக, வெளிக் கொணர்ந்ததைநினைத்து மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன். மேன்மேலும் இந்தஆசிரியர் இம்மாதிரி பெரும்முயற்சிகளைச் செய்து, சதுர்வர்க சாதனங்களை அடைய, எல்லாம் வல்ல காஞ்சி ஸ்ரீகாமாக்ஷி நாயகனையும், அன்னை காளிகாதேவியின் திவ்யசாரணங்களையும் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,
சைவ சித்தாந்தசரபம், ஆகம ஸாகரம்.
சிவாகம செல்வர், சிவாகம ஞானபானு.
சைவாகம திருத்தொண்டர். சிவாகம் ஞானபாஸ்கரர்
சிவாகம ரத்னாகரம். ஆசார்ய சிந்தாமணி. சிவாகம வாசஸ்பதி
காஞ்சீபுரம் சாளுவ . K. ராஜப்பா குருக்கள்.
பரம்பரை ஸ்தானீகம் ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயில்
மற்றும் ஸ்ரீ ஏகாம்பரநாதர் திருக்கோயில்
எண்.45/121, ஏகாம்பரநாதர் சன்னதி தெரு,
பெரிய காஞ்சீபுரம் - 631 502

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

ஓம் சிவகுஹசக்தி துணை

அணிந்துரை

வாக்குஉண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குஉண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக் கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

அகிலமதில் அனைவரும் அனைத்துச் செயல்களையும் தொடங்கும்முன், அகர உகர மகர நாத பிந்து வடிவான ஓம் என்ற சூக்ஷ்மபஞ்சாக்ஷரவடிவான, பரஞ்சுடரின் பாலனாம் பாலகணபதியை மலரால் பணிந்தேத்தும் முறைமையை பார்புகழும் ஔவைமூதாட்டியின் மேற்கண்ட முதுமொழிப்பாடலால் அறியப்படுவது யாதெனில்? எவனொருவன் புஷ்பங்களைக் கொண்டு ஐங்கரனை அகத்தினில் அர்ச்சனைபுரிகின்றானோ அவனது மேனி நுடங்காது நல்ல மனசு உண்டாகும், லக்ஷ்மிகடாக்ஷம், சரஸ்வதிகடாக்ஷம் ஏற்படும் எனப்புகழ்ந்து பாடி இருப்பதால் இறைவன் பாதம் பூக்கொண்டு பணிமின் என உணர்த்துகின்றாள் என்று அறியலாம். இறைவனைச் சார்ந்தவர்க்கு மனோவாக்குகாயம் என்னும் திரிகரணசுத்தி உண்டாகும்.

வள்ளுவப்பெருந்தகையும் கற்றதனால்ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின் என்ற குறள்மூலம் படித்தால் மட்டும் போதாது, பகுத்தறிவுடையவனாக பரமனின்பாதம் பணிதல்வேண்டும் என்கிறார். மேலும் நம்பினவருக்கு நடராஜா, நம்பிக்கை இல்லாதவருக்கு யமராஜா என்று ஆன்றோர் கூறுவர். மேலும் இறைவன் மனத்துக்கண் உளன் என்பதால் கடவுள் எனக்கற்றோர் கருத்தாகும். இக்கடவுளை அகத்தின்கண் பூக்கொண்டு பூஜைசெய்வது ஆத்மார்த்தபூஜை என்பர். இது அனைத்து ஜாதியாருக்கும் பொது என்றும், எண்ணாயிரம் ஜீவராசிகள் உய்யும்பொருட்டு ஆதிசைவமரபினராகிய, முப்போதும் திருமேனி தீண்டுந்தகுதி பெற்ற சிவவேதியர் ஒருவருக்கே விதிக்கப்பட்டுள்ளது, சிறப்புவழிபாடாகிய பரார்த்தஆலயபூஜையாகும். ஆன்மார்த்தம், பரார்த்தம் என்கிற அகவழிபாடு, புறவழிபாடு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆகிய இருவகைப்பூஜைக்கும் முக்கியமாய் வேண்டப்படுவன 1. பத்திரம், 2. புஷ்பம், 3. பழம், 4. தண்ணீர், 5. நாமார்ச்சனை ஆகிய ஐந்துமாகும். இவற்றுள் திருமூலநாயனார் முதலாவதான பத்திரத்தை தமது திருமந்திரத்தில் "யாவர்க்குமாம் இறைவர்க்குஓர் பச்சிலை" என்று கூறியுள்ளார். பெரியோர்கள் வில்வபத்திரம், துளசிபத்திரம் ஆகிய இரண்டையும் இரண்டுகண்களைப்பேணுதல் போல் போற்றி வருகின்றனர். சைவ வைணவ ஆலயங்கள் இரண்டிலும் முறையே வில்வபத்திரத்தை சிவபெருமானுக்குச் சிறப்பாகவும், வைணவக்கடவுளாம் திருமால் எனும் பெருமாளுக்கு துளசிபத்திரத்தைச் சிறப்பாகவும் கூறப்பட்டிருப்பினும் சைவவைணவ கடவுளர்க்கு இரண்டுபத்திரங்களையும் பயன்படுத்துமாறு ஆகமங்கள் இயம்புகின்றன.

"மலர்வழிபாட்டுமுறை" எனும் சைவாகமநூலைக் கண்ணுற்றேன். இதில் பூவகைகளும், பத்திரவகைகளும், பழவகைகளும் அர்ச்சனைக்குப் பயன்படுத்தவேண்டும் என்றும், அவைகள் தன் வீட்டுத்தோட்டத்தில் விளைந்தவற்றைத்தான் பயன்படுத்தணேட்டும் என்றும், அவையே முதலிடத்தைப்பெறுகின்றன என்றும் கூறப்படுவதால், யாவரும் மலர்தரும் மரஞ்செடிகொடிகளை வளர்க்கவேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. ஒருவருக்கும் உரிமையில்லாதபொது இடமாகிய வனத்துறையாகிய, காடுகளில்விளைந்த பத்திரம், புஷ்பம், பழம் இவைகளை வனத்துறையனுமதி பெற்று பறித்துவருவது இடைப்பட்ட (நடு) இடத்தைப்பெறுகின்றன. இதனால் நாட்டைக் காப்பதுபோல, காட்டையும் நாம் நன்கு பாதுகாக்கவேண்டும் என்று சிவாகமங்கள் இயம்புகின்றன. எதைச்செய்யக்கூடாது என சிவாகமங்கள் விதித்துக் கூறியுள்ளனவோ அதையே செய்துவருகின்றோம். அவையாவன : பணம்கொடுத்து வாங்கிய பத்திரம், புஷ்பம், பழம் முதலானவை (அதமம்), கடைநிலைப்பயனைத்தருபவை ஆகும். பூசைக்குப் பிறரிடம் யாசித்துப் பெற்ற மலர்களும் பயனற்றவை என ஆகமங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. வீட்டுப்பூஜைக்கு தன்வீட்டுத்தோட்டத்தில் கிடைத்தவை சிறந்தனவாகும். கோயில் பூஜைக்கோ எனில் அந்த கோவிலின் நந்தவனத்து புஷ்பம், பழம், இலைகள் இவற்றையே பயன்படுத்துதல் வேண்டும். பிறஆலயங்களின் நந்தவனத்தில் தோன்றிய பத்திர புஷ்பம் முதலானவற்றை அந்த கோவிலுக்குப் போக மிகுந்தவற்றைப் பிறகோயில்களுக்கப் பயன்படுத்தலாமே தவிர, நமது வீட்டுப்பூஜைக்குப் பயன்படுத்துதல் பாபச்செயலாகும். அக்கோயிலில் பணி செய்பவர்கள், அக்கோயிலில் தீக்ஷை பெற்றிருப்பின் அவருக்கு பாவம் கிடையாது என்பதை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உணர்ந்திடவேண்டும். கோவில்பூஜகர் மட்டும் பயன்படுத்தலாமா? என்றால் அவர்கள் ஆன்மார்த்தபூஜை செய்யாது பரார்த்தபூஜை செய்யின் பயன்இல்லை. எனவே அவர்களுக்குத் தனிவிதி என்பதை உணரவேண்டும். நால்வகை வர்ணாஸ்ரம- தருமத்தைப் போலவே மலர்கள் யாவும் வெண்ணிறமலர்கள், செந்நிறமலர்கள், மஞ்சள்நிற மலர்கள், நீலநிறமலர்கள் என நால்வகைப்படுவனவாகும். மேலும் இவை சாத்விக, ராஜஸ, தமோகுணமலர்களாக மூவ்வகைப்படும். தாவரங்களுள் சில செடியாகஉள்ளபோதும், சில மரமாகஉள்ளபோதும் மலரைத்தருகின்றன. இவை அனைத்தும் இறைவனுக்கே உரியன. இறைவனுக்கு அர்ப்பணித்து, பின்பு அவற்றை அவரது பிரஸாதமாக நாம் பெற்று உபயோகிக்கலாம். இறைவனுக்குப் பயன்படாத விலைக்கு வாங்கும் மலர்களை யாவரும் பயன்படுத்திக்கொள்ளலாம். விசேஷ காலங்களில் விலைக்கு வாங்கிய புஷ்பங்களையும் பயன்படுத்தலாம். வாசனையற்ற மலர்களும், அதிகவாசனையுள்ள மலர்களும் விலக்கத்-தக்கவையாயினும் இவைகள் "யானகாலேது ஸம்பிராப்தே வர்ஜியாக்ராஹ்யாஸ்ச ஸம்மதா: என்ற வசனத்தின்படி திருவிழா போன்ற காலங்களில் அனைத்துமலர்களும் ஏற்புடையனவாகும். வருடபுஷ்பமாக விநாயகசதுர்த்தியன்று மட்டும் விநாயகருக்கு துளிசிபுஷ்பம், துளசிபத்திரம் சாத்தி பயன்படுத்தலாம். அதுபோலவே சிவராத்திரியன்று மட்டும் லிங்கோத்பவ காலமாகிய நடுநிசியின்முன் ஒருநாழிகையின்பின்னிரவின்ஒருநாழிகை அதாவது சுமார் இரவு 11 மணி 36 வினாடிக்குப்பிறகு இரவு 12 மணி 24 நிமிடகாலத்திற்குள் சிவனுக்கு தாழம்பூவை சாற்றலாம். மற்றய காலபூஜையின் போது சாத்தக்கூடாது.

இந்நூலில் மாதந்தோறும் சாற்றும் மலர்கள், ஒவ்வொருநாளும் சாற்றும் மலர்கள் அதுபோலவே 12 மாதங்களுக்கும் பயன்படும் பத்திரங்கள், ஏழுநாட்களுக்கும் பயன்படும் பத்திரங்கள் யாவும் நன்கு விளக்கப்பட்டுஉள்ளன. மேலும் இந்நூலில் பத்திரபுஷ்பங்களை எத்தனை நாட்கள் வரை வைத்திருந்து பூஜை புரியலாம் என்பதும், சாற்றிய பத்திரங்களையே தண்ணீரில் நனைத்து மறுபடியும் சாற்றலாம் தோஷ மில்லை என்பதும் சிறப்பாக குறிப்பிடப்-பட்டுள்ளது. ஒவ்வொருகால பூஜைக்குஉரிய அஷ்டபுஷ்பங்கள் அந்தந்த அஷ்டபுஷ்பபூஜைக்குரிய மந்திரங்கள் மிகவும் சிறப்புடன் கூறப்பட்டுஉள்ளது. வெள்ளெருக்கமலர், கொக்கும்ந்தாரைப்பூ, பொன்னூமத்தைப்பூ, வெண்ஊமத்தம்பூ, வன்னிமரப்பூ, சரக்கொன்றைப்பூ, நீலோத்பலப்பூ இவைகளில் முன்கூறிஉள்ளதைக்காட்டிலும், பின்கூறப்பட்டுள்ளது ஆயிரம்மடங்கு அதிகமான லனைத் தருவது என்று அறியத்தக்கதுஆகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனிடம் முறையிடுகின்றார். கிழவேதியர் வேடத்தில் வந்து ஓலைகாட்டி என்னை ஆட்கொண்ட இறைவா வருமுறை மரபுஉளோரும் வழித்தொண்டு செய்தற்கு என ஓலை காட்டினீர். உன்னை ஒருநாளும் பூஜை செய்யமுடியவில்லையே என் செய்வேன் எனப்புலம்பிய வேளையில் "அர்ச்சனை பாட்டேயாகும்" என்று இறைவன் இயம்பினார். அன்று முதல் கயிலை அடையும்வரை இறைவன்மீது பாட்டே பாடினார். இதுவே நாமசங்கீர்த்தனம் ஆயிற்று. இதனையே "கலௌ நாமசங்கீர்த்தனம்" என்பார் பெரியோர் அவ்வண்ணமே ஆரூரன் அருந்தமிழ்பாடல் பாடியே காலங்கழித்தார். இந்நூலில் சிறப்பாக "மலர் கொண்டு பொழுது அறிதல்" எனும் பண்டையவழக்கு புலப்படுகின்றது. பூக்கொண்டு புனல்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணன் திருப்பாதிரிப்புலியூர் தோன்றாத்துணைவன் அருளால் ஆகமப்பேராசிரியர் ஏ. சோமசேகர சிவாசாரியர் ஆகமத்தின் ஆழ்பொருளை அனைத்து ஆதிசைவசிறார்களுக்கும், சமயஅன்பர்களுக்கும் இந்நூலில் நன்குவிளக்கியுள்ளார். அவர்கள் இதுபோல் மேன்மேலும் பல நூல்களில் ஆகமகருத்தினை வழங்கிடவேண்டுமென வேலவனை வேண்டுகின்றேன். அவரை நீடூழி வாழ்க என அன்புடன் வாழத்துகிறேன்.

இங்ஙனம்,
ஆகம ப்ரவீணர். ஆகமச் செம்மல்.
சிவாகம வாசஸ்பதி. சிவாகம வித்யாசரஸ்வதி.
T.V. ஞானசம்பந்த சிவாசாரியர்.
திருவேங்கடமுடையான் வேதாகமக் கல்லூரி ரூ
வேதாகம பாடசாலையின் முந்நாள் பரீக்ஷாதிகாரி
அன்னை சாரதாம்பாள் இல்லம்.
எண்.13-151, சிவன் கோயில் தெரு,
சித்தூர், ஆந்திர மாநிலம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

பதிப்புரை

யாதேவீ ஸர்வபூதேஷு மாத்ரு ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ் தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம :

ஆன்மீக வாசக நேயர்களே! வணக்கம்,

உலகில் உயிர்களை உய்வித்திடுவதற்காக அருளாட்சியை செய்து வருகிற காளிகாம்பாளின் கருணாகடாக்ஷத்தாலும், எங்களின் தந்தையின் அருளாசியாலும் எங்கள் அறக்கட்டளைகள் வாயிலாக ஆறு ஆண்டுகளாக மாதந்தோறும் ஒருமுறை சிவகாம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியையும், பலநூல்களை வெளியிட்டு ஆண்டுதோறும் சைவாகம கலாசார தீபிகோத்ஸவத்தையும் (கலாசார அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு) நடத்தி உங்கள் பெருமதிப்பையும், ஆதரவையும் பெற்றவர்கள் என்பதல் மகிழ்ச்சியடைகிறோம்.

சைவாகம அறிஞர் பலரின் போதனைகளையும், கருத்துகளையும் நூலாக வெளியிட்டு வரும் நாங்கள் எங்கள் அறக்கட்டளையின் ஆலோசகரும், குருநாதருமான **சிவஸ்ரீ. V. சோமசேகர சிவாசார்யர்** அவர்களின் இந்நூலை வெளியிடுவதில் பெருமித-மடைகிறோம். இந்நூலாசிரியரும், அவரது தந்தை சிவஸ்ரீ. விஜயகுருக்களும் பல தருணங்களில் எங்கள் தந்தையுடனும், எங்களோடும் இருந்து பல கும்பாபிஷேகங்கள், யாகங்கள், ஹோமங்கள் இவற்றில் பங்கு பெற்று அருந்தொண்டாற்றி சிறப்பித்தவர்கள். எங்களோடிருந்து சமயப் பணியாற்றிடும் குருநாதர் **சிவஸ்ரீ. V. சோமசேகர சிவாசார்யர்** தொகுத்து எழுதியுள்ள இந்நூல் என்றும் இந்து சமய ஆஸ்தீகப் பெருமக்களுக்கு பயன்தரக்கூடிய அரிய ஞானக் கருவூலமாக, ஆகமநூலாக இருப்பதால் இதனை எங்கள் அறக்கட்டளை வாயிலாக வெளியிட்டு மகிழ்கிறோம். இந்து மக்கள் இந்நூலை வாசித்தும், பின்பற்றி வாழ்ந்தும், உலகெங்கும் பரவச் செய்தும், தம்மையும் சமயத் தொண்டில் இணைத்துக் கொள்வதுடன் படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

அன்புடன்,
சிவாசார்யர் அறக்கட்டளை நிறுவனர்
சிவஸ்ரீ. T.S. காளிதாஸ சிவாசார்யர்
&
ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் பௌண்டேஷன் நிறுவனர்
சிவஸ்ரீ. Dr. T.S. ஷண்முக சிவாசார்யர் M.A., Ph.D.,
சென்னை - 600 001.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

ஸ்ரீ பெரியாண்டவர் துணை

புஷ்பார்சனைவிதி

திக்காலத் யனவச்சின்னாஅனந்த சின்மாத்ர மூர்த்தயே I
ஸ்வானுபூதி யேகமானாய நமஸ் சாந்தாய தேஜஸே II

மதிப்புரை

எல்லாம்வல்ல ஞானபண்டிதனார் செம்பூர் முருகன் திருவருளாலே அறிவின் கண்ணாலேயே அறியப்படும் பரம்ஜோதியாக எங்கும் நீக்கமரநிறைந்துள்ள, ஸர்வேஸ்வரனான பரமேஸ்வரனை, ஜீவாத்மாக்களாகிய நாம்அனைவரும் நற்கதிஅடைய (பூஜனம்) நிஷ்கள ஸ்வரூபமான சிவனை சகலமூர்த்தியாக பாவித்து ஒருஅடையாளமாக (லிங்கமூர்த்தியிலே ஆவாகித்து, பூஜைகளை செய்கிறோம். இதன் விதிமுறைகளை சிவனே தனது நான்கு-முகங்களின் வாயிலாக நான்குவேதத்தையும், ஊர்த்துவமுகத்திலிருந்து 28 ஆகமங்களையும் வெளிப்படுத்தி இருக்கிறார். கீதையில் "சர்வகர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம்விரஜ" என்றது போல் ஜீவாத்மாவிற்கு கர்மவினையை அனுபவித்தால்தான் சாயுஜ்யபதவி கிடைக்கும். பல ஜென்மாக்களின் புண்யபயன்தான் இந்த மானிடப்பிறவி. இந்த ஜென்மாவில் சிவனை பேசாத நாவு என்ன நாவு? பூஜைசெய்யாத கைகள் என்ன கைகள்? என்று எப்பொழுதும் சிவனை நினைந்து நினைந்து உருகி அவன் திருவடிகளை அடையவேண்டும் என்று ரிஷிகளும், பெரியவர்களும் கூறுகிறார்கள் சிதம்பரத்தில் நடராஜப்பெருமானை பூஜை செய்திட ரிஷி. அன்று பூத்தமலரால் சிவனை பூஜை செய்யவேண்டும். அதிகாலை மூன்றுமணிக்கு பூக்கள் பூத்துவிடும். அதுசமயம் வண்டுகள் மலர்ந்த பூக்களில்உள்ள தேனைபருகி தன்கூட்டில் சேமித்துவைக்கும். இந்த மஹரிஷிக்கு வண்டுகள் தேனை பருகுவதால் எச்சலாகிவிடும், எனவே வண்டுகள் முகர்வதற்க்குமுன் புஷ்பங்களைப்பறித்து இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் என்றுஆசை. ஆதலால் அந்த ரிஷியானவர் சிவனை தியானம்பண்ணி விடியற்-காலையில் நந்தவனத்துக்கு சென்றால் கீழே புழு பூச்சிகள் இருக்கும், அவை மிதிபடும். பாதரக்ஷை காலனிகளையும் அணியமுடியாது, ஆதலால் தனக்கு "புலிக்கால் வேண்டும்" என்று வேண்டினார். சிவனும் அந்தமுனிவருக்கு புலிக்காலை தருவித்தார். ஆகையால் அந்த முனிவர் வியாக்ரபாதர் என்ற பெயர்பெற்றார். இப்படி நந்தவனம் அமைத்து, அதில் பலவிதமான புஷ்பங்களை கொடுக்கக்கூடிய மரவகைகள், கொடிவகைகள், செடிவகைகள், தடாகம் அமைத்து, தாமரை, அல்லி, உத்பலம் போன்ற பலவிதமான நறுமணமுள்ள மலர்களைப்பறித்து சிவனைவழிபடவேண்டும். இப்படி ஆலயதொண்டில் அனேகம்பேர் ஈடுபட்டு, இவ்வுலகில் சௌகர்யமாக இருந்தார்கள். (நந்தவனக்காரர், மெய்காவலர், மாலைக்கட்டி ஆயலத்திற்கு தினமும் அலகிட்டு, மெழுகிட்டு, பொதுகளும் கொய்து பூந்தார்மாலை. புரசமயத்து புகழந்துபாடி, ஓதுவார்கள்). இவ்வாறாக மனம் மொழி மெய் மூன்றாலும் இறைவனை அர்ச்சிக்கவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நமது சகலாகம பண்டிதர், சிவாகமரத்னாகரம், சில்பசாஸ்த்திர விசாரதா, ஜோதிஷபூஷணம், வியாகரண சிரோமணி, சிவாகம திலகம் **சிவஸ்ரீ. V. சோமசேகர சிவாசார்யர் அவர்கள்** அரும்பாடுபட்டு பல க்ரந்தங்களை கண்ணுற்று, யான்பெற்ற செல்வம் இவ்வையகம் பெற்றுஉய்ய என்பதுபோல், எல்லோரும் இதைப்படித்து, உணர்ந்து, அதன்படி இறைவனை பூசித்து இகபர சௌபாக்கியம் அடையவேண்டும் என்று எண்ணி விளக்கியுள்ளார். மேலும் இந்த புஷ்ப்பார்ச்சனாவிதியில் பலவிசேஷபுஷ்பங்கள் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளன. மருத்துவ குணமுள்ள புஷ்பங்கள் என்றும் சிறப்புடன் கூறப்பட்டுள்ளன. இதில் விசேஷமாக ஒவ்வொரு காலபூஜைகளில் பூஜிக்கத்தக்க புஷ்பங்கள், வாரபஷ்பங்கள், பஞ்சபில்வங்கள், பத்திரபூஜையின் விசேஷங்கள் என்று பகுத்துஎடுத்துக்கூறிஉள்ளார் சிவாசார்யர். இக்காலத்தில் பணம்கொடுத்து பூசைக்கு புஷ்பங்களை வாங்குகிறோம். மனதில் இவை இறைவன்பூஜைக்கு உகந்ததா? என்ற சந்தேகம்எழுகிறது. ஏன்என்றால், பலஊர்களில் பறிக்கப்பெற்று, சாக்குமூட்டையில்கட்டி, பஸ்ஸில் தூக்கிபோடுகிறார்கள். அவைகளை வாங்கிவந்து ஒருஇடத்தில் கொட்டிவைக்கிறார்கள். காலில் மிதிபடுகிறது. இவைகளைப் பார்க்கும்பொழுது அன்றுபூத்த மலர்களாகப்பறித்து கொஞ்சம் செய்தாலும் புண்ணியம்கிட்டும். மேலும் ஆலயமூலபிம்பங்களின் பூஜைகளில் விலக்கப்பட்ட புஷ்பங்களுக்கு எங்கு உபயோகம் என்பதை ஆராய்ந்து, சுப்பிரபேதாகமத்தில் இருந்து சான்றுகளை எடுத்துக்கூறியிருக்கிறார். இது பாராட்டிற்குரியது. அச்சான்று இதுவேயாம்.

> "உத்ஸவாதி ஷு யாத்ராயாம் பரிவேஷக் கிரியாசு ச .
> ஸகளாநாம் அலங்காரே க்ராஹ்யோ வர்ஜ்யோபி ஸர்வதா .
> வர்ஜ்யபுஷ்பாணி க்ராஹ்யாநி மண்டபாநாம் து மண்டனே"

இவ்வாறாக அனேக புத்தகங்களிலிருந்து எடுத்துகாட்டியிருப்பது, இக்காலத்தில் என்னை போன்றவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். இந்த புத்தகம் அனைவர் கைகளிலும் இருக்க வேண்டியது. குறிப்பாக பாடசாலைகுழந்தைகள் இதனை கண்டுஉணர்ந்து பயன்பெற வேண்டும். ரொம்ப அபூர்வமான புத்தகம். இதைபோன்று மேலும் மேலும் அபூர்வமான அனேக புத்தகங்களை விரிவாக வெளிக்கொண்டுவரவேண்டும். இந்த நூலாசிரியரான சோமசேகர சிவாசார்யர் அவர்கள் நோய்நொடி இல்லாமல் ஆரோக்யமாக இருக்க வேண்டும். பல்லாண்டு காலம் வாழவேண்டும் என்று செம்பூர் முருகனின் பாதகமலங்களில் பிரார்த்திக்கின்றேன்.

நமச்சிவாய ச சிவதராய ச

ஓம் நம : பிரணதார்திக்ன! சிவாஅ சுபமோசக !
கல்யாணதாய பவதே காமதாயின் நமோஸ்து தே II

(ஸ்காந்தம்)

சுபம்

இங்ஙனம்,
சிவாகமசிரோமணி. சித்தாந்தபண்டிதர்.
சிவாகமச்செம்மல். ஆகமஅருட்செல்வர்.
பண்ணப்பட்டு N. சுவாமிநாதசிவம்.
திருசெம்பூர் ஸ்ரீ சுப்ரமண்யஸமாஜ ஆலயஅர்ச்சகர்,
மும்பை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

ஓம் ஸ்ரீ பவானீ சங்கராப்யாம் நம :

முகவுரை

ஸ்ரீராம ஸௌமித்ர ஜடாயு வேத ஷடாநநாதித்ய குஜார்ச்சிதாய.
ஸ்ரீநீல கண்டாய தயா மயாய ஸ்ரீவைத்ய நாதாய நமச் சிவாய.

சிவபெருமானை வழிபடும் மார்க்கமே சைவசமயம். இவ்வழிமுறை சிவசம்பந்த-முள்ளதால் சைவம் எனப்படும். இம்மார்க்கத்தைவிரிவாக அறிவிக்கும் சிறப்புநூல் சிவாகமம். கடல்சூழ்ந்த இம்மண்ணுலகில் இறைவனது திருவருளின்துணையால் வாழுகின்ற உயிர்-இனங்கள்யாவும், இன்பம்பெற்று இனிதுவாழ்ந்திட, முழுமுதற்கடவுளாகிய,பரமபதியான,பரமசிவன் உலகைப்படைத்தபோது முதலில்அருளிச்செய்த முழுமுதல்நூலான அருமறை எனும் ஆகமத்தின் விதிகளின்படி வீடுகளிலும், ஆலயங்களிலும் குறைவின்றி வழிபாடு நிகழச் செய்வதே சிறந்த சிவபுண்ணியச் செயலாகும். காமிகம் முதலாக வாதுளமீறாக உள்ள இருபத்திஎட்டு சைவாகமநூல்கள்மட்டுமே சித்தாந்தம் என்ற அருஞ்சிறப்புடையவைகள். இவைகளின்படி வாழ்ந்து யாவரும் இம்மைப்பயனையும், மறுமைப்பயனையும் பெறஇயலும். ஆன்மாக்களுக்கு மானுடப்பிறவி கிடைப்பதுஅரிது. இப்பிறவியை பயனுள்ளதாக ஆக்குவதற்குநமக்கு பெரிதும் உதவுவது இறைவழிபாடே. இச்சரீரம் நமக்கு கிடைத்தது சைவசமயத்தை அநுஷ்டித்து முக்தியின்பம் பெறுவதன்பொருட்டேயாகும். எனவே யாவர்க்கும் இடர்களைப் போக்கி இன்பங்களைப்பெற்றிட இறைவழிபாடு இன்றியமையாததாகிறது. பூஜை எனும் வழிபாடு ஆத்மார்த்தபூஜை, பரார்த்தபூஜை எனஇருவகைப்படும். ஆலயங்களில் மாதொருபாகனார்க்கு வழிவழியாய் அடிமைசெய்யும் சிவவேதியர் குலத்திலுதித்த ஆதிசைவர்களைக்கொண்டு, தேசத்தின் பொதுநலம்கருதி செய்யப்படவேண்டியது பரார்த்தபூஜை.

ஆத்மார்த்தபூஜையோவெனில் வீடுகளில், அவரவர் அதிகாரத்திற்குத்தக்கவாறு சமயம், விசேஷம் முதலிய சிவதீக்ஷையைப்பெற்று, குருவால் அளிக்கப்பட்ட ஆன்மார்த்த லிங்கத்தை தம் குடும்பத்தினர் நலம்கருதி வழுவாது பூஜித்தலாகும்.

நம்மால் செய்யப்படும் இறைவழிபாடானது ஸர்வகர்மாக்களைப் பூர்த்திசெய்வதாலும், ஞானத்தை அளிப்பதாலும் "பூஜை" எனப்பெயர்பெற்றதாக காரணாகமம் கூறுகிறது. இதனையே, ஜலம், புஷ்பம் முதலிய பொருட்களை மந்திரத்தொடர்புஉடையதாக, உரிய பாவனையுடன் அர்ப்பணிக்கும் செயலாவதால் "அர்ச்சனை" என்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதுவே வணக்கம் செலுத்துவதால் நமஸ்யா எனப்படுகிறது.

சிவலிங்கத்தைப் பூசிப்பதால் எல்லாதெய்வங்களையும் பூஜித்ததாகும். அக்னிஹோத்திரம் முதலிய ஸகலகர்மாக்களையும் செய்ததாகஆகும். சந்நியாசம் முதலிய ஸகலஆச்ரமங்களை அடைந்தபலனும் சிவலிங்கபூசையால் அடையப்படும். அரி, அயன், இந்திரன் முதலிய தேவர்களும் சிவபூஜையினாலேயே விரும்பியபெரும்பேற்றை அடைந்தார்கள். மோகத்தினாலோ, சோம்பலினாலோ சிவபூஜையை செய்யாமல் உணவைஉண்டால் பயங்கரமான நரகத்தை அடைவான் என்று கூறப்பட்டிருப்பதாலும், மிருகம், பறவை முதலியவைகளும் சிவபூஜையைச் செய்து நற்கதியை அடைந்திருப்பதாலும், மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் முடிந்தஅளவு சிவபூஜையைச் செய்யவேண்டும். இக்கருத்தை உபதேசிக்கும் ஆசாரியரின் அருட்பாடல் ஒன்று,

மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக் காகஅன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனை யர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அன்றே.

என்பது ஸ்ரீமத் அருள்நந்திசிவாசாரியார் அருளிச்செய்த சிவஞானசித்தியார் திருவிருத்தம். மேற்கூறிய இருவகை சிவபூஜையும், நித்தியபூஜை, நைமித்திகபூஜை, காமியபூஜை, என்று மூன்றுவகைப்படும். இத்துனை சிறப்புவாய்ந்த சிவபூஜைக்கு முக்கியமானவை காலம், திரவியம், நியமம் முதலானவை. இவற்றுள் அருச்சனைக்கு முக்கியமான முதல்பொருளாவது புஷ்பமே. இந்தபூசைக்கேற்ற மலர்களைப்பற்றிய செய்திகளை எல்லாஅன்பர்களும் நன்குஅறிந்து செவ்வனே பின்பற்றி சிறப்புமலரால் அருச்சித்து சிறப்புப்பயனைப் பெற்றிடும் பொருட்டு, எளிய தமிழில் விளக்கிக்கூறி மெய்யடியார்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திடவேண்டும் என்ற அவாமேலீட்டால் எனது அருட்குருவாகிய தருமபுரம் பண்டிதரத்ன ஸ்ரீ சிவபுரம் ஞ. சுவாமி நாதசிவாசாரியாரின் அருளாசியின் துணைக்கொண்டு, எம்மால் சிற்றறிவிற்குஎட்டிய அளவில் தொகுக்கப்பட்டுள்ளது. ஆமகங்களில் கூறப்பட்டுள்ள, பூசைக்குரிய பத்திரபுஷ்பவகைகளை, அவற்றின் சேமிப்புமுறை, பாதுகாப்புமுறை, சாத்தும்முறை, ஏற்கும்முறை, நீக்கும்முறை, ஏற்றகாலவிதிமுறை, உபயோகவிதிமுறை ஆகியவைகள் இந்நூலில் கூறப்பட்டிருப்பதால் இந்நூலிற்கு "புஷ்பார்ச்சனவிதி" என்று பெயர்சூட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சைவாகமங்-களைப் பின்பற்றியே கோயில்களில் பூசைகள் நடைபெறுவதால் மெய்யடியார்கள், சிவநேயச்- செல்வர்கள் மற்றும் சேவார்த்திகள் யாவரும் உரியசிறந்தமலர்களை அர்ப்பணித்து அருள்-பெறவும், வருங்காலத்தில் ஆலயங்களில் முப்போதும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருமேனி தீண்டித்தொண்டாற்றஉள்ள சைவாகம வித்யார்த்திகள் ஆகமத்தின் புஷ்பவிதிமுறைகளை எளிதில் அறிந்து பூசித்திடுகையில் பின்பற்றவும், தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் பலரும் எளிதில் அறியுமாறும் தமிழ்எழுத்திலேயே ஆகமநூல்களின் சான்றுகளும், பாடல்களும் அறியவும், மனப்பாடம் செய்திடவும் வசதியாக சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் நூலின்பொருளானது எளிதில் கண்டறியுமாறு செய்திகள் யாவும் பலசிறுசிறு உட்தலைப்புகளின்கீழ் பகுத்து எழுதிவிளக்கப்-பட்டுள்ளன. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்றவகையில் இதுபற்றிய பலநூல்கள் வந்துள்ள போதிலும், புஷ்பநந்தவனபராமரிப்புமுறை மறைந்துவருகிற, அங்காடிமலர்களை மட்டுமே பெரிதும்நம்பி பயன்படுத்துகிற இக்காலத்தில், சிலவகை மலர்களை மட்டுமே பூசையில் அர்ப்பணித்துவருவதால், பலவகை அரியமலர்களின் மஹிமையால் பெறத்தக்க அரும்ப-யன்களைப்பலரும் பெறஇயலாதநிலை தற்போது நிலவுவதால், சிறப்புமலர்களை நினைவு-படுத்தவும், பெயர் மற்றும் மகிமைகளை, நினைவில்கொண்டு இறைக்குஅர்ப்பணித்துப் பயன்பெற்றிட இந்நூல் உதவும் எனலாம். கோயிலின் ஒருநந்தவனத்திலேயே, நூற்றுக்கணக்கான அரியபலமருத்துவ குணாதிசயம் . நிறைந்தபலமூலிகைகள் வளர்க்கப்பட்டு, காத்துஇருப்பதுமுறை. இவ்விதம் மரம், செடி, கொடி, நீர்நிலை எனும் நால்வகையான தாவரஇனங்கள்யாவும் ஓரிடத்தில் என்றும் செழிப்புடன் பாதுகாக்கப்பட்டு வந்தமையால், அவை பூசையில் இறைவனுக்கும், இறையதனருட்பிரசாதத்தின்மூலமாக ஆலயஅடியார் பெருமக்களுக்கும், நித்தமும் பயன்பட்டு வந்தநிலை இன்று மறைந்தும், மாறியும் பலதாவரஇனம் காணஅரிதாகி வருகிறது. மேலும் பூந்தோட்டமலர்வகைகளை யார்எடுத்துக்கூறி அடையாளம் காட்டுவது? அதை எப்படி? எதற்கு? எவ்வாறு பயன்படுத்துவது? என்பதை, பொதுமக்கள் அறிவது இக்காலத்தில் சிரமமாக இருக்கிறபடியால், பூந்தோட்டத்தொண்டு நாடெங்கும் தொடர்ந்திட புதியதுநந்தவனத்தின் அமைப்புப்பயனும், நூற்றுக்கணக்கானமலர்களின் குணநலமகிமைகளும், அவற்றின்பயனும் இருமொழிகளில் பிறபெயர்களும் இந்நூலில் எமக்குஎட்டியஅளவில் தொகுத்து தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆலயங்களிலும், பூசையிலும் அவசரகாலத்தால் மறைந்துவருகிற அரியமலர்களின் மகிமையை நினைவுபடுத்தவும்,பக்தர்களிடையேசிறப்புமலரைச்சேமித்துப்பூசைக்கு அளித்திடும்வழக்கம் ஏற்படுவதன் பொருட்டும், பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இந்நூல் சிறிதளவேனும் உதவிடும் என நம்புகிறேன். மனிதவாழ்க்கைக்கு மிகமுக்கியமானது நமது தேஹஆரோக்கியமே ஆகும். அதற்கு வாழ்விலும் வழிபாட்டிலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முப்போதும், உணவுமாய், மருந்துமாய், ஊரல்நீறுமாய் இருந்து, பெரிதும்உதவிவருபவை திவ்யமான ஔஷதிகளான, இறைவருக்கான பச்சிலை மலர்வகைகளே என்பதை இந்நூலால் நன்கு அறியலாம். பொதுமக்கள் யாவரும், அவரவர் சொந்தஉடல்வருத்தம், மனவருத்தம் மற்றும் நோய்களுக்கு, எளிமையாகவும், சுலபமாகவும் இதில் கூறப்பட்டுள்ள வழிபாட்டுமலரினங்களைக்கொண்டே குணமனநலம்பெறவும் இறையருள் பெறவும் இந்நூல் ஒருவழிகாட்டியாகவும், உதவும் எனலாம். இந்நூலைக் கண்ணுறும் வாசக அன்பர்கள் இதில்உள்ள குறைகளை விலக்கிவிட்டு, குணம் கொள்ளவேண்டுகிறேன். இதற்கு அருளாசிகளை நல்கிய எனது குருமார்களின் திருவடிகளை முதலில் நல்லாசி பெறப்பணிந்து, இந்நூல் வெளிவந்திட, எனைஊக்குவித்தும், அச்சிட்டு, அளித்தும், பரிசோதித்தும், மதிப்புரை வழங்கியும், பதிப்பகப்பணிகளாற்றியும் உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எனது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலைப் பெற்றுவாசித்து யாவரும் பயனடைய கலியுகவரதனாகிய எனது இஷ்டதெய்வமான ஹரிஹர சுவாமி தசாஸ்தாவைப்பணிந்து இறையருளை சிந்தித்து வேண்டி, எல்லோரும் இன்புற்று இருக்கவாழ்த்திமகிழ்கிறேன்.

இப்படிக்கு,
ஆகமப்ரவீணர், வியாகரணசிரோமணி
வி. சோமசேகரசிவாசாரியர்.
சிவாகமப்பேராசிரியர், சென்னை - 1.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

டாக்டர் சிவஸ்ரீ தி.ஷ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

ஸ்ரீ சிவாப்யாம் நம :

புஷ்பார்ச்சனவிதி

(சைவாகமம்)

விஷயானுக்ரமணிகா

1) ஆகமார்ச்சனம்
2) பூஜாநிர்வசனம்
3) புஷ்பமாஹாத்மியம்
4) திரிவித புஷ்பாணி
5) உத்தமாதி புஷ்பத்ரைவித்யம்
6) வர்ணபேதாத் சதுர்விதம்
7) சுவேதபுஷ்பானி
8) ரக்தபுஷ்பானி
9) பீதபுஷபானி
10) நீலபுஷ்பானி
11) சியாமவர்ண பத்ரபேதம்
12) தேவதாப்ரீதிகர பத்ரபுஷ்பாநி
13) புஷ்பபேதம்
14) விருக்ஷகுசுமாநி
15) லதாகுசுமாநி
16) ஜலபுஷ்பானி
17) ஸ்தலபுஷ்பானி
18) அஷ்டபுஷ்பானி
19) காலசந்தி புஷ்பம்
20) காலசந்தி அஷ்டபுஷ்பம்
21) மத்யான்ஹ புஷ்பம்
22) மத்யான்ன அஷ்டபுஷ்பம்
23) சாயங்காலபுஷ்பம்
24) சாயங்கால அஷ்டபுஷ்பம்
25) அர்த்தராத்திரி பூஜாபுஷ்பானி
26) ஸர்வதேவதாஷ்டபுஷ்பம்
27) பூஜாகால விசேஷபுஷ்பானி
28) அஷ்டபுஷ்பார்ச்சனகாலம்
29) அஷ்டபுஷ்பார்ச்சனகிரமம்
30) மந்திரபுஷ்பாஷ்டகம்
31) வாரபுஷ்பானி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

32) மாஸபுஷ்பாணி
33) புஷ்ப பூஜனகிரமம்
34) குணத்ரய குசுமபலானி
35) நாமார்ச்சனமஹிமா
36) வர்ணபேதவைசிஷ்யம்
37) பத்ரபுஷ்பாதி தேவதை
38) புஷ்பகைங்கர்ய மகிமா
39) பத்ரபுஷ்பதாரதம்யம்
40) நீலோத்பல புஷ்பமஹிமை
41) புஷ்பாரோபனவிதி
42) ஸஞ்சித புஷ்பகாலமானம்
43) பூஜ்யபுஷ்ப தியாஜ்யவிதி
44) பூஜாபுஷ்பகிராஹ்யவிதி
45) பஞ்சபில்வார்சனவிதி
46) வாரபூஜா பத்ரானி
47) பூஜாயோக்ய பத்ரபேதம
48) வில்வவிருக்ஷ பத்ரபிரபாவம்
49) துளசீவிருக்ஷ மஹிமை
50) புஷ்பபேத அர்ச்சனாபலம்
51) புஷ்பாபாவே யோக்யாநி
52) சுவர்ணபுஷ்ப மஹிமா
53) ரத்னபுஷ்ப மஹிமா
54) நாமார்ச்சநார்ஹபலானி
55) தேவதார்ச்சாநிஷித்தகுசுமாநி
56) புஷ்பாலங்கார விசேஷபலம்
57) புஷ்பாராம நிர்மாணபலம்
58) பரமேசார்சன பத்ரபுஷ்பாணி
59) ஷட்ருது காலபுஷ்பானி
60) ஆலயார்சன புஷ்பவிசேஷம்
61) புஷ்ப ஸ்ரக்பந்தனவிதி
62) புஷ்பேஷு உத்கிருஷ்டஸமதாவிதி
63) பூஜாயாம் புஷ்பநிர்ணயக்ரமம்
64) அஷ்டபுஷ்பார்ச்சன மந்திரபேதம்
65) ஜலபுஷ்ப அமேயமஹிமை
66) பூஜனம் ஜன்மஸாபல்யசாதனம்
67) அஷ்டபுஷ்பாநாம்பேதம்
68) ஆகமபூஜாவைசிஷ்ட்யம்
69) தேவஹாராதி ஸ்தவோக்தமஹிமா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

70) அஷ்டபுஷ்பார்சனபலம்
71) புஷ்பாதீநாமாரோக்யதாயகத்வம்
72) பத்மபேத ப்ரயோஜனம்
73) ஸ்தலாப்ஜ மஹிமா
74) ஒஷதீநாம் மஹிமா
75) புஷ்பாதீநாம் நாமாந்தரபலாநி
76) பஞ்சஉபசார பூஜனவிதி

உ

ஸ்ரீ சிவாப்யாம் நம :

புஷ்பார்ச்சனவிதி

(சைவாகமம்)

மலர் வழிப்பாட்டுமுறை

நூலின் பொருளடக்கம் (தமிழில்)

1) ஆகம வழிபாடு
2) பூஜா எனும் சொல்விளக்கம்
3) பூசைப்பூவின் சிறப்புகள்
4) பூஜையில் மூவகைப்பூக்கள்
5) உத்தமாதி மூவகை மலர்கள்
6) நிறத்தால் நால்வகை மலர்கள்
7) வெள்ளைநிற மலர்வகைகள்
8) சிகப்புநிற மலர் வகைகள்
9) மஞ்சள்நிற மலர் வகைகள்
10) நீலநிற மலர் வகைகள்
11) பூசைக்கான பச்சைநிற இலைவகைகள்
12) இறையை மகிழ்விக்கும் இலைப்பூக்கள்
13) மரக்கிளைப்பூவகை
14) கோட்டுப்பூவகை
15) கொடிப்பூவகை
16) நீர்ப்பூவகை
17) நிலப்பூவகை (ஐவகைவில்வம்)
18) எட்டுநாண் மலர்வகை
19) காலசந்தி புஷ்பம்
20) காலசந்தி அஷ்டபுஷ்பம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

21) உச்சிகால புஷ்பம்
22) உச்சிகால அட்டபுஷ்பம்
23) சாயங்காலபுஷ்பம்
24) சாயங்கால அஷ்டபுஷ்பம்
25) அர்த்தராத்திரி பூசை மலர்கள்
26) ஸர்வதேவதாஷ்ட புஷ்பம்
27) பூஜாகால சிறப்புமலர்
28) அஷ்டபுஷ்பார்ச்சன காலங்கள்
29) அஷ்டபுஷ்பார்ச்சனைக்கான இடம்
30) மந்திராஷ்ட புஷ்பம்
31) கிழமைக்குரிய மலர் வகை
32) பன்னிருமாதத்திற்குரிய மலர் வகை
33) விசேஷ புஷ்பபூஜன முறை
34) முக்குண மலர்களும் பயன்களும்
35) நாமார்ச்சனையின் மகிமை
36) பூநிறத்தின் தனிச்சிறப்புப்பயன்
37) பூவிலைகளின் தெய்வாம்சம்
38) மலர்த்தொண்டின் மகிமை
39) மலர்களின் தகுதிவிவரம்
40) கருங்குவளை மலர் மகிமை
41) மலர்களை அணிவிக்கும்முறை (சாத்தும்முறை)
42) சேமித்தமலர்களின் வைப்புக்காலம்
43) மலர்களின் விலக்கத்தக்க விதிகள்
44) மலர்களின் ஏற்கத்தக்க விதிகள்
45) பஞ்சபில்வபத்ராச்சனவிதி
46) கிழமைக்குரிய பூசைஇலை
47) பூசைக்கேற்ற இலைவகைகள்
48) வில்வமரத்தின் மகிமை (பில்வபத்திரமகிமை)
49) துளசிச்செடியின் மகிமை
50) பூவகையின் பூசைப்பயன்
51) பூவின்மையில் மாற்றுப்பொருள்கள்
52) சுவர்ணபுஷ்ப சிறப்பு
53) ரத்தினபுஷ்ப சிறப்பு
54) நாமார்ச்சனைக்கேற்ற பழவகை
55) தெய்வங்களின் பூசைக்கு ஆகாத மலர்கள
56) பூப்பந்தலமைத்தலின் பெரும்பயன்
57) நந்தவனத் திருப்பணிப்பயன்
58) பரமனின் பூசையில் பத்திரபுஷ்பங் டிகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

59) பருவகாலங்களின் சிறப்பு மலர்கள்
60) ஆலயபூசையின் அரியமலர்கள்
61) பூமாலையை புனையும்முறை
62) மலர்களின் நிகர்நிலைத் தகுதி விவரம்
63) பூசையில் மலரை நீக்கி நிர்ணயிக்கும்முறை
64) அஷ்டபுஷ்பார்ச்சனையின் மந்திரவகை
65) நீர்ப்பூக்களின் நிகரிலாபெருமை
66) பிறவியும், பூசையும்
67) ஆகமபூஜையில் அஷ்டபுஷ்பவகைகள்
68) ஆகமபூஜையில் அஷ்டபுஷ்ப வகைகள்
69) திருமுறைகளில் பூசைமலரின் மகிமைக்குறிப்பு
70) அஷ்டபுஷ்பார்ச்சனையின் பயன்
71) மலர்களின் மருத்துவகுணப் பயன்பாடுகள்
72) தாமரைமலரின் தனிச்சிறப்பு
73) ரோஜாமலரின் சிறப்பு
74) மூலிகைகளின் மஹிமை
75) மலர்களின் மறுபெயரும், மகத்துவபயனும்
76) பூசையில் ஐவகை உபசரிப்பு முறை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம் ஸ்ரீ சிவாப்யாம்நம:
புஷ்பார்ச்சனவிதி
(சைவாகமம்)
(மலர் வழிபாட்டு முறை)

யச் சிவோ நாமரூபாப்யாம் யா தேவீ ஸர்வ மங்களா.
தயோஸ் ஸம் ஸ்மரணாத் பும்ஸாம் ஸர்வதோ ஜயமங்களம்.

ஓம்நம: பிரணவார்த்தாய சுத்தஞானைக மூர்த்தயே
நிர்மலாய பிரசாந்தாய தக்ஷிணாமூர்த்தயே நம:

ஸ்ரீராம ஸௌமித்ர ஜடாயு வேத ஷடாநநாதித்ய குஜார்ச்சிதாய.
ஸ்ரீநீலகண்டாய தயாமயாய ஸ்ரீவைத்யநாதாய நமச்சிவாய.

சிவபரம்பொருளின் அருட்கருணையினால் படைக்கப்பட்ட இவ்வுலகில், "சைவத்தின் மேலான சமயம் வேறில்லை" என்ற சான்றோர் வாக்கிற்குஇணங்க, சைவசமயமே தலையாய சமயமாகும். உலகமக்களை இறைநிலைக்கு உயர்த்தவல்லது நமதுசமயம். இறைநிலையை நாம்அடைய வழிபாடு எனும் முறைமையை வேதம், சாஸ்திரம், புராணம் இவைகள் உபதேசித்து வழிகாட்டுகின்றன. இவ்வழிபாட்டுமுறையை இங்கு இனிகாண்போம். ஆகம-சாஸ்திரமானது, இறைவனை நாம் போற்றிவணங்கிடும்பொழுது, இறைவனாலேயேபடைக்கப்-பட்ட நல்லறம்கூறும் ஞானநூல் ஆகும். "தர்மம்சர" என்பது வேதத்தின் கட்டளை. அறம் செய விரும்பு என்பது ஔவையின் வாய்மொழி. சிவபூசை செய்தலே நல்லறம். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவை வாக்கு. பிறவி எடுத்தது வழிபாட்டை செய்வதற்கே ஆகும். இறைவழிபாடே நமது பிறவியை இனி பிறவாதவாறு அறுக்கும்.

ஆகமவழிபாடு .

திக் பஸ்ம ரஹிதம் பாலம், திக் கிராமம் அசிவாலயம்.
திக் அனீசார்ச்சநம் ஜன்ம, திக் வித்யா மசிவாச்ரயாம்.

எனும் ஸ்மிருதிவாக்கியப்படி, நீறில்லாத நெற்றியும், கோயில் இல்லாத ஊரும், அரனை வழிபடாத பிறவியும், சிவனை சாராத, சிவனை அறியஉதவாத கல்வியும் வீண் என்பதை அறியலாம். திருத்தொண்டர்புராணத்தில் சேக்கிழார் இறைவன் விரும்புவது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூசை என்பதையும், அதனைச் செய்திட உமாதேவியே ஆகமத்தை கேட்டறிந்து இறைவனை அதன்படி அருச்சனை செய்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை எனவுரைத்தருள
அண்ணலார்தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயினள் பெருந்தவக் கொழுந்து.

என்றும், மேலும் சேக்கிழார்சுவாமிகள் முப்போதும் திருமேனிதீண்டுவார் புராணத்தில், தேவியே விரும்பி ஆகமப்படி சிவபெருமானைப் பூசித்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற் சைவராம் முனிவர்.

தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மாற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன
பெருந்தகையார் குலப்பெருமையாம் புகழும் பெற்றியதோ.

மேலும், சிவனார் உமைக்கு உபதேசித்ததையும், ஆதிசைவர் ஆகமத்தாலருச்சிப்பதையும், குறிப்பிட்டு,

இங்கு நாத் நீ மொழிந்த ஆகமத்தின்
இயல்பினால் உனை அர்ச்சனை புரியப்
போங்குகின்றதென் ஆசை என்றிறைஞ்சி
போகமார்த்த பூண்முலையினாள் போற்ற.

என்றும் கூறியுள்ளது ஆகமவழிபாட்டை சிறப்பித்து உணர்த்துகிறது.

பூஜா எனும் சொல்விளக்கம்.

அருச்சனை என்பது பூஜையின் ஒரு அங்கமான அன்பின் வெளிப்பாடு. "அர்ஹ பூஜாயாம்" என்பதாக "அர்ஹ" எனும் சமஸ்கிருதமொழியின் வினையிலிருந்து, பூஜை எனும் பொருளில் பூஜா எனும் இச்சொல் உருவானது. இச்சொல்லிற்கு சிறப்பான தத்துவார்த்தத்தை ஆகமம் கூறுகிறது.

பூர்யந்தே ஸர்வகர்மாணி ஜாயதே ஞான மாத்மநி.
பூரணாத் ஞானதாத்ருத்வாத், பூஜாசப்த இஹோச்யதே
(காரணாகமம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதன்பொருள் ஆத்மாக்களின் ஆகாமியம் சஞ்சிதம் பிராப்தம் எனப்படுகிற பிறவிக்கு காரணமான எல்லாவினைகளையும் நிறைவடையச்செய்து, உயிருக்கு ஞானத்தை விளைவிப்பதால், இச்செயல் பூஜை எனப்படுவதாக காரணாகமம் தெரிவிக்கிறது. அந்த மெய்ஞானத்தை, பரசிவத்தைப் பூஜிப்பதால் மட்டுமே அடையமுடியும். அந்த சிவஞானத்தால் மட்டுமே பிறவாத பேரின்ப நிலையெனும் முக்தியை அடையஇயலும். "சங்கராத் ஞானம் அன்விச்சேத்" என்பதாலும், "ஈசானஸ் ஸர்வவித்யாநாம் ஈஸ்வரர்" என்று வேதம் கூறுவதாலும், பரமன் ஒருவரே மெய்ஞானத்தை அருள்பவர் என்பதை அறியமுடிகிறது.

பூஜயா விபுலம் ராஜ்யம், அக்னிகார்யனே ஸம்பதம்.
ஜபேந பாப ஸம்சுத்திம், ஞானம் தியானேந சாச்னுதே.
கிந்த்வா தேஹா வஸாநந்து, யப் பூஜயதி பக்தித :.
ஸ சிவஸ் ஸர்வகிருத் யஜ்வா ஜீவன்முக்தஸ் ஸ உச்யதே.

(விமலாகமம்)

மேலும் பூஜையினால் விசாலமான ராஜ்யத்தையும், அக்னிகாரியத்தினால் ஐஸ்வர்யத்தையும், ஜபத்தினால் பாபத்தினின்று விடுபட்டு, புனிதத்தையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைவர். மேலும், எவர் இறுதிவரை தேகம்இருக்கும்வரை, சிவபூஜையை, பக்திசிரத்தையோடு இடைவிடாது செய்துவருகிறாரோ, அவரே சிவர், அவரே செய்யவேண்டிய எல்லாவற்றையும் செய்துமுடித்தவர். அவரே எல்லாயாகத்தையும் செய்துமுடித்தவர், அவரே உயிர் வாழ்ந்து கொண்டே முக்தராக விளங்குபவர், என்று விமலாகமம் பூஜையின் பயனை விளக்கிஉள்ளது.

பூசைப்பூவின் சிறப்புகள் .

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்றும், "போதொடு நீர் சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்" என்று அப்பரும், "மலரால் உனை நாட்பணிந்தேத்த" என ஞானசம்பந்தரும், "ஜலம் பூவொடு தூப மறந்தரியேன்" என்றும், "நாளும் பூவொடு நீர்சுமக்கும் நின்அடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே" என்றும், "பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை" என்றும், "கொன்றைவார்சடைமேல்" என்றும், "செழுநீர்-புனர் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே" என்றும், திருநாவுக்கரசு சுவாமி களும், "பூவார் மலர் கொண்டு அடியார்தொழுவார் புகழ்வார் வானோர்கள்" என்று மலர்தூவித் தொழுவதைத் திருஞானசம்பந்தரும், தேவாரங்களிலும், பலரால் திருமுறைக-ளிலும், "யாவர்க்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை" எனும் திருமூலரின் திருமந்திர மொழியாலும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மலரணிந்துள்ள பரமனை மலரால் பணிந்தேத்தும் முறையினைக்கூறும் பல இறையருளாளர்களின் அருள்மொழிகளாலும், புஷ்பமும், பத்திரமும் சிவபூசைக்கு மிகவும் இன்றியமையாததாகி, பூஜையில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதை நன்கு உணரலாம். மேலும் திருநாவுக்கரசப்பெருமான் "கைகாள் கூப்பித் தொழீர், கடிமாமலர் தூ வி நின்று பைவாய்ப் பாம்பரையார்த்த, பரமனைக் கைகாள் கூப்பித் தொழீர்" என்றும், "ஆக்கையாற் பயனென் - அரன், கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றி யென்னாத இவ்ஆக்கையாற் பயனென்" என்றும் தேவாரத்தில் கூறுவதால், நமது கைகளால் மலர்தூ வியும், தொண்டாற்றியும் இறைவனைத்தொழுது, பணிந்தும், பூசித்துப் பயன்பெற வேண்டும் என்பதையும் நன்கு உணரலாம்.

பூசையில் மூவகைபூக்கள்.

ஆகமபூசையில் புஷ்பமானது 1. மந்திராஷ்ட புஷ்பம், 2. புஷ்பாஷ்ட புஷ்பம், 3. பாவநாஷ்ட புஷ்பம் என்று மூன்றுவகையாக சொல்லப்படுகிறது. மேலும்

ஆத்மா ராமோத்பவைர் புஷ்பை ரதவாவன ஸம்பவை:ஐ
திரவ்யக் கிரீதைர் ப்ரசூநாத்யைர் அர்ச்சயேத் அன்யதா நச||

(காமிகம்)

என்பதால் பூஜைக்கு பூக்களையும், பத்ரங்களையும் பெறுவது மூன்றுவகைமட்டுமே என்றறியவும்.

உத்தமாதி மூவகை மலர்கள்.

உத்தமம் ஆராமபுஷ்பாணி மத்யமம் வனஸம்பவம்.
அதமம் விக்ரயம் சைவ, யாசகம், நிஷ்பலம் பவேத்.

(காமிகம்)

என்பதால் இவை உத்தமம் மத்யமம் அதமம் என்று மூவகை என்றும் அறியலாம். அதாவது தனது வீட்டுநந்தவனத்திலிருந்து சேமித்தமலர்கள் (உயர்தர பயனளிப்பவை) உத்தமம் என்றும், பொதுஇடமான காட்டுப்பகுதியிலிருந்து சேமித்தமலர்கள் (நடுத்தர பயன்அளிப்பவை) மத்யமம் என்றும், வியாபாரிகளிடமிருந்து விலைகொடுத்து வாங்கியமலர்கள் (சாதாரண, கடைநிலைப்-பயன்தருபவை) அதமம் என்றும், தரமற்றதும், பிறரிடம் யாசித்துப்பெற்றதுமான மலர்கள், நிஷ்பலம் (பயன்தராதவை) என்றும், ஆகமநூல்கள் கூறுகின்றன. வீட்டுப்பூசைக்கு தன்வீட்டு பூந்தோட்டத்திலும், கோயில்பூசைக்கு, கோயிலின் நந்தவனத்திலும், இருந்து மலர்களை பெறுவதே விதிமுறையாகும். இதனை,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உத்தமந் தனக்கென வுற்ற நந்தனம்
மத்திமங் காட்டினில் மலர்ந்த பூவெலா
மித்தலத் தொருவன்வைத் திட்ட சூழலி
லத்தனை மலர்களு மதம மாகுமே.

எனும் புஷ்பவிதிப்பாடல் மூலமாகவும் அறியலாம்.

நிறத்தால் நால்வகை மலர்கள் .

சிவாகமங்கள் யாவும் பூசைக்குரிய மலர்களை நிறங்களின் அடிப்படையில் நால்வகையாகப் பகுத்து விளக்கிக்கூறியுள்ளன.

தவளோ(அ)ருண கிருஷ்ணாநி ஸாத்விகாதி குணத்ரயம்.
ஸாத்விகம் சுவேதபுஷ்பம்து ரக்தபுஷ்பம்து ராஜஸம்.
தாமஸம் கிருஷ்ணபுஷ்பம்து பீதபுஷ்பம்து சோபனம்
விசேஷாத் ராஜஸம்புஷ்பம் ஸபத்ராணாம்ச தாரயேத்.

(மகுடாகமம்)

இதன்படி வெள்ளைநிறமலர்கள் சாத்விககுண மலர்கள் என்றும், சிகப்புநிறமலர்கள் ராஜஸகுண மலர்கள் என்றும், நீலநிறமலர்கள் நீலோத்பலம் நீங்கலாக மற்றவை, தமோகுணமலர்கள் என்றும், மஞ்சள்நிறமலர்கள் ஸாத்விக, ராஜஸ இருகுணங்களும் கலந்த மிச்ரகபுஷ்பங்கள் என்றும் ஆகமங்கள் தெரிவிக்கின்றன. இனி பூசைக்குஏற்றவைகளை எளிதில் பகுத்தறிந்திட இம்மலர்-களை மூலசைவாகமங்களின்படி நிறத்தினடிப்படையில் பகுத்து அறிவோம். அவற்றைக்கூறும் மூலாகம சான்றுகள்.

வெள்ளைநிற மலர்வகைகள். (வெண்ணிறப்பூக்கள்)

சுவேதபத்மம் ச புன்னாகம் சங்கபுஷ்பம்ச மல்லிகா|
நந்தியாவர்தம் சிரியாவர்த்தம் மந்தாரம் பகுகர்ணிகா|
த்விகர்ணீ குரவம் ஜாதீ லக்ஷ்மீச்ச வகுளம் ததா|
சுவேதார்க்கம் மாலதீ த்ரோணம் அதஸீ சுவேதலோத்ரகம் |
விஷகா ஸீஸகுசுமம் பத்ராச மஹ்தீச ஸா|
வியாக்ரீ சம்பகபுஷ்பம்ச கரவீரம் அசோகஜம் |
ஹாலிகா சதபத்ரம்ச உத்தமம் குசபுஷ்பகம் |
ஏதாநி சுவேதபுஷ்பாணி முக்யாமுக்யத்வ பாஞ்ஜிஹிஜ

(பூர்வகாமிகாகமம்)

மேற்கண்டவாறு காமிகாகமம் 29வகையான வெண்ணிறப்பூக்களைத் தொகுத்துக்கூறியுள்ளது. அவை 1வெண்தாமரை, 2புன்னைப்பூ, 3சங்குப்பூ, 4மல்லிகை, 5நந்தியாவட்டம், 6சிரியாவட்டம் (பலஅடுக்குநந்தியாவட்டம்), 7வெள்ளைமந்தாரைப்பூ, 8பகுகர்ணிகைப்பூ (பலஇதழ்சாமந்திப்பூ), 9த்விகர்ணிகைப்பூ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(இருஇலைத்தாமரை), 10மருதாணிப்பூ (குரவம்), 11ஜாதிப்பூ, 12லக்ஷ்மீ (வில்வப்பூ), 13மகிழம்பூ (வகுளம்) 14வெள்ளைஎருக்கம்பூ, 15மாலதீ (குண்டுமல்லி), 16துரோணம் (வெண்தும்பைப்பூ), 17அதஸீ (நாணல்பூ), 18வெள்ளலோத்திப்பூ (சுவேதலோத்ரகம்), 19விஷகாபூ (மரஅரளிப்பூ), 20ஸீஸகாபூ (ஈயப்பூ), 21பத்ரா (பீளைப்பூண்டுப்பூ),22மஹதீ, 23வியாக்ரீ, 24சம்பகம், 25கரவீரம் (வெள்ளைஅலரிப்பூ), 26அசோகம், 27ஹாலிகா, 28சதபத்ரம், 29குசபுஷ்பம் ஆகியவை வெண்ணிறப்பூக்கள். இவைகளுள் சிலவகையும் வெண்காக்கணம், கிரிகர்ணிகை முதலிய வேறுசிலவகையும் பிறஆகமநூல்களில் கூறப்பட்டுஉள்ளன. ஆகமங்கள் வெள்ளைநிறபூக்களை மத்யான்ஹபூஜைக்கு உகந்ததாகவும் தெரிவிக்கின்றன.

சிகப்புநிற மலர்வகைகள். (செந்நிறபூக்கள்)

ரக்தபத்மம் பலாசம்ச ரக்தோத்பலம்ச பாடலீ ।
மௌஸலீ சைவ துத்தூரம் பிருஹதீ கரவீரஜம் ।
வியாக்ரீச ரக்தமந்தாரம் பட்டிகா வைஜிகா ததா ।
முனிபுஷ்பம்ச தத்ரக்தம் ரக்தான்யேதாநி நிர்திசேத் ।

(பூர்வகாமிகாகமம்)

மேற்கண்ட காமிகாகம வசனப்படி ராஜஸ குணமுள்ள சிகப்புநிறபூக்கள் தொகுத்து கூறப்பட்டு உள்ளவை. முறையே 1ரக்தபத்மம், (செந்தாமரை), 2பலாசம், (பொரசம்பூ), 3ரக்தோத்பலம், (செங்கழுநீர்ப்பூ), 4பாடலீ, (செம்பாதிரிப்பூ), (ஸ்தலபாடலீ - ரோஜாப்பூ), 5மௌஸலீ, (முக்குப்பூ), 6துத்தூரம், (சிகப்புநிறபொன்ஊமத்தம்பூ), 7பிருஹதீ (கண்டங்கத்தரிப்பூ), 8கரவீரம், (சிகப்பு அலரிப்பூ), 9வியாக்ரீ, (புலிநகக்கொன்றைசெடிப்பூ), 10ரக்தமந்தாரம், (செம்மந்தாரம்பூ), 11பட்டிகா, (செம்பட்டிவிருக்ஷிப்பூ), 12வைஜிகா, 13முனிபுஷ்பம் ஆகியனவாகும். சுப்ரபேதாகமம் செந்சந்தனமலரையும், தீப்தாகமம் திலம் என்று சிகப்புஎள்ளுப்பூவையும் குறிப்பிட்டுள்ளது. தீப்தாகமம் சிகப்புநிறமலர்கள் யாவும் காலைநேரபூஜைக்கு உகந்தபுஷ்பங்களாக தெரிவிக்கிறது.

மஞ்சள்நிற மலர்வகைகள். (பொன்நிறப்பூக்கள்)

சோணக்யம் கர்ணிகாரம் ச சம்பகம் ஹேமதுத்துரம்
ஆரக்வதம்ச கோரண்டம் சைரீஷம் கிரிகர்ணிகா
ஏதாநி பீதபுஷ்பாணி கிருஷ்ணே நீலோத்பலம் வரம்
புஷ்பாணி பீதவர்ணாநி ஸத்வராஜஸ மிச்ரிதான்.

(சுப்ரபேதாகமம்)

மேற்கண்ட சுப்ரபேதாகம வசனங்களால், ஸத்துவகுணமும், ராஜஸ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குணமும் கலந்து விளங்கிடும் மஞ்சள் நிறமுள்ள பூசைக்கேற்ற மலர்களாக தொகுத்துக்கூறப்பட்டுள்ளவைகள் முறையே [1]சோணக்யம், (சோணப்பூ) (ஸரளமரப்பூ), [2]கர்ணகாரம், (கோங்குப்பூ) வங்கப்பூ முள்ளுமுருங்கைப்பூ), [3]சம்பகம், (செண்பகப்பூ), [4]ஹேமதுத்தூரம், (பொன்னூமத்தைப்பூ), [5] ஆரக்வதம், (சரக்கொன்றைமரப்பூ) (சம்யாகம்), [6]கோரண்டம், (மஞ்சள்நிற ஒருவகைமரப்பூ), [7]சைரீஷம், (சிரீஷ ம்வாகை), [8]கிரிகர்ணிகா, (மலையடிசாமந்தி) ஆகியவை மஞ்சள்நிற மலர்- களாகும். இவற்றை பீதபுஷ்பம், மிச்ரகபுஷ்பம் என்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் சிலவற்றில் சரளமரப்பூ, ஜெவிந்திப்பூ, சாமந்திப்பூ,எலுமிச்சம்பூ (கர்ணிகாரம்),தாழம்பூ (கேதகீ),இருவாக்ஷிப்பூ, தங்கம்பட்டிப்பூ, மரஅரளிப்பூ, கனகம் மஞ்சள்கனகாம்பரம் முதலியவைகளும் பலநூல்களில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. மேலும் சில மலர்கள் தேவதைகளுக்கு உரியவையாக அந்தந்த தேவதையின் பூசையைக்கூறும் பகுதியில் சிறப்புமலர்களாய் சிலவும் கூறப்படுகின்றன. மரம், செடி, கொடிகளிலிருந்தும், மலைப்பகுதி, நீர்ப்பகுதிகளிலிருந்தும் கிடைப்பவை சிறப்புமிக்க மலர்களாகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. மஞ்சள்நிறமலர்கள் எக்காலத்திற்கும் ஏற்றவை.

நீலநிற மலர்வகைகள். (கருநீலப்பூக்கள்)

கிருஷ்ணான் நீலோத்பலா தன்யான் தாமஸான் பரிவர்ஜயேத். என்றும், புஷ்பஜாதிஷு ஸர்வேஷு வரம் நீலோத்பலம் சுமம், என்றும் சிவாகமங்கள் கூறுகின்றன. இதனால் சிவபூசைக்கு நீலநிறமாயினும் சிறந்த கருநெய்தல்மலர் என்றும், கருங்குவளைப்பூ என்றும் கூறப்படுகிற நீலோத்பலமலர் ஒன்று மட்டுமே மிகச்சிறந்ததாய், இணையற்றதாய் அறியத்தக்கதது. இதுவே இந்தீவரம் என்றும், கல்ஹாரம் என்றும். பெயருடையதாகும். இது தவிர மற்றய நீலநிறமர்கள் யாவும் தாமஸகுணமலர்ஆவதால் கருமைநிறத்திருமேனிஉடையதும், உக்ரவடிவமும், கொடியசெயலும் கொண்டதுமான, சம்ஹாரபைரவர், சாஸ்தா, சநீச்வரர், யமன், காளீ போன்ற தமோகுணரூபத்தில்உள்ள மூர்த்தங்களுக்கு கல்ஹாரம் நீலநிறஆம்பல்பூ, கிருஷ்ணதுத்தூ ரம், (கருஊமத்தை), கருங்காக்கணம், தமாலபுஷ்பம், சங்குப்பூ முதலியன சேர்த்துக்கொள்ளப்பட்டு உள்ளன என்றறியவும். சிவனுக்கு நீலநிறப்பூவில் நீலோத்பலம் ஒன்று மட்டுமே ஏற்றதாகும், மற்றவைகூடாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூசைக்கான பச்சைநிற இலைவகைகள் .
இறைவர்கான பச்சிலைகள்

பில்வபத்ரம் தபஸ்வீச மஹாபத்ராச தாதகீ.
அபாமார்க்கம் குசா: தூர்வா: பஞ்சபில்வா: சமீததா.
துளசீ சம்பகோ தாந்த: ஜம்பூகோ நாகதந்திகா.
ஏகபத்ராரவிந்தம்ச விஷ்ணுக்ராந்திஸ் ததைவச.
ஸஹகாராஸ் ததா கிருஷ்ண துளசீ கந்தபத்ரிகா.
ஏவமாதீநி பத்ராணி புத்ரவிருத்தி கராணிச.
உசீரஹ்ரீ பேரதூதி குலாநி சுபதாநி ஹி.

(பூர்வகாமிகாகமம்)

பில்வாபாமார்க்ககச் சூதோ தமநோ மருவோர்ஜுந : .
நந்தியாவர்தச்ச சம்யர்க்கஸ் திலகஸ் தலமல்லிகா.
சௌகந்திகா ஸநாகஸ்தி ஸிந்து சேபாளிகார்சுநை: .
தூர்வாதௌ சிகாங்கோல கௌரீ சுரபிகா சமீ.
ஜம்பூ குசாக்ர இத்யேதே ப்ரசஸ்தா: பத்ரஸங்கிரஹா : .

(ஸகாலாகம ஸங்கிரஹம்)

மேற்கண்ட சிவாகமவசனங்களின்படி பூக்கள் கிடைக்காதபோதும், புத்திரப்பேறு முதலிய விருப்பப்பயனைப் பெறுவதற்கு விரும்புகிறபோதும், பூசையில் பூவைப்போன்று பசுமையாய், புதிதாய் ஏற்ற இலைவகைகளான, இறைவர்கான பச்சிலைமூலிகைகளான, பத்திரவகைகளை காமிகாகமப்படி கூறப்படுகிறது. அவை முறையே, 1பில்வஇலை. (ஸ்ரீபர்ணம்) 2தபஸ்வீபத்ரம். (தமனமருக்கொழுந்து), 3மஹாபத்ரா. (பெரும்பூளை) (பூனைப்பூண்டுஇலைபூ), 4தாதகீ. (ஆத்திஇலை), 5அபாமார்க்கம். (நாயுருவிஇலை), 6குசாக்ரம். (தர்பைஇலைநுணி), 7தூர்வாக்ரம். (அருகம்புல்முனை 5இதழ்கள்மட்டில்), பஞ்சபில்வங்களான. 8 குந்தபத்ரம். (கொடிமுல்லைஇலை) 9சுகபத்ரம். (கிளுவைமரஇலை), 10நிர்குண்டி. (வெண்நொச்சிஇலை), 11கபித்தம். (விளாமரஇலை), 12சூலபத்திரம். (மூவிதழ்இலை), 13சமீபத்ரம். (வன்னிமரஇலை), 14துளசீ (துழாய்வெண்துளசி இதழ்), 15சந்திரபம். (சந்திரகாந்தி), 16தாந்தம். (மருவுஇலை), 17ஜம்புகம். (நாவல்மரஇலை), 18நாகநந்தீ. (நாகலிங்கமரஇலை),19ஏகபத்ராரவிந்தம். (ஓரிலைத்தாமரைஇலை), 20விஷ்ணுகிராந்தி விஷ்ணுகாந்திஇலை, 21ஸஹகாரம் / சூதம். (மாவிலை), 22கிருஷ்ணதுளசீ. (கருந்துளசி), 23கந்தபத்ரிகா. (சந்தனமரஇலை) (கருவேப்பிலை) முதலியஆகும். இவ்வசனத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஏலமாதீநி" என்ற காமிகமவசனத்தால் அதாவது இலை முதலானவை என்று கூறப்படுவதால் மேலும் பலவகைவிடுபட்டுள்ள, உரியசிறப்புஇலைவகைகளும்ஏற்கத்தக்கதாகிறது.இதன்படிருத்ரபர்ணீ (விபூதிபச்சிலை), ஸஹதேவீ இலை, பத்ரீ. (பூளைப்பூண்டுஇலை), மஹாபத்ரீ. (பெரும்பூளைப்-பூண்டு), துரோணம். (தும்பைஇலை) இவை சுப்ரபேதம் மற்றும் தீப்தாகமத்தில் விடுபட்டவை-களாக கூறப்பட்டுள்ளது. மேலும் ஆகமதொகுப்பநூலில் மேலும் பலவகை பத்திரங்களும் எடுத்து கூறப்படுகின்றன. அதன்படி அர்சுனபத்ரம். (மருதமரஇலை) நந்தியாவர்த்தம். (நந்தியாவட்ட இலை), அர்க்கபத்ரம். (வெள்ளெருக்கம்இலை), ஸ்தலமல்லிகை. (செடிகுண்டுமல்லிஇலை), சௌகந்திகா.(நறுமணம்மிக்ககதிர்பச்சை),நாகஸ்தி.(யானைவணங்கி) கிருதாஞ்சல. (கஜகர்ணிகா), பிந்து. (வட்டிவடிவஓர்வகைஇலை), அங்கோலபத்ரம். (கௌரீமத்ரம்), சுரபிபத்ரம். (மாசீபத்ரம்), மாதுலிங்கபத்ரம். (மாதுளை), பத்மபத்தரம். (தாமரை), கரவீரபத்ரம். (அலரிஇலை), குரபகபத்ரம். (மருதாணி), பிருகதீ. (கையாந்தகரைஇலை / கண்டங்கத்திரி), ஸ்தலாப்ஜபத்ரம். (ரோஜாஇலை), வாருணம். (மாவிலங்கம்இலை), மந்தாரபத்ரம். (மந்தாரைமரஇலை), வகுளபத்ரம். (மகிழமரஇலை), பனஸபத்ரம். (பலாமரஇலை), கதளீபத்ரம். (வாழைஇலை), கல்ஹாரபத்ரம். (கருநெய்தல்இலை), நாகவல்லி. (வெற்றிலை), முனிபத்ரம். (அரசந்தளிர்), தாத்ரீபத்ரம். (நெல்லிஇலை), பதரீபத்ரம். (இலந்தைஇலை), பீஜாபூரபத்ரம். (கொய்யாமரஇலை), சந்தனம். (சந்தனமரஇலை), ஜம்பீரபத்ரம். (எலுமிச்சைஇலை), நாரங்கபத்ரம். (நாரத்தைஇலை), நுணாஇலை, மாவிலங்கஇலை, குருந்தைஇலை, லகுபத்ரம் - சமுத்திராபச்சை, சிவகரந்தைஇலை கண்டங்கத்திரிஇலை, சீதேவியார் செங்கழுநீர்இலை, ஹ்ரீபேரம் அல்லது அமிருணாளம் - கருமைநிற மணமிக்க வெட்டிவேர் (பூமூலம்), உசீரம் - மஞ்சள்நிறமணமிக்க விளாமிச்சம்வேர், சாரிபம் - நன்னாரிவேர் பில்வமூலம் - வில்வவேர், பிருங்கராஜம் - கையாந்தகரை, துத்தூரபத்ரம் - பொன்னூமத்தைஇலை, சாம்பேயபத்ரம் - செண்பகஇலை, மாலதீபத்ரம் - மல்லிகைஇலை, தைவிகபத்ரம் - தேவதாருமரஇலை முதலியனவும் ஆங்காகங்கே கூறப்பட்டுஉள்ளன. சிலநூல்கள் பூவகை கிடைக்காதபோது அந்தகிடைக்காதவகையின் இலையை மாற்றாக கைக்கொள்ளுமாறு கூறிஉள்ளன. இதனால் பூசைக்கு கூறியுள்ள பூவகை, கனிவகை, தானிய-வகைகளின் இலைகளை ஏற்கலாம். உரிய பத்திரபுஷ்பங்களை தீக்குண்டத்தில் ஹோமம் செய்வதாலும் போகமோக்ஷம் கிட்டும். என்று பொதுவாக அறியமுடிகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இறையை மகிழ்விக்கும் இலைப்பூக்கள்.

உத்தரகாரணாகமத்தில் நந்தவன அமைப்புவிதியில் மேலும் பலவகை பத்திரபுஷ்ப வகைகளும் கூறப்பட்டுஉள்ளன. இவ்விதமாக புஷ்பபேதங்களாலும், பத்ரபேதங்களாலும் மேலும் பலவகையாலும் ஆயிரக்கணக்கானவைகளால் பூசை செய்யப்படுவதால் சிவப்ரீதி செய்யப்-பட்டதாகும். ஞானமளிக்கும் அருகம்புல்லால் பூசித்து உடல்மறைவிற்குப்பின் மோக்ஷத்தை அடைவார்கள். இவற்றால் அறியாமையால் சிவனை பூசிப்பவனும், இறந்தபின் அரசபதவியை அடைவான் என்கிறது உத்தரகாரணாகமம். இதனைக்கூறும் ஆகமசான்று,

புஷ்பபேதைர் பத்ரபேதைர் ஏதாந்யந்யாநி ஸர்வச :
ஸஹஸ்ரஸங்கியயாசைவ சிவப்ரீதிகரம் பவேத்.
ஞானதூர்வாம் ஸமப்யர்ச்ய தேஹாந்தே மோக்ஷமாப்னுயாத்
(உத்தரகாரணாகமம்)

வேதமும் அருகம்புல்லின் மகிமையை (தூர்வா என்பது) பற்றி மிகவும் சிறப்பித்துக்கூறுகிறது. அது, பிக்ஷாடனமூர்த்தி தனதுகையில் அருகம்புல்லைஏந்தி பசுவுக்கு உணர்த்துகிறார்.

காண்டாத் காண்டாத் ப்ரரோஹந்தீ பருஷப்பருஷப்பரி.
ஏவாநோ தூர்வேப்ரதனு சகஸ்ரேண சதேநச.
யாசதேந ப்ரதனோஷி ஸஹஸ்ரேண விரோஹஸி /
தஸ்யாத்தே தேவீஷ்டகே விதேம ஹிவிஷா வயம்.
(யசுர்வேதஉபநிஷதம்)

மகுடாகமம் பத்ரபுஷ்பவகைகளைக் கூறியபின்பு அனைத்து பத்திரவகைகளுக்குள்மிகஉயர்-தரமாகபூசைக்குஏற்றுகையாள்வதற்கு பில்வம் துளசி ஆகிய இரண்டையும் சிறப்பாககூறுகிறது.

ஏவம் பத்ராணி முக்யாநி கீர்த்திதாநி விசேஷத:
ஸர்வபத்ரேஷு ஸங்கிராஹ்யம் பில்வம்ச துளசீதுவயம்.
(மகுடாகமம்)

இவற்றின் மஹிமைகளையும், வகைகளையும், சிறப்புப்பயன்களையும் இனி காண்போம்.

புஷ்பவகைகள்.

புஷ்பங்கள் பொதுவாக 1. கோட்டுப்பூ, 2. கொடிப்பூ, 3. நீர்ப்பூ, 4. நிலப்பூ என்று நான்கு வகையாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

I. கோட்டுப்பூ வகை. (மரக்கிளைப்பூக்களும், இலைகளும்)

வன்னி பலா வெலுமிச்சை நாரத்தை கோங்கு
மந்தாரை யூமத்தை மாவிலிங்கை நொச்சி
பன்னி யகில் சந்து மகிழ் மாதுளைமா வசோகு
பாதிரிவெள் ளெருக் கிலந்தை பலாசு நுணா நறவம்
புன்னை விளா மருது கொன்றை நெல்லிகுராச் செருந்தி
பொன்னினா விரைக் கிளுவை குருந்து வில்வ
நாவன்மன்னு தாதகி குளஞ்சி யலரிவெட்சி பவள
மல்லிகை சண்பக ஞாழல் கோட்டுப்பூ வகையே.

இப்பாடலில் மரக்கிளையில் பூக்கின்ற நாற்பதுவகைப் பூக்களைக் குறிப்பிடுகிறார். இங்கு பூ என்று பொதுவாகக்கூறினும் அவ்வகையில் முற்றியஇலைகளும் இதில் சேரும். வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, நொச்சி, பன்னீர், மருது, அகில், சந்தனம், மா, இலந்தை, நுணா, விளா, மாவிலங்கை, நெல்லி, குருந்தம், கிளுவை, வில்வம், நாவல், இவையெல்லாம் பத்திரங்களே ஆகும். கோங்கு, நாகலிங்கம், புன்னை, மந்தாரை, பொன்ஊமத்தை, மகிழம்பூ, மாதுளம்பூ, அசோகம். பாதிரிப்பூ, வெள்ளெருக்கு, பலாசு என்ற முருக்கு, நறவம் என்ற குங்குமம், பொன்னா- விரை, தாதகி என்ற ஆத்தி, சரக்கொன்றை, குளஞ்சி என்ற கிச்சிலி, நாரத்தை, ஞாழல் என்ற புலிநகக்கொன்றை, அலரி, வெட்சி, பவழமல்லிகை, சண்பகம், ஞாழல் இவையெல்லாம் கோட்டுப் பூக்களாகும்.

2. கொடிப்பூவகை. (கொடிவகை மலர்களும், இலைகளும்)

மருவாருங் காந்தள் காட்டு மல்லிகை முல்லை மௌவல்
தருவார் வெற்றிலை யேதாளி கருமுகை கருங்காக் கொன்றை
முருகாரும் வெண்காக் கொன்றை குருக்கத்தி முதலாயுள்ள
விருவாட்சி கொகுடி பிச்சி யிவையெலாங் கொடிப்பூவாமே.

இப்பாடலில், மணம்நிறைந்த காந்தள், காட்டுமல்லி, முல்லை, மௌவல், கருநிறம் பொருந்திய வெற்றிலை, கூதாளி, கரியநிறஅரும்பா காக்கொன்றைஎன்ற, காக்கணம், வெள்ளைநிற, வெண்காக்கணம், குருக்கத்தி, இருவாட்சி, கொகுடி, பிச்சி ஆகியன கொடிப்-பூவாகும். வெற்றிலை பத்திரவகையாகும். 11வகை கொடிப்பூக்கள் இப்பாடலில் கூறப்பட்டு உள்ளன.

3. நீர்ப்பூவகை. (நீர்நிலைப்பூக்களும் இலைகளும்)

செய்ய தாமரை சேர்ந்த பொற் றாமரை
துய்ய தாமரை சொல்லிரண் டுற்பல
மைய செம்மையை வெண்மைய வாகிய
நெய்தன் மற்றிவை நீரின் மலர்களே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இப்பாடலில் 1செந்தாமரை, 2பொற்றாமரை, 3வெண்டாமரை, 4செங்குவளை, 5கருங்குவளை, 6செம்மையாகிய ஆம்பல் (செவ்வல்லி), 7வெண்மையாகிய வெள்ளாம்பல் என்ற ஏழுவகை நீர்ப்பூக்கள் பேசப்படுகின்றன.

4. நிலப்பூவகை. (நிலத்தாவரப் பூவகைகள் & இலைகள்)

பட்டி, நா யுருவி, பூளை, பச்சை, செவ்வந்தி, தும்பை,
வெட்டி வேர், மருக்கொழுந்து, கரந்தையே, விஷ்ணுகாந்தி,
மட்டவிழ் துழாய், செங் கீரை, மத்தை, செம்பரத்தை வங்க
மிட்ட கொக்கிறக னிச்சம் வலம்புரி யிவை நிலப்பூ.

இப்பாடலில் பச்சை, மருக்கொழுந்து, துழாய்எனும் துளசி, ஆகிய பத்திரங்களுடன், பட்டிப்பூ, நாயுருவி, பூளை, தும்பை, வெட்டிவேர், செவ்வந்தி (ஜெவிந்தி மஞ்சள் சாமந்தி) சிவகரந்தை, விஷ்ணுகாந்தி, (பொன்) ஊமத்தை, வங்கம்என்ற கத்திரி (கண்டங்கத்திரி), கொக்குமந்தாரை, வலம்புரி என்ற நந்தியாவர்த்தம், செங்கீரை, அனிச்சம், செம்பரத்தை என்ற பதினெட்டுவகை நிலப்பூக்கள் கூறப்பட்டுள்ளன.

அஷ்ட பஷ்பம் (எட்டு நாண்மலர்).

பூசையின்போது சிறப்பான, எட்டுவகைமலர்களால் பூசித்தல் அஷ்டபுஷ்பார்ச்சனம் எனப்படும்.

அர்க்க சம்பக புன்னாக நந்தியாவர்த்தம்ச பாடலீ.
பிருஹதீ கரவீராணி துரோண புஷ்பாணி சார்ச்சயேத்.

(காரணாகமம்)

1. வெள்ளெருக்கம்பூ, 2. செண்பகப்பூ, 3. கொன்றைப்பூ / புன்னைப்பூ, 4. நந்தியா வட்டப்பூ, 5. பாதிரிப்பூ, 6. கண்டங்கத்திரிப்பூ, 7. அரளிப்பூ, 8. தும்பைப்பூ என்ற எட்டுவகை மலர்களால் சிவனை பூசிக்கவும் என்கிறது காரணாகமம். மற்றொருவகையாக,

பங்கஜார்க்க பலாசம்ச நந்தியாவர்த்தம்ச மல்லிகா.
கரவீரம் பகம் சைவ நீலோத்பல மதாஷ்டகம்.

(அம்சுமதாகமம்)

1. தாமரைப்பூ, 2. வெள்ளெருக்கம்பூ, 3. புரசம்பூ, 4. நந்தியாவட்டம்பூ, 5. மல்லிகைப்பூ, 6. செவ்லரிப்பூ, 7. கொக்குமந்தாரைப்பூ, 8. கருநெய்தல்பூ என்ற எட்டுவகை மலர்களை அஷ்டபுஷ்பார்ச்சனைக்கு உரியவையாக அம்சுமதாகமம் கூறி உள்ளது. மேற்கண்ட மலர்கள் அஷ்டபுஷ்பம் என்ற பெருமைவாய்ந்த, சிறப்புமலர்களாக, பூஜையில் சிறப்புதருணங்- களில் இறைவனுக்கு சிறப்பு மந்திரத்தால் அர்பணிக்கப்படவேண்டியவை ஆகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூஜைகாலங்களின் புஷ்பவகை.

ஆலயபூஜாகாலங்களில், முப்பெரும்காலமான "மஹா ஸந்தி" பூஜாகாலங்களாகிய, 1. காலஸந்தி, 2. உச்சிகாலம், 3. ஸாயரக்ஷை ஆகிய முக்காலங்களிலும் மற்றும் உபசந்தி-களாகிய உஷக்காலம் (அதிகாலை) அர்தயாமம் எனும் நடுநிசி இவைகளிலும் சாத்தப்பட வேண்டிய மலர்களை பல்வேறுவிதமாக ஆகமங்கள் எடுத்துஇயம்புகின்றன. இனி அவற்றை காண்போம்.

காலஸந்தி பூஜைக்கு உரிய மலர்கள். (பிராதக்காலபுஷ்பம்) :

பங்கஜம் ச பலாசம் ச துளசீ நவ மல்லிகா.
நந்தியாவர்த்தம் ச மந்தாரம் மாதவீ சம்பகம் ததா.
புன்னாகம் கேதகீ சாபி பிராதக்காலார்ச்சனே தச.

(காரணாகமம்)

மேற்கண்ட காரணாகம கூற்றின்படி 1. தாமரைப்பூ, 2. புரசம்பூ, 3. துளசிப்பூ, 4. நவ-மல்லிகைப்பூ, 5. நந்தியாவட்டம்பூ, 6. கொக்குமந்தாரைப்பூ, 7. முல்லைப்பூ, 8. செண்பகப்பூ, 9. புன்னைப்பூ, 10. தாழம்பூ ஆகிய பத்துவகைமலர்கள், காலஸந்திபூஜையில் ஏற்கத்-தக்கவைகள். இவற்றில் கேதகீ என்பது அருணாசலபுராணத்தை அனுசரித்து தற்போது, கோயிலில் பகலில் சிவபூசையில் தாழம்பூ அணிவிப்பது ஆகமமரபில், நடைமுறையில்இல்லை. ஆயினும் சிலர் இம்மலரை அர்தயாமத்தில் பூசையில் சாத்துவர். நந்தியாவர்த்தம் சிரியாவர்த்தம்சுவேதார்க்கம்உதயேததேத் என்றசிவதர்மவாக்கியப்படி, நந்தியா-வர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், வெள்ளெருக்கம்பூ, இவை மூன்றையும் உதயகாலபூசையில் சேர்த்திட வேண்டும். சைவாகமங்களை ஆராய்ந்து, பலநூல்களை இயற்றிவரும், நுண்ணியதமிழ்ஞானம் பெற்று விளங்கியவருமான, தருமையாதீனபீடாதிபதியின் முதற்குருவான ஸ்ரீலஸ்ரீ கமலை ஞானபிரகாசர், தொகுத்தளித்த புஷ்பவிதி எனும் நூல், பூஜாகாலமலர்களை விளக்குகிறது.

காலசந்தி பூசையின் அஷ்டபுஷ்பம்.

வம்பவி ழலரிநா யுருவி மல்லிகை
வெம்பிய வெருக்குடம் வில்வம் வெண்மலர்
நம்பிய வருக்கலர் நந்தி நாண்மல
ரம்புயங் காலையி லட்ட புட்பமே.

(புட்பவிதி)

இப்பாடல் 1) அலரி, 2) நாயுருவி, 3) மல்லிகை, 4) வெள்ளெருக்கு, 5) வில்வம், 6) நந்தியாவட்டம், 7) தாமரை,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மேலும் ஒருவகை வெண்ணிறப்பூ 8) நாகநந்தி (நாகலிங்கப்பூ). சேர்த்து காலைநேர பூஜையின் எட்டுவகை மலர்கள் என்கிறது. இதனை காரணாகமம் கூறும்.

அர்கபுஷ்பஞ்ச பில்வம்ச அபாமார்க கரவீரகம்
பங்கஜம் நாகநந்தீச நந்தியாவர்த்தம் ச மல்லிகா
அஷ்டபுஷ்பம் ததாவத்ஸ பிராதஸ் ஸந்தியாம்து புஷ்பகம்.

(காரணாகமம்)

உச்சிகாலபூஜைக்கு உரிய மலர்கள். (மத்யான்ஹகால புஷ்பம்)

சுவேதாப்ஜம் கரவீரம் ச பலாசம் துளசீ ததா.
உத்பலம் பில்வபத்ரம் ச சங்கம் குரவகம் ததா.
கோவிதாரம் சைகபத்ரம் தச மாத்யான்ஹ பூஜனே.

(காரணாகமம்)

மேற்கண்ட காரணாகமவிதிப்படி நடுப்பகல் பூஜைக்கு, 1) வெண்தாமரை, 2) அலரி, 3) புரசு, 4) துளசி, 5) கருநெய்தல், 6) வில்வம், 7) சங்குப்பூ, 8) மருதாணிப்பூ, 9) கோவிதாரம் (காட்டு ஆத்தி), 10) ஓரிதழ் தாமரை என்ற பத்துவகை பத்ரபுஷ்பங்கள் உச்சிகால பூசைக்கு ஏற்றவை ஆகும். கரவீரம் ச பத்மம் ச துரோணம் மத்யான்ஹகே ஹிதம் (சிவதருமம்) என்ற சிவதருமநூலின்படி, செவ்லரி, தாமரை, தும்பை ஆகியன உச்சிப்பொழுதில் உகந்தவை.

உச்சிகால பூஜையின் அஷ்டபுஷ்பம்.

போதவிழ் பொன்னூமத்தை புலிநகக் கொன்றை வெள்ளைப்
பாதிரி வன்னி செய்ய வழுதுணை படர் மந்தாரை
பேதமாய் மலரும் வெள்ளைக் காக்கொன்றை பெரிய தும்பை
யோதிய விவைக ளெட்டு முச்சியி லட்ட புட்பம்.

(புஷ்பவிதி)

இப்பாடல் 1) பொன்னூமத்தை, 2) புலிநகக் கொன்றை, 3) வெள்ளைப் பாதிரிப்பூ, 4) வன்னிப்பூ, 5) கத்தரி, 6) மந்தாரை, 7) வெண்டாமரை, (வெண்காக்கொரட்டைப்பூ), 8) பெருந்தும்பை ஆகிய எட்டும் மதியஉச்சிபூசைக்குஉரிய "அஷ்ட புஷ்பம்" எனத்தெரிவிக்கிறது.

துரோண புஷ்பம் ததா மந்தாரம் சங்க புஷ்பகம்.
சுவேதம் பலாச துத்தூரம் வ்யாக்யாதம் வ்யாக்ர புஷ்பகம்.
சமீ சைவது மத்யான்ஹே பியஷ்டபுஷ்பம் சுயோஜயேத்.

(காரணாகமம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸாயங்கால பூஜைக்கு உரிய மலர்கள். (ஸாயான்ஹகால புஷ்பம்)

ரக்தாப்ஜம் குமுதம் சைவ மல்லிகா ஜாதி மாலதீ.
மருர் தமனகம் வாபி பேரகம் கஜகர்ணிகா.
துளசீ பில்வபத்ரம்ச ஸாயங்காலார்ச்சநே தச.

(காரணாகமம்)

மேற்கண்ட காரணாகமவசனப்படி 1) செந்தாமரை, 2) அல்லி, 3) மல்லிகை, 4) ஜாதி முல்லை, 5) மரமல்லிகை, 6) மருவு அல்லது மரிக்கொழுந்து, 7) வெட்டி வேர், 8) கஜகர்ணிகை, 9) துளசீ, 10) வில்வம் என்ற பத்துபுஷ்பவகை ஸாயங்கால பூசைக்கு ஏற்றவை ஆகும்.

அர்த்தராத்திரி பூஜாமலர்கள். (நடுநிசிபூசைப் பூக்கள்)

மல்லிகா கிருஷ்ண துத்தூரம் ஸாயான்ஹே சம்பகம் ஹிதம்.
கதம்பம் கநகா ஜாதீ கர்ணிகா சார்த ராத்ரிகே.

(சிவதருமம்)

மேற்கண்ட சிவதருமநூலின்படி கருஊமத்தை, மல்லிகை, செண்பகம் இவை மாலைநேர பூசையிலும், கதம்பமலர், கனகமலர், ஜாதிமுல்லை ஆகியவை நிசியாகிய அர்தயாமபூசையிலும் சமர்ப்பித்திடவேண்டும்.

சாயங்கால அஷ்டபுஷ்பம்.

வந்தமல்லிகை யிரண்டு மகிழ்தரு மல்லிகைப் பூக்
கொத்துவேர் சண்பகப்பூச் சிறிய சண்பகங் கொழுந்து
சிந்தைகூ ரட்ட புட்பஞ் சிவன் முடிக் கேறும் போழ்தில்
லந்தியோ டர்தயாம மபராண்னந் தனினு மாமே.

(புஷ்பவிதி)

இப்பாடல் 1மல்லிகை, 2காட்டுமல்லி, 3மரமல்லிகை, 4மகிழம்பூ, 5வெட்டிவேர், 6சண்பகம், 7சிறுசண்பகம், 8மருக்கொழுந்து என்ற எட்டும், அந்தி, அர்தயாமம், பிற்பகல் ஆகிய மூன்று காலங்களில் சிவன் முடிக்கேற்ற மலர்கள் என்கிறது. இதனை

அபரான் ஹார்சநா புஷ்பம் பூமூலம் சம்பகம் ததா.
வகுளம் கிருஷ்ணவல்லீச மல்லிகா த்வய மேவச.
ஜாதீச தாந்த ஸம்யுக்தம் ஸாயே சைவார்தயாமகே.

(காரணாகமம்)

என்று காரணாகமம் விளக்குகிறது.

கனகாநி கதம்பானி ராத்ரௌ தேயாநி சங்கரே.
திவா சேஷாணி புஷ்பாணி திவாராத்ரௌச மல்லிகா.
ப்ரஹரார்தே ஸ்மிருதா ஜாதீ கரவீர மஹர்நிசம்.

(பூர்வகாமிகாகமம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இரவில் கனகம் மற்றும் கதம்பமும், பகலிலும் இரவிலும் மல்லிகையும் மற்ற மலர்கள் யாவும் பகலிலும், மாலையின் பிற்பாதியில் (பிரஹரகாலத்தில்) ஜாதிமுல்லையும் சிவனுக்கு ஏற்றது என காமிகாகமம் கூறுகிறது.

ஸர்வதேவதா அஷ்டபுஷ்பம்.

ஸகலதெய்வங்களுக்கும் ஏற்ற அஷ்டபுஷ்பத்தை, காரணாகமம் கூறுகிறது.

> பத்மம் சைவார்க்க புஷ்பம்ச நந்தியாவர்த்தம்ச பாடலீ.
> துரோண புஷ்பஞ்ச மந்தாரம் கரவீர மதோத்பலம்.
> அஷ்டபுஷ்ப மிதிக்யாதம் ஸர்வ தேவாத்மகம் விது. :
> (பூர்வகாரணாகமம் 31-80).

மேற்கண்ட காரணாகமவசனத்தால் 1) தாமரை, 2) வெள்ளெருக்கு, 3) நந்தியாவர்த்தம், 4) பாதிரி, 5) தும்பை, 6) மந்தாரம், 7) செவ்வலரி, 8) நீலோத்பலம் ஆகிய எட்டுவகை அரிய மலர்களும் அனைத்து தெய்வங்களுக்கும் பூஜையில் அஷ்டபுஷ்பார்ச்சனைக்கு ஏற்றவை ஆகும்.

பூஜாகால சிறப்புமலர் .

மிகச்சிறந்தவகையில் ஓரேமலராக ஒவ்வொருகாலத்திற்கும் ஏற்றதாக ஆகமம்முறையே, காலையில் நந்தியாவட்டம், உச்சியில் செவ்வரளி, சாயங்காலத்தில் மல்லிகை, அர்தயாமத்தில் த்விகர்ணிகை எனும் மலர் ஏற்கத்தக்கது என்கிறது. இதனைக்கூறும் ஆகமசான்று,

> நந்தியாவர்த்தம் சுபம் ப்ராதர் மத்யான்ஹே கரவீரகம்.
> ஸாயங்காலே மல்லிகாச த்விகர்ணீ சார்தயாமகே.
> (காமிகம்)

அஷ்டபுஷ்பார்ச்சன காலம்.

சைவாகமபூஜைமுறையில் அஷ்டபுஷ்பங்களால், பூஜை செய்ய வேண்டிய தருணங்கள் எட்டு. முறையே அவை, 1) ஆவாஹனம்செய்தல் (அழைத்தல்), 2) அர்கியம் அளித்தல், 3) பாத்யாதிகளை தருதல், 4) நீராட்டுதலைச்செய்தல், 5) தூபமிடுதல் (புகையை முகரச்-செய்தல்), 6) நறுமணகந்த திரவியங்களைப்பூசுதல், 7) உணவை நிவேதனம் செய்தல், 8) விடை-கொடுத்தல் (அனுப்புதல்) ஆகிய எட்டுகிரியைகளைச்செய்யும் போதும் தவறாமல் அஷ்ட-புஷ்பார்ச்சனையை செய்வது ஆகமவிதிமுறையாகும்.

இதற்கான சான்று,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆவாஹனே ததா அர்கியேஷு பாத்யே ஸ்நாநேஷு தூபகே.
விலேபநே ச நைவேத்யே விஸர்காந்தே ததைவச.
அஷ்டகாலேஷு புஷ்பம் து தாபயேத் து யதோதிதம்.

அஷ்டபுஷ்பஅர்ச்சனைக்கான இடம்.

இதன் செய்முறையாதெனில், எட்டுவகை மந்திரத்தால், எட்டுவகைமலரால், தெய்வத்-திருமேனியில் எட்டுஇடத்தில் அணிவித்தலாகும். அதாவது 1) கிரீடம், 2) தலை, 3) காது, 4) இதயம், 5) நாபி, 6) குஹ்யம் (குறியிடம்), 7) முழங்கால், 8) பாதம் ஆகியபகுதிகளில் உரியமலரை, உரியமந்திரத்தைச்சொல்லி, வைத்துப்பூசித்தலாகும். இதனை விளக்கும் காரணகாமச்சான்று,

மகுடே மூர்த்நி கர்ணே ச ஹ்ருதயே நாபி குஹ்யகே.
ஜாநு பாத த்வயே சைவ அஷ்ட புஷ்பம் சுயோஜயேத்.

(பூர்வகாரணாகமம் படலம் 31)

மந்திராஷ்டபுஷ்பம்.

ஆகமபூசையில் முறையே, 1ஆஸநம், 2மூர்த்தி, 3மூலம் ஆகிய மந்திரங்கள் மூன்றுடன், 4இதயம், 5சிரசு, 6சிகை, 7கவசம், 8அஸ்திரம் எனப்படும் ஐவகை அங்கமந்திரங்களும், எட்டு மந்திரங்களைக்கொண்டு சேர்ந்த(நேத்ரமந்திரமின்றி) பூசித்தலே மந்திரபுஷ்பார்ச்சனையின் முறையாகும். இதனை "ஸாஸநா மூர்த்தி மூலாங்கா நேத்ர ஹீநாஷ்ட புஷ்பிகா" என்கிற ஆகமவசனத்தால் மந்திராஷ்டபுஷ்பம் என அறியவும். வேதத்தில் விளங்கும் யோபாம்புஷ்பம் வேத என்று துவங்குகிற எட்டுவகையான மந்திரங்களைப் போன்றவை ஆகமத்தில் மந்திராஷ்டகம் என்பதை அறியவும். இவற்றை சாத்துவதற்கான காலச்சான்று,

ஆவாஹ நார்க்ய பாத்யேஷு ஸ்நாநே தூபே விலேபநே.
நைவேத்யேச விஸர்கேச புஷ்பாணி அஷ்டசு யோஜயேத்.
(சுப்ரபேதம்)

மேற்கண்ட் சுப்ரபேதாகம வசனப்படி ஆலயத்தின் எட்டுசந்திபூசையிலும், மந்திராஷ்ட-புஷ்பார்ச்சனைனை எட்டுகாலத்தில் செய்யவேண்டும்.

வாரபுஷ்பங்கள். (கிழமையின்மலர்) வாரபூஜைக்கேற்ற பத்ரபுஷ்பங்கள் .

முறையே ஆதிவாரமாகிய ஞாயிறுமுதல், சனிவரையிலுமாக, வாரத்தின் ஏழுநாட்களிலும் தொடர்ந்து சிறப்பானவகையில் உரிய ஒவ்வொருமலரையும், இலையையும் கொண்டுபூசித்தல் வாரபூசையின் செய்முறையாகும். இத்தகைய வாரவழிபாட்டுமலர்களை இனி காரணாகம வசனத்தால் அறிவோம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அப்ஜம் சைவது புன்னாகம் ரக்தாப்ஜம் சைவ பாடலீ.
சம்பகம் ஜாதி புஷ்பம்ச நீலேத்பலம் யதாக்ரமம்.
ஸௌராதி சனி வாராந்தம் அர்ச்சயித்வா விசேஷத :.
தூர்வாச பில்வபத்ரம்ச தாதகீ துளசீ ததா.
தாந்தம்ச டாடிமீ பத்ரம் விஷ்ணு க்ராந்திம் ததைவச.
ஏதைஸ் ஸௌராதிநா ப்யர்ச்ய ரக்தசந்தனகைஸ் ஸஹ.

(காரணாகமம்)

ஞாயிற்றுக்கிழமையில், புஷ்பம் வெண்தாமரைப்பூவும், பத்திரம் அருகம்புல்நுனியும், திங்கள்கிழமையில் புஷ்பம் புன்னைமலரும், பத்திரம் வில்வபத்திரமும், செவ்வாய்கிழமையில் புஷ்பம் செந்தாமரையும், பத்திரம் (ஆத்தி) தாதகீபத்ரமும், புதன்கிழமையில் பாதிரிப்பூவும், துளசீபத்ரமும், வியாழக்கிழமையில் செண்பகப்பூவும், மருவுபத்திரமும், வெள்ளிக்கிழமையில் ஜாதிமல்லிப்பூவும், மாதுளம்பத்திரமும், சனிக்கிழமையில் கருநெய்தல் எனப்படும் நீலோத்பல மலரும், விஷ்ணுகாந்திஇலையும் என்று ஏழுநாட்களுக்கும் உரிய வாரபுஷ்பங்களும், வாரபத்திரங்களுமாகும். இவை, காலை, உச்சி, மாலை ஆகிய மூன்றுமகாசந்திகாலபூசைக்கும் ஏற்றவை ஆகும். சந்தனத்துடன் சேர்த்து இம்மலர்களால் சிறப்பாக, அந்தந்தகிழமையில் நைமித்திகமானபூஜையையும், நித்யபூஜையையும், (இஷ்டகாமிய) விருப்பப்பூசையையும் செய்தல் வேண்டும்.

மாச புஷ்பங்கள் . (மாதங்களின் மலர்வகை) -

1) சித்திரை மாதத்தில் முல்லைப்பூ, கானர்ப்பூ, கடம்பம்பூ, வாழைப்பூ இவைகளுடன், கோங்கு, அறுகு, நாயுருவி, விளா, வில்வம், மருக்கொழுந்து இப்பத்திரங்களைக் கொண்டு பூசைசெய்வதால், லக்ஷ்மீரகம் (செல்வச்செழிப்பு) ஏற்படும். "தமனம் ஸ்ரீகரம்பவேத்" என்கிறது சூக்ஷ்மாகமம். இம்மாதத்தில் புஷ்பவகை யாவுமே தனிச்சிறப்புமிக்கதாகக் கூறப்படுகிறது.

2) வைகாசி மாதத்தில் அரளி, செந்தாமரை, பாதிரி, நெருஞ்சில், சிறுவழுதலைப்பூ, செவ்வந்திப்பூ இவைகளுடன், வன்னி, அறுகு, நாயுருவி, நொச்சி, விளா, வில்வம் ஆகிய பத்திரங்களைக் கொண்டு பூசைசெய்வதால், சிவலோகமுக்திநிலைகிட்டும். இம்மாதத்தில் பத்ரவகைகள் தனிச்சிறப்புமிக்கதாக ஆகமங்களில் கூறப்படுகிறது.

3) ஆனி மாதத்தில் கடம்பம், சிவப்புசெண்பகம், தாமரை, பாதிரி, காக்கரட்டான் ஆகிய பூக்களும், இம்மாதத்தின் விசேஷஅபிஷேகத் திரவியமான, மலர்கள்ஊரிய தீர்த்தமாகிய புஷ்போதகத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கூறப்பட்டுள்ளகிய, புன்னை, நாகமல்லி, நந்தியாவட்டம், கருஊமத்தம்பூ, வெள்ளெருக்கம்பூ, மகிழம்பூ இவைகளுமாகும், இவற்றால் அபிஷேகித்தும், அர்ச்சித்தும், எண்ணிய பலன்களைப் பெறமுடியும். இம்மாதத்தில் பழவகைகள் தனிச்சிறப்புமிக்க பலனைத் தருவனவாகும். எனவே இம்மாதத்தில் பழமாலைகளை அணிவிப்பது நன்மை தருவதாக கூறப்பட்டுஉள்ளன.

4) ஆடி மாதத்தில், அலரிப்பூ, ஊமத்தம்பூ, கருங்குவளை, தும்பைப்பூ இவைகளுடன் வில்வபத்ரம் சேர்த்து அர்ச்சித்தால், எதிர்ப்பு நீங்கி சத்ருநாசம் ஏற்பட்டும். இம்மாதம் பால் அபிஷேகம் பால்பாயசம், திரட்டுப்பால், பால்பலகாரவகையின் நிவேதனம் தனிச்சிறப்பு பெறும்.

5) ஆவணி மாதத்தில், விஷ்ணுகிராந்தி, காக்கரட்டான்பூ, மல்லிகை, புன்னைப்பூ, சண்பகப்பூ முல்லை, இவைகளுடன், ஆலமரத்தளிர்இலை கொண்டும் அர்ச்சித்தால் மண்ணுலகில் மட்டற்ற மகிழ்ச்சியை அடையலாம்.

6) புரட்டாசி மாதத்தில், தேவதாருமரப்பூ, விஷ்ணுகாந்தி, பொன்னூமத்தம்பூ, வெள்- ளெருக்கம்பூ, தாமரைப்பூ, இவைகளுடன், சிறுசெண்பகபத்திரம் கொண்டு அரச்சனையைச் செய்வதால், செல்வச்சேர்க்கை ஏற்படும்.

7) ஐப்பசி மாதத்தில், வெள்ளைநிற சங்குப்பூ, வில்வப்பூ, சிறுவழுதலைப்பூ, சரக்-கொன்றைப்பூ, மகிழம்பூ, பட்டிப்பூ, முல்லைப்பூ இவைகளுடன் தாமரைபத்ரம் சேர்த்து அர்ச்சித்தலால், அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்கிற நால்வகை புருஷார்த்தங்-களையும் அடையலாம்.

8) கார்த்திகை மாதத்தில், குடமல்லி, கருநெய்தல், மல்லிகைப்பூ, வில்வப்பூ, பொரசம்பூ, பாக்குப்பூ இவைகளுடன், குருக்கத்தியிலை கொண்டும் பூஜைசெய்தால், பிராம்மணரைக் கொன்ற தோஷமும் ஸ கலதோஷமும் நீங்கும்.

9) மார்கழி மாதத்தில், தும்பைப்பூ, வெள்ளருகு, வெண்தாமரை, செந்தாமரை, அருகுநுணி, (தூர்வாக்ரம்) கொண்டு அர்ச்சனை செய்வதால் வீடுபேறு எனும் மோக்ஷம் பெறலாம்.

10) தை மாதத்தில், ஒத்தை நந்தியாவட்டம், அடுக்கு நந்தியாவட்டம், தாமரைப்பூ, இவை-களுடன் நாயுருவியிலை கொண்டும் அர்ச்சனை செய்தால், வெகுகாலம் வாழ்வதற்கான ஆயுள்விருத்தி உண்டாகும்.

11) மாசி மாதத்தில், வெண்தாமரைப்பூ, மருதானிப்பூ,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சரக்கொன்றைப்பூ, மல்லிகைப்பூ, பொன்னூமத்தம்பூஎனும், சிவமல்லிகை, இவைகளுடன் துளசிபத்திரம் கொண்டு அர்ச்சனை செய்வதால் அனைத்து பிணிகளும் நீங்கப்பெற்று நல்ல ஆரோக்யம் ஏற்படும்.

12) பங்குனி மாதத்தில், தாமரைப்பூ, காசித்தும்பைப்பூ, இவைகளுடன், நாகவல்லி எனும்வெற்றிலையைக்கொண்டு, அர்ச்சனை செய்வதால் ஐச்வர்யம் உண்டாகும்.

பன்னிருமாத சிறப்புமலர் : 12மாத பவுர்ணமிபூசையில் சித்திரை முதலானவைக்கு ஏற்ற ஒருவகைப்பூ முறையே, 1முருக்கு, 2புன்னை, 3எருக்கு, 4அலரி, 5சண்பகம், 6கொன்றை, 7தும்பை, 8கண்டங்கத்திரி, 9பட்டி, 10தாமரை, 11நீலோத்பலம், 12மல்லிகை என்று காரணகாகமம் கூறுகிறது. மேலும் பங்குனிமாதத்தில், சிறப்புபூஜாவிதியாக, அனைத்து வகையான மலர்களால், வெகுசிறப்பாகசெய்யத்தக்க "புஷ்பபூஜை" என்பதை ஆகமங்கள் குறிப்பிட்டுள்ளன. இதனைப்பற்றி இனி காண்போம்.

விசேஷபுஷ்பபூஜனவிதி. (மலர் வழிபாட்டுமுறை)

நாநா புஷ்ப ஸமோபேதைர் சம்ப கோத்பல ஜாதிபி :.
நீலோத்பல ப்ரசூனைச்ச பூர்வோக்த பூஷ்ப ஜாதிபி:.
புஷ்பைர் பத்ரைர் ஸமாஹ்ருத்ய ஸம்பாதம் ஸம்ய காசரேத் .
லிங்கம் ஆபூரயேத் வித்வான் உக்தபுஷ்பைர் விசேஷத :.
லிங்கமூர்தாதி பீடாந்தம் ஸ்தலாந்தம்வா ஸமாசரேத்.

(காரணாகமம்)

மேற்கண்ட காரணாகமவிதிவசனத்தின்படி செண்பகப்பூ, கருநெய்தல்மலராகிய நீலோத்-பலப்பூ, ஜாதிமுல்லை முதலிய புஷ்பங்களையும், பத்திரங்களையும் முறைப்படி அதிகமாக சேகரித்து, ஸ்நபனம் எனும் சிறப்பு கலசநீராட்டலுடன், முறைப்படி பூசையைச்செய்து, பின்பு சிவாக்னியில் பூசித்து, ஹோமநெய்யினால் சேமித்த மலர்க்குவியல்மீது சம்பாதஆகுதியைச் செய்து, பின்பு அக்னியில் ஆகுதிசெய்து, சிவனேயான லிங்கத்தையோ, மாகேசமூர்த்தியான கல்யாணசுந்தரேச்வரர் முதலாகிய பிம்பத்தையோ, அந்த புனிதப்படுத்திய பலவகை மலர்க்-குவியலால், ஆசார்யர் கைகளின் புஷ்பாஞ்சலிகளால் இறைவன் முடிமீது சொரிந்து தூவி நீரைப்போல் அபிஷேகம்செய்தும், வண்ணப்பூமாலைகளால் அலங்காரம்செய்தும், தெய்வத்தின், தலைமுதல், பீடம்வரையிலோ, கருவறையில் மேலிருந்து தரைத்தளம்வரையிலோ,பூமாலை-களைத்தொங்கவிட்டும்,லிங்கத்தின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உச்சிப்பகுதியில் மலர்ப்பந்தலை அமைத்தும், பலவாறாக மலர்களால் அலங்கரிக்கவேண்டும். அச்சமயம் மந்திரபுஷ்பாஞ்சலிகளைச்செய்து லிங்கத்தின் பிரம்மபாகமான பத்மபீடம்வரையில் பூசித்த பூக்களால் மறைத்தோ, விஷ்ணுபாகமாகிய நீரோடும்கோமுகை உயரம்வரை மலர்களால் மறைத்தோ, ருத்ரபாகமாகிய பூஜாம்சமாகிய பாண-உச்சிவரை மலர்களால்பூசித்துமறைத்தோ, இவ்விதம் விதிமுறையின்படி விசேஷபுஷ்பார்ச்-சனையை செய்துமுடித்து, பின்பு நிவேதனம் முதலான பல்வேறு உபசாரவகைகளைச்செய்து முடிப்பது விசேஷ புஷ்பபூஜனம் எனப்படுவதாகும். இந்த புஷ்பபூஜையைச்செய்வதால், விரும்பிய பலனை செய்பவர் விரைவில் அடைந்திடுவர். மாதபூஜையில் ஆனிமாதத்தில் செய்யத்தக்கதான மலர்கள்ஊரியநீரினால் நிராட்டுகிற புஷ்போதகஅபிஷேகம் மேலும் பங்குனிமாதத்தில் செய்யத்தக்க புஷ்பபூஜை ஆகிய இவ்விரண்டும் மிகச்சிறப்பாக விரும்பும் பயன்தருவதாக ஆகமங்களில் விரிவாக கூறப்படுவதன்மூலமாக ஆகமபூசையில் புஷ்பத்தின் மஹிமையும், மலரின் தேவையும் நன்கு விளங்குவதை யாவரும் நன்கு உணரலாம்.

முக்குணமலர்களும், பயன்களும். (திரைகுண்யகுசுமாநி)

சைவாகமங்கள், பூஜைக் கிரியையின் முக்கிய அங்கப்பொருளாக, தலையாய உறுப்பாகத் திகழும் மலர்களை, "சுவேதம் ரக்தம் கிருஷ்ணம் ஸாத்விகாதி குணதிரயம்" என்று 1சாத்விகம், 2ராஜஸம், 4தாமஸம் என்று மூன்று வகையாகக்கூறுகின்றன. இவற்றை, காலத்திற்கும், ஸகுணதெய்வமூர்த்திகளுக்குஏற்பவும், நோக்கப்பயன்களுக்கும், விருப்பப்- பயனுக்கும், ஏற்றவையாகப்பகுத்து, சிறப்பித்து, விளக்கியும் கூறுகின்றன. "ராஜதம் ஸாத்விகம் சைவ தாமஸ ம்சைவ மிசரகம்" என்று தீப்தாகமம் பூக்களை நால்வகையாகபகுத்து விதித்து உள்ளது. பூமாலையானது வெள்ளை, சிகப்பு, மஞ்சள், கருநீலம் என்று நான்குநிறபூக்கள் சிறந்தவை. மூன்றுநிறமுள்ளது மிகசிறந்தது. இருநிறமுள்ளது மத்யமமானது. ஒருநிறமுள்ள கநிஷ்டமானது ஆகும். இனி முக்குணஅடிப்படையில் மலர்களைப்பற்றி அஜிதா-கமத்தின் மூன்றுசுலோகங்களால் அறிவோம்.

I. துத்தூரம் கரவீர ஜாதி வகுளம் மந்தார புஷ்பம் பகம்,
புன்னாகம் குரவார்க்க நந்தி குடஜ துரோணாதிகம் மாதவீ.
சுப்ரம் ஸாத்விக மேத துக்த மகிலம் மோக்ஷப்ரதம் ஸ்யாத் தத:.
கல்ஹார ராம்புஜ பட்டி பாடல சுமம் பாலாச நீபாதி யத்.

(அஜிதாகமம்)

மேற்கண்ட அஜிதாகமசெய்யுளின்படி சிவபூஜைக்கு, வெள்ளைநிறஊமத்தம்பூ, வெள்ளைநிற அலரிப்பூ, பிச்சிப்பூ,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிறுசெண்பகம், மகிழம்பூ, வெள்ளைநிறமந்தாரைப்பூ, ஜாதிப்பூ, வெண்-தாமரைப்பூ, வெள்ளைக்கொக்கிறகம்பூ, புன்னைப்பூ, மருதானிமலர், வெள்ளைஎருக்கம்பூ, நந்தியாவட்டப்பூ, மல்லிகைப்பூ, குடமல்லிகை, தும்பை, முல்லை முதலான (1) வெள்ளைநிற மலர்களனைத்தும் ஸாத்விக குணமுள்ள மலர்கள் ஆகும். இத்தகைய உரியவகை வெள்ளை நிறபூக்களால் செய்யப்படும் சிவபூஜையானது சிவனது சாயுஜ்யபதவியாகிய வீடுபேறு எனும் பரமுக்தியைத்தரவல்லது. மேலும்,

II.ரக்தம் ராஜஸ மேவ முக்த மஜிதே தைரர்ச்சனம் போகதம்,
ஸர்வம் கிருஷ்ண சுமம்து தாமஸ மதோ அயோக்யம் விநா சோத்பலம்.
பீதம் ஸாத்விக ராஜஸம் ஸகலமப் யாரக்வதம் சம்பகம்,
துத்தூராதிச கர்ணிகார மபியத் ஸ்யாத் போக மோக்ஷ ப்ரதம்.
(அஜிதாகமம்)

செங்கழுநீர்பூ, செந்தாமரைப்பூ, செவ்வலரி, சிவந்தபட்டிப்பூ, செம்பாதிரிப்பூ, சிவந்தபலாசம்பூ, செங்கடம்பம்பூ முதலிய (2) சிவந்தநிறமலர்கள் அனைத்தும், இராஜஸ குணமுள்ள மலர்கள் ஆகும். இவற்றால் மகாதேவருக்கு அர்ச்சனைசெய்வதால், உலகவாழ்வில் சுகானுபவமாகிய இம்மைப்பயனும், மறுமையில் சிவபோகமும் உண்டாகும். சுகபோகத்தை அளிக்கவல்லதாகையால் சிவந்தமலர்கள் யாவும் கணபதி, சிவன், முருகன், திருமால், காளீ, துர்கை, முதலிய அனைத்து தெய்வங்களுக்கும் மிகவும் பிரியமானதாக கூறப்பட்டுஉள்ளன.

கருநெய்தல் மலராகிய நீலோத்பலம்என்ற, ஒப்பற்றதொரு, சிறந்தமலரைத்தவிர, மற்றய (3) நீலநிறமுள்ள மலர்கள் யாவும் தாமஸகுணமுள்ளமலர்கள் ஆகும். சுத்தமும், ஸத்துவ-குணமுமே சிவம் என்று சைவாகமங்கள் கூறுவதனால் நீலோதபலத்தைத்தவிர, மற்றய, நீலநிற மலர்கள் சிவனது, சிவலிங்கபூஜைக்கு உகந்தவைஆகாது. இவை தமோகுணரூபமுள்ள சாஸ்தா, பைரவர், யமன், சனைச்சரர் முதலிய உக்கிரரூபம் அல்லது தாமஸகுணமுள்ள மூர்த்திகளுக்கு மட்டுமே, நீலநிறப்பூக்கள் ஏற்றவை ஆகும். சிவபூசையில் நீலநிறபூவில் விலக்கிற்க்கான சான்று,

புஷ்பாணி பீதவர்ணாநி சத்வராஜஸ மிச்ரிதான்.
கிருஷ்ணான் நீலோத்பலாதன்யான் தாமஸான் பரிவர்ஜயேத்.
(காமிகம்)

சரகொன்றைப்பூ, செண்பகப்பூ, பொன்னூமத்தைப்பூ, கோங்குப்பூ முதலிய (4) மஞ்சள்-நிறமுள்ள மலர்கள்யாவும் மிச்ரபுஷ்பம் ஆகும். அதாவது ஸத்வகுணம் மற்றும் ராஜஸ-குணம் எனப்படுகிற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருகுணங்களும்நிறைந்த குணக்கலவையுள்ளதாகையால் மஞ்சள்நிற-மலர்கள் "மிச்ரபுஷ்பங்கள்" எனப்படுகின்றன. சாத்துவிகம், இராஜஸம் எனும் இருகுணத்-தன்மையைக்கொண்டுள்ள இந்த மஞ்சள்நிறமலர்களைக்கொண்டு அர்ச்சிப்பதால் சுகபோகம் மற்றும் மோக்ஷம் என்கிற இருவகைப்பயனும் உண்டாகும் என்கிறது அஜிதாகமம். இதனால் யாவருக்கும் பொதுவாக பூசைக்கு, இருவகை பலனையும்தரும் இந்த மஞ்சள்நிறமலர்கள் மிகவும் ஏற்றதாகிறது.

III. சியாமம் தாமஸ ராஜஸம் ஹி துளசீ பில்வாதி பத்ரம் ச யத்.
ஹ்ரீபேரம் மருகம் ததா தமனகம் தூர்வா ச ஸித்தி த்வயம்.
ஸாஹஸ்ராத் கரவீர மர்க்க குசுமாத் பில்வம் சுமம் தத் தளம்.
சுவேதாப்ஜம் சதபத்ர மத்ர கமலம் தஸ்மாத் அபாமார்க்ககம்.

(அஜிதாகமம்)

பச்சைநிறமான இலைகள் யாவும், தாமஸகுணமும், ராஜஸகுணமும் கொண்டவைஆகும். பழுத்தமஞ்சள்நிறமுள்ள இலைகள் (பத்ரங்கள்) பூவிற்கு நிகரானவையாக, மிகவும் உயர்ந்தவை. பத்திரவகைகளுள் துளசியும், பில்வமும் இணையற்றதான, உயர்தரபத்திரங்கள் ஆகும். வில்வ-இலை, பச்சைதுளசி, வெட்டிவேர், மருவு, அறுகு, மருக்கொழுந்து (5வகை இலை), பஞ்சபில்வங்கள், கதிர்பச்சை, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை, சிவகரந்தை முதலியன பத்திர வகைகளாகும்.

நாமார்சனையின் மஹிமை.

புதிய பச்சைநிறஇலைகளால் சிவனுக்கு 108, 1008, லட்சம், பத்துலக்ஷம், கோடி ஆகிய எண்ணிக்கையில் மலர்தூவியும், பஞ்சபில்வாதி பத்திரங்களாலும், உரியகணக்கில் இறைவனது பெயர்களைக்கூறி சிறப்புமிக்க நாமார்ச்சனையைச் செய்வதால், செய்விப்போருக்கு இம்மையிலும், மறுமையிலும் போகம், மோக்ஷம் ஆகியஇரண்டும் உண்டாகும். (ஸஹஸ்ரநாம-மந்த்ரேண பில்வபத்ரேண சார்ச்சயேத் என்பது ஆகமவிதி, இந்த ஸஹஸ்ரநாமார்ச்சனையைப் பற்றி அப்பர்சுவாமிகள் தேவாரத்திருமுறையில் இந்த "பேர் ஆயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை" என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே "லக்ஷபுஷ்பாதிஷுபுனர் புஷ்பமே கைக மர்ப்பயேத்" என்ற ஆகமவசனப்படி லக்ஷஅர்ச்சனையையும் மற்றும் கோடி அர்ச்சனையையும் "நூறுநூறாயிரம் நாமம் போற்றி" என்று அப்பர்சுவாமிகள் குறிப்பிட்டு இருக்கிறார். இவ்வாறாக, ஆகமத்தில் கூறப்பட்டுஇருக்கின்ற புஷ்பவிதிமுறையினை அறிந்து, சிவபெருமானை அர்ச்சித்தால், மேற்கண்ட பயன்கள், யாவருக்கும் எளிதாக ஏற்படும் என்பது சிவாகமங்களின் முடிவாகும். இதற்கு இறைவனிடத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மெய்யன்பான சிரத்தாபக்தியே அவசியமாகும்.

நாமார்ச்சனமுறை.

நாடு செழிக்கவும், நாட்டினர் புருஷார்த்தங்களைப் பெறவும் இறைவன் அருள் வேண்டும். அவ்வருளைப் பெற பக்தி சிறந்த சாதனமாகும். இந்த பக்தியானது ஒன்பதுவகைகளில் வெளிப்படுத்தக்கூடியது ஆகும்.அவை :

1) **சிரவணம்** - இது காதால் இறைவனைப்பற்றிக் கேட்டுஅறிந்து மகிழ்தல்.

2) **கீர்த்தனம்** - இது இறைவனது புகழை வாயாரப் புகழ்ந்துபேசுதல்.

3) **ஸ்மரணம்** - இது இறைவனது ஐந்தொழில்களின் மகிமையை எண்ணுதல்.

4) **பாதஸேவனம்** - இது இறைவனது திருவடிகளுக்கு பணிவிடை செய்தல்

5) **அர்ச்சனம்** - இது உரியவகைப்பூ, இலைகளை இறைவன் திருவடியில் சேர்த்தல்

6) **வந்தனம்** - இது பலவகைகளில் இறையைப்பணிந்து நமஸ்கரித்து வணங்குதல்.

7) **தாஸ்யம்** - இது இறைவனையே தலைவனாக்கருதி அடியவராக பணியாற்றுதல்.

8) **ஸக்யம்** - இது இறைவனுடன் அன்போடு நட்புகொண்டு அன்பை வெளியிடுதல்

9) **ஆத்மநிவேதனம்** - இது பக்தியின் மேலீட்டால் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனுடையதாக, இறைவனிடம் தம்மை முழுமையாக அர்ப்பணித்தல். இவ்விதம் ஒன்பது வகையான பத்தியுள் அர்ச்சனம் என்பது நடுநாயகமாகத் திகழ்கின்றது. இறைவனின் குணங்களையும், வீரச்செயல்களையும், பஞ்சகிருத்தியங்களையும், அவனருளையும் உணர்த்தும் அவனது திருநாமங்களைச் சொல்லி, ஆகமவிதிப்படி நறுமண மலர்களையும், பில்வம் முதலிய பத்திரங்களையும் ஈசனின் திருவடியில்இடுதல் அர்ச்சனை எனப்படும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அர்ச்சனை வகைகள்.

பூசையின் நடுவில் புஷ்பாஞ்சலித்ரயம் கொடுத்தல் என்னுமிடத்தில் ஆத்மதத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் இம்மூன்று தத்துவங்களுடன் பஞ்சாக்ஷரத்தைச்சேர்த்துச் செய்யப்படுவது சைவாகமங்களில் தத்துவத்ரயார்ச்சனை எனப்படும். ஆகமபூஜையின்முடிவில் ஆஸனம், மூர்த்தி, மூலம், ஹிருதயம், சிரஸ், சிகா, கவசம், அஸ்திரம் ஆகிய, நேந்திர-மந்திரம் நீங்கலாகஉள்ள, இந்த, ஆகமத்தின் எட்டுவகை மந்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்வது அஷ்டபுஷ்பார்ச்சனை எனப்படும். புராணரீதியாக, 1பவன், 2சர்வன், 3ஈசானன், 4பசுபதி, 5ருத்திரன், 6உக்ரன், 7பீமன், 8மஹான் என்ற சிவனாரின் எட்டுதிருநாமங்களையும், நம : என்பதை முடிவில் சேர்த்துச்சொல்லி, மலரால் அருச்சிப்பது அஷ்டநாமார்ச்சனை என்பதாகும். இது யாவரும் அறிந்ததேஆகும். புராணங்களிலும், தந்திரநூல்களிலும் 108பெயர்களைக்கூறும் அஷ்டோத்தரசத நாமார்ச்சனை, 1008பெயர்களைக்கூறும் ஸஹஸ்ர நாமார்ச்சனை, 10000பெயர்களைக்கூறும் அயுத நமார்ச்சனை, 300பெயர்களைக்கூறும் திரிசதி நாமார்ச்சனை, முதலியவை சொல்லப்படுகின்றன. இவற்றையே சிவனுக்கு பஞ்ச-பிரம்மமூர்த்திகளாக பஞ்சபூதாம்சமாக ஐவர்சூழ்ந்திருந்து பெயர்களால் போற்றி அர்ச்சிப்பது பஞ்சமுகார்ச்சனை என்றும், இவ்வாறே முருகனுக்கு அறுவர் சூழ்ந்திருந்து அர்ச்சிப்பது ஷண்முகார்ச்சனை என்றும், தேவிக்கு ஒன்பதுவகையில்உள்ள தேகதூதிகாசக்தி வடிவங்களாக, வாமாதிநவசக்திகளின் உருவங்களாகவோகருதியவாறு ஒன்பதுநபர்கள் தேவியை சூழ்ந்திருந்து ஒருதேவியைப் பலபெயர்களால் போற்றிஅர்ச்சிப்பது நவசக்தி அர்ச்சனை எனப்படுவதாகும். சஹஸ்ரநாமங்களையே பலமுறையில் திரும்பத்திரும்பச் செய்வதால், இதனை பத்தாயிரம்கணிப்பில் செய்யப்படுவது அயுதார்ச்சனை ஆகும். இதனாலேயே நூறுமுறை செய்யப்படுவது லக்ஷார்ச்சனை என்றும், 1000பெயரான இதனையே ஆயிரம்முறை செய்யப்படுவது கோடிஅர்ச்சனை என்றும் கூறப்படுகிறது. இவற்றையே இருகைகளையும் குவித்த நமஸ்காரமுத்திரை எனும் அஞ்சலிமுத்திரையில் அதிகமலர்களைக் குவியலாகவேக் கொண்டு செய்யப்படுவது புஷ்பாஞ்சலி என்கிற குசுமாஞ்சலிஅர்ச்சனை. இவற்றை செய்வது ஆகமசிறப்புவழிபாட்டுமுறையாகும்.

அர்ச்சனைப்பயன்.

மூலமந்திரத்தைத் தொடர்ந்து பலமுறையாக, ஆவர்த்திசெய்வதால், அதற்குஉரியதேவதை அருள்தருவதாக ஸித்தியாவதைப்போல, சிறப்புப்பெயர்களாகஉள்ள

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இறைவன்நாமமந்திரங்-களால் செய்யப்படுகிற அரச்சனையின் மிகுதியால் அங்கு தெய்வஸாந்நித்தியம் உண்டாகிறது. பூசிப்பவரின் நல்லொழுக்க நியமத்தாலும், பலமுறை செய்யப்படும் அர்ச்சனையின் மிகுதியாலும், பிம்பங்களுடைய, சிற்பஇலக்கணப்படியான முறையான அமைப்பாலும் கோயில் முதலானவற்றில் கல்லானது கடவுளாக ஆகிறது என்கிறது ஆகமவாக்கியம். அர்ச்சனைதேவதையின் ஸாந்நித்தியத்திற்குக் காரணமாவதுபோல இம்மைமறுமைப் பயன்களையும் அளிக்கவல்லது. கர்மானுஷ்டானம் குறைவுபட்டுப் பாபம்மிகுந்த இக்கலியுகத்தில், ஈச்வரநாம ஸங்கீர்த்தனம் செய்வதே நமக்குப் பிறவிக்கடலைக்கடக்க ஒருதோணியாகும். ஆதலால்தான் ஆலயங்களில் லக்ஷார்ச்சனைகள், கோடியர்ச்சனைகள் நடைபெறுகின்றன. கோடியர்ச்சனையின் பயனைத் திருநாவுக்கரசுசுவாமிகள் பூவனூர்த்தேவாரத்தில், "பூவனூ ர்ப்புனிதன் திருநாமந்தான் நாவினூறு நூறாயிரம் நண்ணினார், பாவமாயின பாறிப்பறையவே தேவர் கோவினும் செல்வர்கள் ஆவரே" என்று அருளியுள்ளார்கள்.

அர்ச்சிக்க வேண்டியமுறை.

ஒவ்வொரு தேவதைக்கும் தனித்தனி ஸஹஸ்ரநாமங்கள் உள்ளன. அந்தந்த தேவதைக்கு

உரிய நாமங்களைச்சொல்லி, அக்கடவுளுக்குச் சிறப்பாகவிதிக்கப்பட்டுள்ள புஷ்பங்களாலோ, குங்குமம் முதலிய புனிததிரவியங்களாலோ அருச்சிப்பது சிறந்தது. தம்வீடுகளில் தனது விருப்பமான தெய்வத்தின் ஆத்மார்த்தமூர்த்தியைத் தானேஅர்ச்சித்தால் வேண்டும். ஆலயங்களில்உள்ள பரார்த்தமூர்த்தியை ஆசார்யர்அர்ச்சித்தல் வேண்டும்.

அர்ச்சனை செய்பவர் ஒருமைமனமுடையராய் அர்ச்சிக்கப்படும் மூர்த்தியைத் தியானித்து, கூறுகிற திருநாமங்களின் பொருளைநினைத்தவாறு, வீண்வார்த்தைகளைத்தவிர்த்து, முறையே அர்ச்சித்தல்வேண்டும். இக்காரணம் பற்றியே சிலஆலயங்களில் மெல்லியதுணியினால் வாயைக்- கட்டிக்கொண்டு அர்ச்சகர் ஈசனிடம் செல்லும் வழக்கம்உள்ளது. போதகர் எனும் ஒருவர் படித்துக்கூறி நினைவுப்படுத்திட, அர்ச்சகர் எனப்படுவர் சொல்லியபாட்டின் பொருளைஉணர்ந்து, நினைத்துஉரியமுறையில் உரியமலரை இறைவன் திருவடிகளில் அர்ப்பணித்திடவேண்டும். அர்ச்சனை மந்திரங்களைப்படிப்பவரும் மனச்சஞ்சலமின்றியும், அக்ஷரலோபமின்றியும் (எழுத்து-விடுபடாதவாறு) இனியகுரலுடன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பக்தியோடு படித்தல்வேண்டும். நாமாவளியைப் படிப்பவர், அருச்சனையைச்செய்பவர், இருவருமே அச்சமயத்தில் தமதுஉடலைச்சொரிதல், தலை அசைத்தல், பேசுதல், ஜாடைகாட்டுதல், கொட்டாவி விடுதல், மூக்குச்சிந்துதல் முதலியவற்றைச் செய்யக்கூடாது. இவைசெய்யப்படின் இறைவனையும், சாத்திரத்தையும் அவர் நிந்தித்ததாகும்.

அர்ச்சனையின் உபசரிப்புகளும், பயனும்.

அர்ச்சனையின் முடிவில் மஹாஹவிஸ் எனப்படுகிற பெருமளவிலான அன்னத்தை (அன்னப்பெரும்படையல்) நிவேதனம் செய்யவேண்டும் என்கிறது சூக்ஷ்மாகமம். மேலும் பலவித பக்ஷ்யங்கள், தேங்காய், பழம், தாம்பூலம் இவைகளையும் உடன் அவசியம் நிவேதனம் செய்தல்வேண்டும். நைவேத்யம் குறைந்தால் துர்பிக்ஷமுண்டாகும். தேங்காய் வெற்றியையும், பழம் இஷ்டஸித்தியையும், வெற்றிலைப்பாக்குஏலம் முதலியவைசேர்ந்த தாம்பூலம் சோபையையும், நீராஜனதீபாராதனை எனப்படுகிற கற்பூரஹாரத்தி தேஜஸையும் (தெய்வீகப் பேரொளியையும்) அளிக்கும். அர்ச்சனையின் முடிவில் தக்ஷிணையினாலும், நிவேதனத்-திரவியங்களாலும் ஆசார்யரை மகிழ்விக்கவேண்டும். தக்ஷிணைகுறைந்தால் கர்மாபயனற்றதாக ஆகும். கிரியைகளின்குறைவு ஆசாரியனையும், மந்திரக்குறைவு ரித்விக்குகளையும், தக்ஷிணைக்குறைவு கர்த்தாவையும் பாதிக்கும் என்கிறது ஸ்மிருதிவாக்கியம். இவ்விதம் அர்ச்சனைசெய்வதில் அறியாமையாலும், மறதியினாலும் மாறுபட்டஅறிவினாலும் (மனப்பிராந்தி) பலகுறைகள் உண்டாகும். அவ்விததோஷங்கள் நீங்கவே (கலசநீராட்டல்) ஸ்நபனம் செய்யப்-படுகிறது. இந்த ஸ்நபனம் 9, 25, 50, 108, 300, 500, 1008 என்ற கணிப்புமுறைகளால் ஒன்பது வகைகளாக பலவகைப்படுகிறது. 1000 எண்ணிக்கையில் செய்யப்படும் சஹஸ்ரகலசஸ்நபன அபிஷேகம் உத்தமத்தில் உத்தமமாகும். மேலும் ராஜ்யபட்டாபிஷேககாலத்திலும், அவரவர்களின் பிறந்தநக்ஷத்திரத்தில் ஜன்மதினத்திலும், மற்றுமுள்ள மங்களகாரியங்களிலும், பரிகாரச் செயலாகிய பிராயச்சித்தங்களிலும், பாவங்களைப் போக்கவல்ல ஸ்நபனத்தைச் செய்ய வேண்டும் என்கிறது காரணாகமம். எவ்விதக்குறைவுமின்றி அர்ச்சனை செய்வதால் தெய்வஸாந்நித்தியமுண்டாகி அதனால் இம்மைப்பயன்கள், மறுமைப்பயன்கள் அனைத்தையும் அடைந்து இன்புற்றுவாழலாம் என்பது சைவாகம முடிவாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூநிறத்தின் தனிச்சிறப்புப்பயன் :

மோசக்ஷதம் ஸாத்விகம் சைவ பௌஷ்டிகம் ராஜஸம் ததா.
மிச்ரபுஷ்பாணி ஸித்யர்த்தம் பத்ரம் புத்ரவிவர்த்தனம்.

(காரணாகமம்)

வெள்ளைநிறப்பூக்கள் முக்தியையும், செந்நிறப்பூக்கள் வளத்தையும், மஞ்சள் நிறப்பூக்கள் இஷ்டசித்திகளையும், இலைகள் மகப்பேரையும் தரும் என்கிறது காரணாகமம். பூசையில் வெள்ளைநிறபூக்கள் சாந்தியைத்தருவன. மஞ்சள்நிறபூக்கள் புஷ்டியை, வளத்தை தருவன. சிகப்புநிறபூக்கள் வித்வேஷணத்தையும், நீலநிறபூக்கள் ஸர்வசீகரத்தையும் தருவன என்று ஆகமம் கூறுகினறது.

சுவேதம் சாந்திகரம் ஞேயம் பீதம் யத் பௌஷ்டிகம் ததா.
ரக்தம் வித்வேஷணம் புரோக்தம் கிருஷ்ணம் ஸர்வ வசீகரம்.

(ஆகமம்)

பத்திரபுஷ்பங்களின் அதிதேவதைகள். (பூவின் தெய்வாம்சம்) :

மலர்கள் யாவும் தெய்வாம்சம் பொருந்தியவை. அரியமலர்களின் உரியதெய்வத்தை ஆகமத்தின்படி இனி காண்போம். கொங்கம்பூவில் சரஸ்வதியும், அலரிப்பூவில் பிரம்மதேவரும், வன்னிமலரில் அக்னிதேவரும், நந்தியாவர்தையில் நந்திதேவரும், புன்னைப்பூவில் வாயுதேவரும், எருக்கம்பூவில் சூரியதேவரும், செண்பகப்பூவில் சுப்ரமணியரும், வில்வத்தில் லக்ஷ்மீதேவியும், கொக்கிறகம்பூவில் மகாவிஷ்ணுவும், மாவிலங்கையில் வருணதேவரும், மகிழம்பூவில் சரஸ்வதி தேவியும், வாகைப்பூவில் நிருருதிதேவரும், ஜாதிப்பூவில் ஈசானதேவரும், செங்கழுநீர்பூவில் சூரியனும், அல்லிப்பூவில் சந்திரனும், மந்தாரைப்பூவில் இந்திரனும், மதுமத்தையில் (இலுப்பைப்பூ), குபேரனும், நாயுருவிப்பூவில் யமதருமரும், தாமரைப்பூவில் சிவனாரும், அருகம்பூவில் விநாயகரும், கூறப்பட்ட ஏனைய நறுமணம்மிக்க புஷ்பங்களிலும், சிறப்பாக நீலோற்பலத்திலும் உமாதேவியாரும், அதிதேவதையாக விளங்குகிறார்கள். ஆகையால் இம்மலர்களை தூயவராக இருந்து உரியமுறையில், தெய்வசிந்தனையுடன், நாமமந்திரம்ஓதியவாறு வழிபாட்டிற்காகப் பறித்து, மந்திரத்தால் சுத்திகரித்து, பின்பு இவற்றை இறைவருக்கு மந்திரம்கூறியே அணிவிக்க வேண்டும். மந்திரம் கூறாமல் மலர்களை சேர்க்கக்கூடாது. ஓம் ஹாம் ஹிருதயாய நம: என்று இதயமந்திரத்தால் எப்போதும் எல்லாதெய்வங்களுக்கும் பூக்களை சாத்திடுவது சிறந்தமுறை ஆகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மலர்த்தொண்டின் மஹிமை :

கிராமங்களிலும், கோயில்களிலும், புஷ்பநந்தவனத்தை புதிதாக ஏற்படுத்தியவர்களும், அதனைப்பாதுகாப்பவர்களும், அங்குபத்திரபுஷ்பங்களை உண்டுபண்ணி பயிர்செய்பவர்களும், விதிமுறைப்படி அப்பூக்களைக்கொய்து, பூசைக்கு எடுத்துக்கொடுத்தவர்களும், பூமாலை-களாகத் தொடுத்துக்கொடுத்தவர்களும், அவைகளால் பக்தியுடன் அருச்சித்தவர்களும், போக-மோக்ஷங்களை நிச்சயமாக அடைவார்கள்என்று சைவாகமநூல்கள் மலர்த்தொண்டின் மாபெரும் பயனைச்சிறப்பாகக் கூறுகின்றன.

மலர்களின் தகுதி விவரம். (புஷ்பதாரதம்யவிதி)
தஸ்மாத் தர்பசுமந்து மாலதிசுமம் வ்யாக்ராதி தஸ்மாத் பகம்
துத்தூரம்து தத்ஸஹஸ்ரமதிகம் துரோணம்ஹி சங்கம் தத:.
பஞ்சாசத் சதபங்க்திதஸ் ஸமதிகம் துரோணம் பிருஹத்சோத்பலம்
ஸர்வஸ்மாத் அதிகம்ஹி பக்திகுசுமம் ப்ரோக்தம்ச காலோத்தரே.

(காலோத்தராகமம்)

பரமேச்வரர் முருகப்பெருமானுக்கு அருளிய மேற்கண்ட காலோத்தராகம சுலோகத்தாலும், அருள்உள்ளம்கொண்டு அருளிய அஜிதாகம மகுடாகமவசனங்களாலும், மலர்களுக்குள் விளங்கும் தாரதம்மியம் பற்றி இனி காண்போம். சாமானிய புஷ்பங்களைக்காட்டிலும், ஒரு சிகப்புநிற அலரிப்பூ ஆயிரம்மடங்கு உயர்ந்தது. அதனினும் ஒரு வெள்ளெருக்கம்பூ உயர்ந்தது. அதனினும் அதிகம் உயர்ந்தது ஒரு வில்வப்பூ. அதன் ஆயிரத்தினுமதிகம் மூன்றுஇதழ்களுடன் கூடிய ஒரு வில்வஇலை. அதன் ஆயிரத்தினுமதிகம் நூறுஇதழோடுகூடிய ஒரு செந்தாமரைப்பூ (வெண்டாமரைப்பூ, அதனினும் உயர்ந்தது. நாயுருவிப்பூ (அபாமார்க்கம்) என்கிறது அஜிதாகமம். அதனினும் ஆயிரம்மடங்கு உயர்ந்தது ஒரு தர்பைப்பூ. அதனினும் ஆயிரம் மடங்கு அதிகத்தரம்கொண்டது மாலதி ஒரு மல்லிகைப்பூ, அதன் ஆயிரத்தினும் அதிகம் ஒரு (கண்டங்கத்திரிப்பூ). புலிநகக்கொன்றைப்பூ அதில் ஆயிரத்தினுமதிகம் ஒரு கொக்குமந்தாரைப்பூ அதனினும் ஆயிரத்தினுமதிகம் ஒரு தும்பைப்பூ. அதன் ஆயிரத்தினும் அதிகம் ஒருபெருந்தும்மைப்பூ. காசித்தும்பை அதன் ஆயிரத்தினுமதிகம் ஒரு நீலோத்பலம். (கருநெய்தல்பூ) பத்திரஜாதிக்குள் மருக்கொழுந்து எனப்படுகிற தவனம் சிறந்தது. அதனினும் சிறந்தது, மூன்றுதளமுடைய முற்றிய வில்வபத்திரம் ஆகும். வில்வமரத்தின் பூவைவிட, முற்றிய இலையே உயர்ந்ததாக கூறப்பட்டுள்ளமையால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இலையை மட்டுமே பலரும் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். விதித்துக்கூறப்பட்டுள்ளதால் பூவும் ஏற்புடையதே ஆகும். சிலர் முள்உள்ள மரம் செடிகளின் ரோஜா முதலிய மலரை சிவனுக்கு ஏற்பதில்லை.

(கருநெய்தல் (கருங்குவளை) மலர்மஹிமை.
(நீலோத்பலபுஷ்ப விசேஷம்)

மூவுலகில்உள்ள அனைத்து புஷ்பங்களைக்காட்டிலும் மிகவும் உயர்ந்தது, நீலோத்பல புஷ்பமே (கருநெய்தல்பூ), என்றும், இதனைக்காட்டிலும் மேலான வேறுபுஷ்பமோ, இதற்குச் சமமான புஷ்பமோ மூவுலகிலும் எதுவும் இருக்கவில்லை என்றும்அறிக. இதனினும் சிறந்ததாக உலகில் ஒன்றுஉண்டுஎன்றால் அது, நாம் இறைவனிடம் கொண்டுள்ள ஒப்பற்றபக்தியாகிய அன்பு ஒன்றாகத்தான் இருக்கமுடியும் என்கிறது காலோத்தராகமம். இதனைக்கூறும் சான்று,

ஸர்வேஷாம் புஷ்பஜாதீநாம் ப்ரவரம் நீலமுத்பலம்.
நீலோத்பல ஸமம் புஷ்பம் ந பூதம் ந பவிஷ்யதி.
நீலோத்பல ஸஹஸ்ரேப்யோ பக்திரேவ விசிஷ்யதே.

(காலோத்தரம்).

இதனால் பூசையில் தெய்வபக்தியே ஈடுஇணையற்றது என்பதையும் உணர்ந்துஅறிக. நீலோத்பலம்எனும் கருநெய்தல்பூவானது ஒருவருடகாலம்வரை நிர்மால்யதோஷம் அற்றது எனும் சிறப்புத்தகுதிபெற்றுது. கல்ஹாரம் என்றும் பெயருள்ள இம்மலர் பூசையில்,நிர்மால்யமாகாது.நீர்நிலைப்பூவான இதன்மகிமையை அறிந்து இதனால் பூசிப்பவன் செல்வத்தையும், நன்மக்களையும் பெறுவான் என்பதையே வேதம் யோஅபாம்புஷ்பம் வேத புஷ்பான் பிரஜாவான் பசுமான் பவதி என்று சிறப்பித்துக்கூறிஉள்ளதாலும் உணரலாம். இம்மலர் இக்காலத்தில் கிடைப்பதற்கு அரியதாய் உள்ளது. இது அல்லிமலரைப்போல் அதிகம் நீண்டதாய் மிகவும் மென்மையுடன் நீரோடைநீர்நிலைகளில் மலரும் நீலநிறப்பூவாகும்.

பில்வம் துளசி துத்தூரம் கல்ஹாரம் ஹேமபுஷ்பகம்.
தேவஸ்ய சிரசி நியஸ்தம் க்ஷாளயேத் து புனப் புன: .

(ஆகமசங்கிரஹம்)

மேற்கண்ட வசனத்தின்படி வில்வம், துளசி, பொன்னூமத்தைப்பூ, பொரசம்பூ, கருநெய்தல்பூ மற்றும் தங்கத்தாலான உரியபூவகைகள் ஆகியவை பூசையில் ஒருமுறை தேவனின் தலையில் சூட்டி வைத்தபின்பும், அடுத்தகாலபூசையில் மறுபடிமறுபடியும் இவற்றை நீரால்கழுவி, மீண்டும்மீண்டும் பலமுறை இவைகள் அணிவித்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உபயோகிக்கத்தக்கவை, என்று சிவாகமம் கூறுவதால் இவற்றின் நிர்மால்யம் என்று மற்றமலர்களைப் போன்று விலக்குபெறாததெ இவற்றின் தனிச்சிறப்பும், மகிமையையும் உள்ளதை நன்குஉணர்த்தகிறது. சில சிவாகமங்கள் (பத்மம்) தாமரைமலரையும், சிலசிவாகமங்கள் (கரவீரம்) செவ்வலரிப்பூவையும், அனைத்து பூவகையிலுமுயர்ந்தபூவாகத் தெரிவிக்கின்றன. இதற்கானசான்றுகள் முறையே, "ததைவ புஷ்பஜாதீநாம் பத்மபுஷ்பமுதாஹ்ருதம்" என்று சுப்ரபேதாகமம் தாமரையையும், "புஷ்பஜா- திஷு ஸர்வேஷு கரவீரம் விசிஷ்யதே" என்று காரணாகமம் அலரியையும், மிகவும் உயர்ந்ததாகத் தெரிவிக்கின்றன. வைணவஆகமங்களும் தாமரையை சிறப்பானதாக கூறுகின்றன. சாக்தஆகமத்தில் நவயாமளதந்திரநூல்கள் தேவிக்கு கரவீரம் எனும் சிவப்புநிற அலரிப்பூவை மேன்மையான மலராய் கூறுகின்றன.

புஷ்பம் சாத்தும்முறை. (புஷ்பார்பனவிதி)

சிவபூசையின்போது மலரைஅணிவிக்கும் சாத்துமறையானது, பூசிப்பவர் தனது வலது-கையின், சிறுவிரல் மற்றும் மோதிரவிரல் இரண்டின்நடுவில் அணிவிக்கவேண்டிய, புதுமலரை நெருக்கி எடுத்துக்கொண்டு, (அதனருகில் உள்ள நடுவிரலை விலக்கிவைத்து) பெருவிரல் மற்றும் சுட்டுவிரல் எனும் இரவிரல்களைக்கொண்டு, முன்பு பூசிக்கப்பட்டுள்ள தெய்வத்தின் தலையில்உள்ள மாசற்ற, உயர்ந்தபிரசாதமாகிய நிர்மால்ய பூஷபத்தை, லிங்கத்திலிருந்து எடுத்து நிக்கிவிட்டு, நீக்கிய அக்கணத்திலேயே, முன்பே இருவிரலின் இடையில்வைத்துள்ளபுதுமலரை அணிவித்திடவேண்டும் என்கிறது காமிகாகமம் மற்றும் சூக்ஷ்மாகமம் முதலியன.

> கநிஷ்டா நாமிகா மத்யே நவ புஷ்பம் துஸங்கிரஹேத்.
> அங்குஷ்ட தர்ஜநீப்யாம் து நிர்மால்யம்ச விஸர்ஜயேத்.
> விஸர்ஜனஸ்ய தத்காலே புஷ்பம் மூர்த்நிச விந்யஸேத்.
> (காமிகமம்)

ஒருபோதும் சிவலிங்கத்தின்தலையில் ஒன்றுகூட பூ இல்லாதவாறு, (சூனியமாக) இருத்தலும், அவ்விதம் தரிசிப்பதும் அடியர்களான நமக்குஆகாதது என்று சூக்ஷ்மாகமம் நமக்கு சிவார்ச்சனைச்செயலின் நுட்பத்தை விளக்கியுள்ளது. இவ்விதமே இதனைக்கிரணாகமமும் வலியுறுத்துகிறது. இதற்கான சான்று,

> ந சூன்ய மஸ்கதம் லிங்கம் குர்யாத் தத்ர கதாசந.
> (கிரணாகமம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மேலும் பூசையின் போது மலர்களை ஒருபோதும் சிதைத்தும், கிள்ளியும் அணிவித்தலாகாது. வில்வம், துளசி இரண்டையும், முழுஇதழாகமட்டுமே அணிவிக்கவேண்டும். பிறஇலைகளைப் பிய்த்தும், தனிஇதழ்களாகவும் அர்ச்சிக்கலாம். ஒருபோதும் பூவைப்பிய்த்து பூசிக்கக்கூடாது. அவ்வாறு பூவை பலதுண்டுகளாகச் சிதைத்துப்பூசித்தால் அச்செயல் செய்பவருக்கு தௌர்-பாக்கியத்தையும், பிரும்மஹத்திதோஷத்தையும் ஏற்படுத்தும் என்று ஆகமநூல்கள் கூறுகின்றன.

பத்ரச்சேத ப்ரகுர்வாண: புஷ்பச்சேதம் ந காரயேத்.
புஷ்பச்சேதம் ந குர்வீத பிரம்ம ஹத்யாதி ஸம்பவாத்.

(ஆகமாரசங்கிரஹம்)

இதன்படி, இக்காலத்தில் மஞ்சள்சாமந்தி, ரோஜா முதலியவற்றை தனிஇதழ்களாக்கி பூசிப்பது தவிர்க்கத்தக்கதாகிறது. ஆயினும் தானாக உதிர்ந்தரோஜா, செண்பகம் இவற்றின் தனிஇதழ்கள் ஏற்கத்தக்கவைஆகும். தாமரையை மட்டில் தனிஇதழ்களாக பிரித்துக்கொண்டும் பூசிக்கலாம் என்றும், ஆயினும் அது முழுஇதழாக இருத்தல்வேண்டும் என்றும், ஒருதாமரை மலரிதழைத்துண்டித்து அர்ப்பணிக்கக்கூடாது என்பதும் இங்கு அறியத்தக்கது.

புஷ்பச்சேதாத்து தௌர்பாக்யம் பத்ரச்சேதாத் ரிபுக்ஷய:.
பில்வஸ்ய ச துளச்யாஸ் ச தளைச் சங்கர மர்ச்சயேத்.

(மந்திரமகோததி)

பத்ரபுஷ்பங்களை சிதைத்ததுப்பூசித்தலின் பயனை ஆகமங்கள் விளக்கிஉள்ளன. இதன்படி புஷ்பச்சேதம்துர்பாக்யத்தையும், பத்ரச்சேதம் ரிபுக்ஷயத்தையும் (எதிரியின் அழிவையும்) தரும் சிவாகமங்கள். மேலும் பூசையில் இறைவனுக்கு அருச்சனையின்போது அர்ப்பணிக்கும் பூ, இலை, பழம் இவற்றை ஒருபோதும் கீழ்முகம்உள்ளவாறு கவிழ்த்து சாத்தக்கூடாது. பூக்களை மேல்நோக்கியவையாகவே சாத்தவேண்டும். பத்ரம், புஷ்பம், பழம் இவற்றை பூசையில் கீழ்முகமாக சாத்தாமல் அவற்றை இயல்பாக எந்தநிலையில் அவை விளங்கினவோ அவ்வாறே இறைவனிடத்திலும், பூசையில் அர்ப்பணிக்கவேண்டும். இவ்வாறின்றி கீழ்முகமாய் சாத்தி-வைத்துப்பூசிப்பது, பூசிப்பவருக்கு துக்கத்தைத்தரும் என்கிறது ஆகமம். மேல்முகமாய் பூவை சாத்திவைத்திட சிவலிங்கத்தின்தலையில் ஒருசாண்அளவில், அதன்உச்சியில் வட்டமான பூமாலைக்கொண்டையை முதலில்வைத்து, அதற்குப்பின்பு, அப்பூமாலைவட்டநடுவிலே மேல்-நோக்கியதாக, தலைஉச்சியில்மலர்களை அணிவிக்கவேண்டும். இதனையே இண்டை சாத்துதல் என்பர் ஆகமமரபினர். இண்டாதிபிர் புஷ்பமாலாதி அப்யர்ச்ய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்பது ஆகமாசார்யவசனம். புஷ்பாஞ்சலி மற்றும் லக்ஷார்ச்சனை முதலியவற்றைச் செய்யும் காலங்களில் இது, விதிவிலக்குஉடையதாய் கீழ்நோக்கிவிழுவது குற்றமாகாது. இதற்கான ஆகமசான்று,

புஷ்பம் ச யதி வா பத்ரம் பலம் நேஷ்ட மதோ முகம் .
துக்கதம் தத் ஸமாக்யாதம் யதோத்பன்னம் ததா அர்ப்பயேத்.
அதோமுகார்ப்பணம் நேஷ்ட்டம் புஷ்பாஞ்ஜலி விதிம் விநா.
லக்ஷபூஜாதிஷு புனர் புஷ்பம் ஏகைக மர்ப்பயேத்.
ஸமுதாயேந சேத் பூஜா லக்ஷபுஷ்பார்ப்பணம் நதத்.

லக்ஷபுஷ்பார்ச்சனையின் போது பூக்கள்பலவகையாக இருந்தால், வகையைக் கலக்காமல் ஒவ்வொருவகையாக எடுத்துச்சாத்தி, உபயோகித்துஅருச்சிக்கவேண்டும் என்கிறது சிவாகமம். இதனால் உதிரிப்பூக்களை கதம்பமாக ஒன்றாக கலக்காமல், தனித்தனியாக ஒவ்வொரு வகையாகவே கையாளுதல்முறை என அறியலாம்.

இயற்கையில் மரம், செடியில் விளங்கியவாறே மேல்முகமாக சிரத்தையுடன் பூவை வைத்திட வேண்டும் என்கிறது. ஆனால் புஷ்பாஞ்சலியில் மலர்கள் கீழ்முகமாய் சேர்ந்தால் இக்குற்றம் இல்லை என்கின்றன. மந்திரமகோததி மற்றும் பலஆகமநூல்கள். இதற்கான சான்றுகள்.

பத்ரம் புஷ்பம் பலம் தேவே ந ப்ரதத்யாத் அதோமுகம்.
புஷ்பாஞ்சலௌ ந தத் தோஷ: ததா பர்யுஷிதஸ்ய ச.
(மந்திரமகோததி)

மலர்களைச்சிதைக்காமல் சாத்துவதேமுறை என்பதனை புஷ்பவிதிபாடல் உணர்த்துகிறது.

நறை மலர்ப் பொருட்டு நன் நாளம் போக்கியே
குறை யுறக் குற்றமாங் குறைப டாவகை
நிறை வுறச் சாத்தும் நீரின போதெலாம்
புற விதழ் போக்கினும் புனித மென்பவே. (புஷ்பவிதி)

இப்பாடலின்படி, பூக்களின் நடுவேயுள்ள, கேசரம், மகரந்தம், உளை, எனும் பெயர்களையுடைய நூலிழை போன்ற, மலரின் உறுப்புகள் இல்லாமல் இறைவனுக்குச் சாத்துதல் குற்றமாகும். இதன் பயனை கூறுகையில்,

பத்ரச் சேதைஸ்து ஸம்பூஜா ராக்ஷஸாநாம் விநாசனம்.
புஷ்பச் சேதைஸ்து ஸம்பூஜா ஸர்வஸித்திஹரீ பவேத்.
(காலோத்தராகமம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மேற்கண்ட சுலோகப்பொருளாவது இலைகளைக்கிள்ளி பலதுண்டுகொக்கி பூசித்தலால் ராக்ஷஸர்கள் அழிவார்கள், ஆதலால் இது குற்றமாகாது. ஆனால் இவ்வாறே பூவைக்கிள்ளி பிய்த்துப்பூசிப்பதால் எல்லா செல்வங்களும் அழிந்துபோகும், ஆதலால் பூவைகிள்ளக்கூடாது என்கிறது காலோத்தராகமம். தாமரை முதலிய நீர்ப்பூக்களை, அவற்றைக்கவசம்போல மூடியுள்ள சிலபுறஇதழ்களைமட்டும் நீக்கிவிட்டுச் சாத்தலாம் என்பர் சிலர்.

துளசியின் மகிமை.

பூஜைக்குரிய பத்திரங்களுக்குள் மிகவும் சிறந்த பத்திரம் துளசி ஆகும். ளசி ஒருதெய்வீக மூலிகை ஆகும். காக்கும் கடவுளான திருமாலின் வைணவத் திருக்கோயில்-களின் ஸ்தலதாவரமாக துளசி விளங்கும். இது நீருள்ள இடங்களிலும், வறண்ட பூமியிலும் எங்கும் வளர்ந்துஇருக்கக்கூடிய மூலிகையாகும். துளசி எல்லாகாலங்களிலும் கிடைக்கும் தனிச்சிறப்புபெற்றது. இவற்றில் கருந்துளசியே மிகவும் உயர்ந்தபயன் தரவல்லது. துளசி பலவகையாக பலபெயரிகளில்உள்ளது. இவற்றில் தாய்த்துளசி, நாய்த்துளசி முதலியன விவசாயிகளுக்கு, பயிர்களுக்கும், மருத்துவத்திற்கும் ஏற்றது. வெண்துளசி, கருந்துளசி, பெருந்துளசி, ராமதுளசி, கிருஷ்ணதுளசி, சிவதுளசி, வனதுளசி, சிறுதுளசி முதலான 20-க்கும் மேற்பட்டவகைகளில் இப்பச்சிலை விளங்கி 100-க்கும் மேற்பட்ட வகையில் மருத்துவ-குணத்துடனும், தெய்வீகஅருட்பயனை அளிக்கும் வல்லமையுடனும் விளங்குகிறது. இதற்கு தமிழில் துழாய் என்று பெயர். இதனை திருத்துழாய் என்றே வைணவர் போற்றுவர். இந்தப் புனிதப்பச்சிலைக்கு சமஸ்கிருதமொழியில் பலபெயர்கள் உள்ளன. அப்பெயர்கள் வருமாறு, நல்ல சாறுஉள்ளதாகையால் இது "சரஸா" என்றும், எளிதில் எங்கும், இதுஎப்பொழுதும்கிடைப்பதால்"சுலபா"என்றும்,பலபூங்கொத்துகளைக் கொண்டுள்ளதால் "பகுமஞ்சரி" என்றும், விஷ்ணுவுக்கு மிகவும்பிரியமானதாகையால் விஷ்ணுவல்லபா" என்றும், "விஷ்ணு-பிரியா" என்றும், அதிகஇதழ்களைக் கொண்டுள்ளதால் "பகுபத்திரி" என்றும், நோய்க்கிருமி-களையும், துயரங்களையும் இது போக்குவதால் "அபேரராக்ஷஸி" என்றும், வயிற்றுவலியைப் போக்கவல்லதாகையால் "சூலக்னி" என்றும், பூமியில் புனிதத்தன்மையை தோற்றுவிப்பதாலும், இதனடிமண் எப்பொழுதும் புனிதமாவதாலும் இது "பவானி" என்றும், கிராமப்பகுதிகளில் கிடைப்பதால் "கிராம்யா" என்றும், தவமிருந்து ராமகிருஷ்ணர்களின் அன்பைப்பெற்றவள் ஆதலால் இது "ஹரிப்ரியா" என்றும் மேலும் பலபெயர்களால் நூல்களில் போற்றப்பட்டு உள்ளது. துளசிஇலையின்சாறு, உட்கொள்வதால் ஜலதோஷம், கபம், வயிற்றுஉளைச்சல், எலும்புகூட்டுச்சுரம், தாகம், மாந்தசுரம்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ருசியற்றதன்மை போகும். குழந்தை முதல் முதியோர் வரை சளீநீங்கி நன்கு சுவாசித்து ஆரோக்கியம்பெறஉதவும் உன்னத மூலிகை துளசியே ஆகும். மேலும் வீட்டில் துளசிச்செடியை வளர்த்தால், அவர்களின் பாவங்கள்நீங்கும், இதன் காற்றை சுவாசித்தலால் உடல்நலம் வளம்பெறும், தீயவர்களின் கண்பார்வை அகலும், ஏவல், பில்லி சூனியம் முதலிய தீயஎதிரிகளின் ஆபிசாரச்செயல்கள் துளசி இருக்கும் இடத்தை அணுகாது. துர்தேவதைகள் விலகியேநிற்கும். துளசியை பூசைக்காக பறிக்கும்போது கொத்து-கொத்தாக பறிக்கக்கூடாது. ஒவ்வொருதளமாக முழுஇலையாக மட்டுமே பத்ரத்தையும்,பூவை அதன் ஒருஈர்க்கு மட்டுமாகவே பறித்து பயன்படுத்தவேண்டும். துளசியை குளித்துவிட்டு சுத்தமாக இருக்கும்பொழுது மட்டுமே பறிக்கவேண்டும். ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, மாலைநேரம், இரவுநேரம், மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, புண்யகாலம், சிராத்ததிதிதினம் இவைகளில் (அன்று) துளசியைப்பறிக்கக்கூடாது. இவைகளுக்கு முன்னதாக பறித்துவைத்துக்கொள்ளவேண்டும். உலர்ந்தாலும், பூசித்ததானாலும், நீரால்கழுவி மீண்டும் பூசையில் உபயோகிக்கத்தக்க சிறப்புமகிமைஉள்ளது துளசி. துளசிஊறிய நீரைப்பருகுபவர்கள் எல்லாபாவங்களிலிருந்தும் விடுபடுவார்கள் என்பது உறுதி. இத்தெய்வீகப்பச்சிலைச் செடியானது அனைத்துஉறுப்புகளும், பூசைக்கும், முதலுதவிப்பாதுகாப்பிற்கும், மருத்துவத்திற்கும் பயன்படக்-கூடிய தனிச்சிறப்புஉடையவை. துளசியின் இலை, பூ, நரம்பு, விதை, தண்டு, வேர், முதலிய ஒவ்வொரு துளசிவகையும் பல்வேறுவகையில் பல்வேறு நோய் தீர்த்து அருளுபவை. கணவனைப்பெறவிரும்புவோரும், பதிவிரதாதன்மையைகாக்கவிரும்பும் பெண்களும் தினமும் காலைவேளையில் தலைமுழுக்காடி, துளசிசெடியை மஞ்சள்நீர்ஊற்றி, பூசித்துப்போற்றி வலம் வந்து விரும்பும் பயனனை விரைவில்பெறலாம். இந்த துளசியை மங்களதேவியின் அம்சமாகக் கருதிவழிபடவேண்டும். துளசியில், அதன் அடிப்பகுதியில் ஸகலபுண்ணியத்தீர்த்தங்களும், நடுவில் ஸகலதேவதைகளும், முனைகளில் ஸகல வேதாகம-சாஸ்திரவித்தைகளும் இருந்து அருளுவதாலும், விஷ்ணுவிற்குப் பிரியமானவாக விளங்குவதாலும், துளசி யாவராலும் பூசிக்கத்-தக்கவள். கீழ்காணும் சுலோகத்தைச் கூறிவழிபடலாம்.

துளசியின் துதி :

யன்மூலே ஸர்வதீர்த்தானி யன்மத்யே ஸர்வதேவதா:
யதக்ரே ஸர்வவேதாஸ்ச துளசீம் தாம் நமாம்யஹம்.
நமஸ் துளசி கல்யாணி நமோவிஷ்ணுப் பிரியே சுபெ
நமோ மோக்ஷப்ரதேதேவி நமஸ் ஸம்பத் ப்ரதாயிகே.

(ஸ்துதிமஞ்ஜரீ)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

துளசியின் பிரார்த்தனை சுலோகம் :

நமஸ்தே துளசீதேவி ஸர்வாபீஷ்ட பலப்ரதே.
நமஸ்தே திரிஜகத் வந்தியே நமஸ்தே லோகரக்ஷிகே.

இவற்றைக்கூறி போற்றிவணங்குவோர் இஷ்டசித்தியைப்பெறுவர். புராணங்கள் துளசிச்செடிக்கு பல கதைகளைக்கூறி அதன்மதிப்பையும், மகத்துவத்தையும் நமக்கு போதிக்கின்றன. சைவ, வைணவ ஆகமங்கள்யாவுமே ஸகலதேவதைக்கும், துளசியை பூசையில் சிறப்புபத்திரமாக கூறி உள்ளன. விநாயகர் இத்தேவியை தாய்அம்சமாய் கருதுவதால் தினசரி விநாயகர் பூசைக்கு மட்டும் துளசிக்கு விலக்களித்தும், ஆவணிமாத மகாசதுர்த்தி, தினசிறப்புபூசையில் மட்டும் கணபதிக்கு ஏற்றதுமாக கூறப்படும். மற்றும் உத்ஸவஅலங்காரம் முதலிய விசேஷ காலங்களில் சேர்த்திடவிதிக்கப்பட்டுஉள்ளது. சிவாகமங்களும் இதனைப்போற்றி சிவபூசையில் துளசிச்கு திங்கட்கிழமைக்கு உரிய சோமவாரபத்திரம் எனும் சிறப்புத்தகுதியை அளித்துள்ளது. இது திருமாலுக்கு விசேஷ மாகவும், மற்றய சிவன், கணபதி, முருகன் முதலிய தெய்வங்களுக்கு சிறப்பானதாகவும் உள்ளதே இதன் ஒப்பற்றமகிமை என்றுஉணரலாம். இவ்விதம் சைவாகமங்-களில் சிவபூசைக்கு வில்வத்திற்கு நிகராக துளசியைக்கூறிவிதித்துள்ளதால் துளசி மஹிமையை அறிந்து பறித்துபூசிக்கவேண்டும். அவ்வாறே வில்வத்தால் விஷ்ணுவுக்கு அருச்சனை செய்வதும் சிறப்புதருவதாகும். யாவரும் அதிகாலை துயிலெழுந்து நீராடித் துளசியை வணங்கிப்பெற்று இறைவர்க்கொரு பச்சிலையாக துளசியை இறைவனுக்கு சிவன் அல்லது விஷ்ணுவுக்கு சமர்ப்பணம் செய்து பெற்றோருடன் இறையை வணங்கி வாழ்வதே அறநெறி வாழ்வியலாகும். இக்கருத்தை ஓர்நீதிநெறிச்செய்யுள் வாயிலாகவும் உணரலாம்.

வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்.
நல்லறமும் ஒண்கருமம் சிந்தித்து வாழ்வதனை
தந்தையும் தாயும் தொழுதொழுக என்பதே
முந்தையோர் கண்டமுறை. (நீதிசெய்யுள்)

பூவகைகளின் பூசைப்பயன்கள்

(புஷ்பார்சனபலம்) :

சிறப்புமலர்களிடம்உள்ள சிறப்புப்பயன்தரும் சிறப்புமகிமையைச் சிவாகமங்கள் தெரிவிக்கின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தூர்வா பிராத்ருவதம் ஹரேத் திவிஜவதோ நஸ்யேத் திலை ரர்ச்சநாத்.
துரோணைர் கோவத நாச ஏவ ஜனனீ ஹிம்ஸாக்ந மாரக்வதம் .
அன்யஸ்திரீ கமனக்ன மர்க்க குசுமம், நீலோத்பலம் வாக் கிருதம் .
ஹன்யாத் தோஷ மதோ நவக்ரஹ கிருதம் தோஷம் தஹேத் குங்குமம்

(சிந்தியாகமம்)

மேற்காணும்சிந்தியாகமவசனப்படி, புஷ்பார்ச்சனையின் சிறப்புப்பயன்களை இனி அறிவோம். அவை, அருகம்புல்லைக் கொண்டு அருச்சிப்பதால் ஸகோதரனைக்கொன்ற தோஷம்விலகும். தும்பைப்பூவால் அருச்சித்தலால் பசுவைக்கொன்றபாவம்அகலும். எள்ளுப்-பூவினால் அருச்சித்தால் பிராமணரைக்கொன்றபாவம்நீங்கும். சரக்கொன்றைப்பூவால் அருச்சித்தால் தாயைத்துன்புறுத்திய மற்றும் தாயைகொன்றதோஷம் நீங்கும். வெள்ளை-எருக்கம்பூவால் அருச்சித்தால் பிறபெண்களைக்கூடின பரஸ்திரீதோஷம்நீங்கும். நீலோத்பல-மலர்களால் அருச்சனைசெய்தால் தமதுவாக்கினால்செய்யப்பட்ட குற்றங்களான சத்தியம்-மீறியது, சத்தியம்தவறியது, பொய்யுரைத்தது, பிறரை சபித்திட்டகுற்றம் முதலிய வாக்கினால் இழைத்தபாவம் யாவும்நீங்கும். குங்குமப்பூவால் அருச்சனைசெய்தால், நவகிருஹதோஷம், கிரகபீடைகள்யாவும் நீங்கும் என்பதை ஆகமத்தால் அறியவேண்டும். இதனை புஷ்பவிதிநூலின் பாடல்களாலும்,சிறப்புமலர்களின் வழிபாட்டுப்பயனை அறிவோம். ஆகமநெறிமுறை கூறும் பாடல்கள்,

எள்ளுநெடும் பிரமகத்தி தன்னை நீக்கும்
மிதழிதா யாரைக் கொன்ற வேத நீக்கும்
வெள்ளெருக்குப் பரதார வினை தணிக்கும்
வில்வமது பொய்யுரைத்த வெம்மை நீக்கும்.
கள்ளுணவு கோங்கம்பூப் புனைய நீக்கும்
கத்திரியினிலை புனையக் குட்டம் நீக்கும்
முள்ளிய தெல்லா மெய்தும் வறுமை நீக்கும்
மொண்டு துழாய் மலர்களினு முயர்ச்சி தானே.

(புஷ்பவிதி)

இவ்விருப்பாடலின்படி முறையே, எள்ளுப்பூ பிரம்மஹத்திதோஷத்தையும், சரக்கொன்றைப்பூ தாயாரைவதைத்த மற்றும் துன்புறுத்தியதோஷத்தையும், வெள்ளெருக்கம்பூ பிறன்-மனைவியிடம் இழைத்தபாவத்தையும், வில்வஇலை பொய்சொன்னபாவத்தையும், கோங்குப்பூ கள்ளுண்டபாவத்தையும், கண்டங்கத்திரி இலையானது குட்டம் முதலிய கொடிய-ரோகத்தையும், துளசிஇலை வறுமையையும்போக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தும்பைமலர் கோஹத்தி தோஷம் நீக்குஞ்,
சொன்னநயந் திடுகளவு பலாசு நீக்குஞ்,
தம்பி தமை யனைக் கோற லருகு நீக்குஞ்,
சாத்திடுஞ் சந்தன மகா துக்க நீக்கும்.
அம்புவியிலி லிங்கபின்ன மசோகு நீக்கு,
மடைந்தோர்தம் வறுமையெல்லா மான்பா னீக்கும்,
வம்பவிழ் நெய் நெல்லி யிவை யுரோகம் நீக்கும்,
வளர் நீலோற் பல நீக்கும் வாக்குத் தோஷம் .

(புஷ்பவிதி)

இவ்விருப்பாடலின்படி, முறையே, தும்மைப்பூ பசுவைக்கொன்ற பாவத்தையும், முருக்கம்பூ (பொரசம்பூ) நயவஞ்சகம்களவுசெய்த பாவத்தையும், அருகம்புல்நுணி ஐந்திலைமுனையால் பூசிப்பது அண்ணன்தம்பி முதலிய உடன்பிறந்தவரைக்கொன்ற பாவத்தையும், சந்தனஇலை பெருந்துன்பத்தையும், அசோகம்பூ சிவலிங்கத்தைஉடைத்த பாவத்தையும், பசும்பாலால் செய்யும்அபிஷேகம் அனைத்துவிதவறுமையையும், பசுநெய்யினால் காப்பிடுதலும், நெல்லிக்காய்பொடியினால்காப்பிடுதலும்(நீராட்டலில்)அனைத்துவகை நோய்களையும், நீலோத்பல-மலரின் அருச்சனையானது, சொல்லால் நேர்ந்த பாவங்களையும், நீக்கி சிவனைப்பூசிப்பதால் இஷ்டசித்தியைத்தருபவை என்று அறிந்து பூசித்துபயனடையவும். இவ்விதம் இவைகள் யாவும், சிவனை அருச்சிப்போரைக் காப்பாற்றுபவை என்றுஅறிந்துகொள்ளவும். மேலும் இப்பயனைப் பெற்றிடவிரும்பும் அடியவர், உரியமலரைத்தாமே தேடிச்சென்று விதிமுறைகளை முற்றிலும் பின்பற்றித்தாமே பறித்துக்கொண்டுவந்து விதிமுறையால் தொடர்ந்து பூசித்து பயனடைவார்கள்.

சேமித்த மலர்களின் வைப்புக்காலம். (மலர்களின் உபயோககாலஅளவு)

பத்மம் து பஞ்ச ராத்ரம் ஸ்யாத் கரவீரம் தின த்ரயம்.
பில்வம் ஷண்மாஸிகம் சைவ த்ரிமாஸம் துளசீபவத்.
கேதகீ பஞ்ச ராத்ரம்வை சோத்பலம்து த்ரி ராத்ரகம்.
சம்பகம் சைக ராத்ரம் ச கிரிமூலம் தினத்ரயம்.
உசீரம் ஸர்வகாலம் து க்ருஹீதம் உபயுஜ்யதே .

(ஆகமஸாரசங்கிரஹம்)

மேற்கண்ட சுலோகத்தால் பூசைக்கெனக்கொய்து, கோயிலின் புனிதமான உரியபுஷ்ப-ஸ்தானத்தில், சேமித்துவைத்து, பின்பு, அம்மலர்களை எத்தனை நாட்களுக்குள் உபயோகித்திட வேண்டும் என்பது விளக்கப்படுகிறது. அதாவது, பத்மம் ஸ்ரீ தாமரை ஐந்துநாட்களும், கரவீரம் ஸ்ரீ அலரிப்பூ மூன்றுநாட்களும், வில்வம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆறுமாதமும், துளசி மூன்றுமாதமும், கேதகீ ஸ்ரீ தாழம்பூ ஐந்து நாட்களும், நீலோத்பலம் (கருநெய்தல்) மூன்றுநாட்களும், செண்பகம் ஒருநாளும், விஷ்ணுகிராந்தி (கிரிமூலம்) மூன்றுநாட்களும், மணமிக்கமஞ்சள்நிறமுள்ள விலாமிச்சம்வேர் எப்பொழுதும் (1 ஆண்டுவரை) பறித்தது முதல் வைத்திருந்து உரியகாலத்தில், உரியமுறையில் உபயோகிக்கத்தக்கவைகள் என்று சைவாகமங்கள் கூறுகின்றன. விளாமிச்சம்வேரால் கட்டிய உசீரமாலை பூசையில் பலநாட்களுக்கு மீண்டும்மீண்டும் உபயோகிக்ககூடியது. மேலும் "புஷ்பஹீநேது சங்கடம்" என்பதனால், பூசைக்கு பூ இல்லையென்றால், அந்த ஊரில் யாவருக்கும் சங்கடம்நேரும் என்கிறது ஆகமம். எனவே பூசைக்கு பூ மிகவும் அவசியமானதாக விளங்குகிறது. புதியபூக்களும், மணம்மிக்கவையும் மிகவும் பயன்தருவனவாகும். எனவே மணமுள்ளதாக சாத்துவது சிறந்தது.

விலக்கத்தக்கமலர்களின் விதிமுறை - (தியாஜ்ய புஷ்பவிதி)

பூசைக்கு எத்தகைய மலர்களை எதனால் நீக்கிடவேண்டுமென ஆமகங்கள் தெளிவாக, விரிவாக கூறியுள்ளன.

கரா நீதம் படா நீதம் ஸ்வயம் பதித மேவச.
ஏரண் டார்க்க புடா நீதம் ஹந்தி புண்யம் புராதனம்.
நிர் கந்தம் கேச கீடாதி தூஷிதம் சோக்ர கந்தகம்.
மலிநம் துச்ச ஸம்ஸ் பிருஷ்டம் ஆக்ராதம் ஸ்வ விகாஸிதம்.
அசுத்த பாஜநா நீதம் ஸ்நாத்வா (ஆ)நீதம் ச யாசிதம்.
சுஷ்கம் பர்யுஷிதம் சைவ பூமிகம் நார்ப்பயேத் சுமம்.
விநா சாம்பேய கலிகாம் வர்ஜயேத் கலிகாந்தரம்.
அதிபக்வம் அபக்வம்ச முகுளம் குஸ்திதம் ததா.
அசுசி ஸ்தானகா நீதம் ரோகார்த் தாபஹ்ருதா ந்யபி.
ஏகா ஹோஷித புஷ்பாணி வர்ஜயேத்து விசேஷத :.
(காரணாகமம்)

நிர்கந்தாநி உக்ரகாந்தாநி குசுமாநி விவர்ஜயேத்.
கந்த வந்தி அபவித்ராணி குசுமாநி விவர்ஜயேத் .
கந்த ஹீநமபி க்ராஹ்யம் பவித்ரம் யத்குசாதிகம் .
கேச கீடாப வித்தாநி ஜீர்ண பர்யுஷிதாநி ச.
ஸ்வயம் பதித புஷ்பாணி த்யஜேத் உபஹதாநி ச.
முகுளைர் நார்ச்சயேத் தேவம் அபக்வம் ந நிவேதயேத்.
(காமிகாகமம்)

(பொருள்) தனது வெறுங்கையில், சேர்த்துவைத்து, கொண்டுவந்தது, துணியில் வைத்து கொணர்ந்தது, தானாகவே தரையில்விழுந்தவை, ஆமணக்கு எருக்கு போன்ற கூடாத இலைகளில் வைத்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எடுத்துவந்தவை, விலக்கத்தக்கவையாகும். இவற்றை உபயோகிப்பது, நாம்முன்புசேர்த்துவைத்துள்ள,புண்ணியம்முழுவதையும்போக்கிவிடும். ஆதலால் தவிர்த்தல் வேண்டும். மேலும் இவற்றுடன், தாம் உடுத்திய துணியில் வைக்கப்பட்டவை, வாசனை இல்லாதவை, தலைமுடி, புழு, பூச்சி, நோய் இவற்றால் நிந்தனைக்கு ஆட்பட்டதும், அளவுக்கு மீரிய அதிகமணமுள்ளதும், அழுக்கடைந்ததும், அசுத்தமானதும், தூய்மை இல்லாத நிலையில் உள்ளவர்களால் இழிகுலத்தோரால் தொடப்பட்டதும், பூசித்தபழயநிர்மால்யத்தின் மீதுவிழுந்ததும், மனிதன், மாடுகள் முதலியவைகளால் முகரப்பட்டவையும், வாடியவையும்,மொட்டாகப்பறித்து தன்னால் மலரச்செய்தவைகளும்,தூ ய்மையற்றபாத்திரத்தில் சேமித்துக்கொண்டுவந்ததும், குளித்துவிட்டு ஈரத்துணியுடன் பறித்துகொண்டுவந்ததும், பிறரிடமிருந்து, விரும்பி யாசித்துப்பெ-பற்றதும், எடுத்து வைத்து உலர்ந்து போனவையும், பழயவையும், நிலத்தில் விழுந்திருந்தவையும், அதிபக்குவமாய் வாடிவதங்கி அழுகியவையும், அபக்குவமாய்உள்ள சிறுமொட்டு, பூமொட்டு-களையும் கொத்தாகஉள்ளவையும், தகாதஇடத்தில் இருந்ததும், முறையற்று இருந்ததும், வியாதி உள்ளவர்களால் பறிக்கப்பட்டதும், ஒருநாள்பொழுது முழுகிக் கடந்தவையும், இம்சித்து நசுங்கிபாதிக்கப்பட்டதும், நறுமணமிருந்தும்கூட புனிதத்தன்மையற்றதும், கெட்டமணமுள்ளதும், ஓரேநிறம்மட்டுமே உள்ளவையும், பூக்காத மொட்டுக்களாக உள்ளவையும், ஒருபோதும் பூசைக்கு ஏற்றுக்கொள்ளத்தகாத, விலக்கிடத்தக்கவைகளேஆகும் என்றும், நறுமணமேஇல்லாத போதும், தர்பைப்பூ முதலிய சிலபூக்கள் என்றும் புனிதமாய் விளங்குவதால் ஏற்கத்தக்கவையே என்றும், சிவாகமங்கள் கண்டிப்பாகத் தெரிவிக்கின்றன. புஷ்பவிதிமுறைகள் யாவும் முழுமையாக பின்பற்றப்படணேடும். கடைபிடிக்கத்தவறினால் இயல்பாகவே மாசற்ற பரம்பொருளிடம் மாசைசேர்த்திட்ட குற்றம் புரிந்தவராக ஆகிவிடுவோம். எவ்வாறெனில், சுத்தமான சிவத்தை நாம் அசுத்தமாயுள்ள பத்திரபுஷ்பங்களின் சேர்க்கையால் மாசு-படுத்துவதற்கு நமக்கு உரிமைஇல்லை. எனவே அது குற்றமே.

பூவின்றி அமையாது பூசை. ஆயினும், அப்பூக்கள் கூறப்பட்ட வகை, நிறம், குணம், தரம், மணம், உள்ளவைகாய்இருத்தல் மிகவும்அவசியம் என்பதால், சிவாகமங்கள் பத்ரபுஷ்பங்களை ஏற்கவும், நீக்கவும் விதிமுறைகளை விரிவாக கூறியுள்ளன. அவற்றுள் உரிய வகையும், மணமும் பெற்றுஇருந்தாலும்கூட, அவை குற்றம், குறை, தோஷமின்றி இருத்தல் மிகவும் அவசியம். எனவே, முதலில் விலக்கத்தக்கவை பற்றிய விதிமுறையை முதலில் முற்றிலும் பொருத்திப்பார்த்து சோதித்திடவேண்டும். பொதுவாக மலர்களை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அதற்க்கெனஉரிய தெய்வாம்சம் பொருந்திய பாத்திரத்தில் மட்டுமே பறித்து சேமித்திடவேண்டும். பின்பு பூஜைக்கு உரிய புஷ்பபாத்திரத்தில் வைத்து சமஸ்காரத்தால் புனிதமாக்கி, அப்பூவை சோபைஉள்ளவரை கையாளவேண்டும். பூசையில் செண்பகப்பூவின் மொட்டுக்கள் மட்டுமே, மொட்டாக சாத்தக்கூடியவை. மற்றய மலர் வகைகளின் மொட்டுக்களை ஒருபோதும் மொட்டாக சாத்தக்கூடாது. இவற்றையே புஷ்பவிதிப் பாடலும் உறுதி செய்திருப்பதைக்காணலாம்.

எடுத்து வைத்தே யலர்ந்த மலர் பழம் பூக்கள் மற்ற
வெருக்கி லையாம ணக்கிலை யினிற் பொதிந்த பூக்க
ளுடுத்த புடை வையிற் கரத்தினமைந்த நறும் பூக்க
ளுதிர்ந்திடுபூ வரையின்கீ ழுற்ற விரைப் பூக்க
ளடுத்த புழுக் கடி யெச்சஞ் சிலந்தி மயி ருறுதி
லங்கை யில் வைத் தங்கை குவித் திடுதல்கங் குறனிலே
யெடுத்த மலர் நீரமிழ்த்தல் புறங்காட்டி லெய்த
லெச்சில் குளி யாதெடுத்த லிழிபெனுமா கமமே.

(புஷ்பவிதி)

இப்பாடலின் பொருள், எடுத்துவைத்து உலர்ந்துபோன பூ, பழைய பூ, எருக்குஇலை, ஆமணக்கு இலைகளில் வைக்கப்பட்ட பூக்கள், உடுத்திய துணியில் வைக்கப்பட்ட பூக்கள், வெறுங்கையில் சேர்த்துக்கொள்ளுகிற பூக்கள், உதிர்ந்திட்ட பூக்கள், பூ பரித்தவர் பூஜகர் முதலானவர்கள் தமது இடுப்பிற்கு கீழ்தாழ்வாகப் பிடித்து எடுத்து வரப்பட்ட பூக்கள், புழுக்கடி, பறவைகளின் எச்சம், சிலந்தி, தலைமயில் இவை பொருந்திய பூக்கள், இருகைகளுக்குகிடையில் அஞ்சலியாகக் குவித்துப்பிடித்த பூக்கள், இரவில் எடுக்கப்பட்ட பூக்கள், நீரில் ஆடி அமுக்கி எடுக்கப்பட்ட பூக்கள், சுடுகாட்டிலிருந்து எடுத்துவந்த பூக்கள், ஜனனமரண தீட்டு துடக்கு, ஆசௌசத்துடன் இருப்பவரும், குளிக்காமலிருப்பவரும், பறித்து, எடுத்துவந்த பூக்கள், இவை பூசைக்கு ஆகாதவை என ஆகமங்கள் விளக்குகின்றன என்பதை பாடல் உணர்த்துகிறது. பூக்களை சுத்தமான உலோகம் அல்லது மரத்தாலான பாத்திரத்திலோ, தென்னைஇலைக்கீத்தால் பின்னிய பூக்குடலை அல்லது மூங்கில் பாத்திரகூடைகளில் பூபறித்து சேமிப்பது முறையாகும்.

சுத்தே பாத்ரே ப்ரகிருண்ணீயாத் வஸ்திரே ஹஸ்தே நசா ஹரேத் -
ஊத்தரீய கதம் க்ராஹ்யம் தேவேஷு ஆபதி ஸர்வதா.

(ஆகமசங்கிரஹம்)

மேற்கண்ட சிவாகமவசனத்தால் உடுத்தும்துணி, கை, மேலாடை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இவற்றில் பூசைக்கு பூக்களை சேர்க்கக்கூடாதென்பதும் இவற்றில் வைத்துஉள்ளதை சேர்த்தால் எப்பொழுதும் ஆபத்து ஏற்படுமென்பதும் சைவாகமங்களின் முடிவாகும். பூபறிக்கும் தருணத்திலும், பூசையில்எடுக்கும் போதும், மாலைகட்டும்போதும், தவறிகீழேவிழுந்தவற்றை மீண்டும் எடுத்து வைக்கக்கூடாது. அவற்றை விலக்கிடவேண்டும் என்பது விதிமுறை.

ஏற்கத்தக்க மலரிலக்கணம் (க்ராஹ்ய புஷ்பவிதி) :

புஷ்பை ராரண்ய ஸம்பூதைர் பத்ரைர் வா கிரி ஸம்பவை:
அபர்யுஷித நிச்சித்ரைர் ப்ரோக்ஷிதைர் ஜந்து வர்ஜிதைர்.
ஆத்மா ராமோத் பவைர் வாபி புஷ்பைஸ் ஸம் பூஜயேத் சிவம்.
(ஸகலாகம சங்கிரஹம்)

மேற்காணும் சிவாகமவசனப்படி, காடு, மலை, நந்தவனம், தனதுவீட்டுத்தோட்டம் இவற்றிலிருந்து, எடுத்துவந்தவையும், மாசுபடாதவையும், சிதையாதவையும், மந்திரத்தால் நீர் தெளித்து புனிதப்படுத்தியவையும், புழு பூச்சி முதலிய ஜீவனின்றி உள்ளதுமான பூக்களால் சிவனை பூசித்திடவேண்டும்.

பஞ்சபில்வ பத்ரார்ச்சனவிதி :

பூர்வோக்த குசுமாலாபே பத்ரை ரேதைர் சிவம்யஜேத்.
ஸஹஸ்ர நாம மந்த்ரேண பில்வ பத்ரேண சார்சயேத்.
(ஸகலாகமசங்கிரஹம்)

பூஜைக்கென இதுவரை முன்புகூறப்பட்ட உரியபூக்கள் கிடைக்காததருணத்தில், அவற்றின் இலைகளாகிய பத்திரவகைகளால் சிவனைப்பூசித்திடவேண்டும். பில்வபத்திராதிகளால் சிவனைப்பூசித்திடவேண்டும். அல்லது பில்வபத்திரத்திற்கு நிகரானஉரியபத்திரங்களால் சிவனை பூசித்திடலாம். அவை பஞ்சபில்வம் எனப்படும். இவை முச்சூலத்தைப் போலவே மூன்றுஇதழுடன் இருப்பதால் சூலபத்ரம் எனப்பெயர்பெற்றவை. சிலபத்திரவகை ஐந்துமுக தளத்துடனிருக்கும்.

குந்தாக்யம் சுகபில்வம் ச நிர்ஜீவித கபித்தகம்.
ஏதாநி சூல பத்ராணி பஞ்ச பில்வ மிதி ஸ்ருதம் .
(பூர்வகாரணாகமம்)

[1]குந்தம் ஸ்ரீ முல்லைஇலை, [2]சுகபத்ரம் ஸ்ரீ கிளுவைஇலை, [3]பில்வம்ஸ்ரீவில்வஇலை, [4]நிர்குண்டீ/நிர்ஜீவிதம்ஸ்ரீவெண்நொச்சிஇலை, [5]கபித்தம் ஸ்ரீ விளாமரஇலை ஆகிய இவை ஐந்து வகை இலைகளும் வில்வமாகவே, பஞ்சபில்வம் எனப்படும். இவைகளால் சிவனுடைய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸஹஸ்ரநாமாக்களால் ஐந்துமுகங்களுக்கும், ஐவரைக்கொண்டு, இவ்ஐவகை பில்வஇலையால் பஞ்சமுகஅருச்சனை செய்வது சிறந்தபோகமோக்ஷத்தைத்தருகிற மஹோன்னத சிவபுண்ணியச் செயலாகும். ஐவகையான வில்வங்களால் வேறுமந்திரத்தாலும் அருச்சிக்கும் விதிமுறை,

குந்தாக்யபத்ரம் சுகபத்ரயுக்தம் பில்வஞ்ச நிர்குண்டி கபித்தபத்ரம்
ஏதாநிபஞ்சாபிச பில்வபத்ரைர் வ்யோமாத்ம மந்த்ரைஸ் சிவமர்ச்சயேத.
(ஆகமசங்கிரஹம்)

மேற்சொன்னவாறு முல்லை, கிளுவை, வில்வம், நொச்சி, விளா ஆகிய ஐந்துவகை வில்வங்-களால் இவற்றைக்கொண்டு ஆகமத்தின் சிறப்புமிக்க பதாத்துவாவான, உயர்ந்ததான, வியோமவியாபினே எனத்தொடங்கும் 81பதமந்திரங்களாலும் மற்றும் மூலமந்திரங்களாலும் சிவனைப்பூசிக்க வேண்டும் என்கின்றன சிவாகமங்கள்.

வாரபத்திரவகை (கிழமைக்குரிய பூசைஇலை) : வாரத்தின் ஏழுகிழமைகளுக்கும் கூறப்பட்டுள்ள ஏழுவகையானபத்ரங்களே ஆகமத்தில் பூசைக்குவிதித்த வாரபத்ரம் என்று பெயர்பெறும்.

அர்க்கவாரே து பில்வம் ஸ்யாத் துளசீ சோமவாரகே.
அங்காரே து கபித்தம் ஸ்யாத் மாதுலிங்கம் புதே தத:.
பிருஹஸ் பத்யாம் ச மந்தாரம் பார்கவே ஜம்பு பத்ரகம்.
விஷ்ணு க்ராந்திர் பவேத் ஸௌரே வாரபத்ர மிஹோச்யதே.

(காரணாகமம்)

ஞாயிறு வில்வம், திங்கள் துளசி, செவ்வாய் விளா, புதன் மாவிலங்கம், வியாழன் மந்தாரை, (நாயுருவி), வெள்ளி நாவல், சனி விஷ்ணுகாந்தி இவற்றை, முறையே, கிழமையில் ஏற்கத்தக்க, பத்திரமாக ஆகமங்கள் "வாரபத்ரம்" என்று கூறியுள்ளன. இதனையே புஷ்பவிதி பாடலும் கூறுவதால் நன்கு இவற்றின் மகிமையை உணரலாம்.

சூரியன் வில்வமே துளசி திங்களே
யாரவில் விளாவிலை யறிவன் மாதுளை
வேரிநா யுருவிபொன் வெள்ளி நாவலே
காரியாஞ் சனியினில் விஷ்ணு காந்தியே.
(புட்பவிதி)

(இப்பாடலில், ஸ்ரீ ஆரல் ஸ்ரீ செவ்வாய், அறிவன் ஸ்ரீ புதன், பொன்னவன் ஸ்ரீ வியாழன் என்றறிக).

சிவபூசைக்கேற்ற பத்திரவகை. (சிவபூசைக்குஏற்ற 21இலைகள்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிவார்சனைக்குஏற்றதான இலைவகைகளைச் சிவாகமங்கள் பலவாறு தொகுத்துக் கூறுகின்றன. அவற்றிற்கான ஆகமசான்றுகள்.

துளசீ வகுளம் சைவ சம்பகம்ச ஸரோஜிநீ .
பில்வ கல்ஹார தமனாஸ் ததா முரவக: குச:.
தூர்வா அஹிவல்லீ (அ) பாமார்க விஷ்ணுகிராந்தா முனித்ருமா :.
தாத்ரீயுகம் ததைதேஷாம் பத்ரை: குர்யாத் சுரார்ச்சனம் .

என்பது ஆகமவிதிஆகும். மேலும் விசேஷமாக சிவார்ச்சனைக்குரிய 21வகையான அரிய பத்திரங்களை புஷ்பவிதிப்பாடல் நமக்கு தெரிவிக்கிறது. அப்பாடல்,

வில்வமருச் சூத மத்த மாதுளையே நொச்சி
மேவிய முள் ளிலந்தை நறுங் கரந்தை செழுவன்னி
சொல்லிய கத்தரி நெல்லி சண்பகமே சாதி
தும்பையொடு மருதுமா மந்தார மலரி
யெல்லவரும் புகழுமந்த விஷ்ணு காந்தி
யெழிற்தேவ தாருவுட னெருக் கறுகென் றுரைக்கு
நல்லனவாம் பத்திரங்க ளிருபத் தொன்று
நாடரிய கேதார நாதனுக் கர்ச்சனையே.

(புட்பவிதி)

இப்பாடலின்படி 1) வில்வம், 2) மருச்சூதம் (மா), 3) பொன்ஊமத்தம், 4) மாதுளை, 5) நொச்சி, 6) இலந்தை, 7) சிவகரந்தை, 8) வன்னி, 9) கத்தரி, 10) நெல்லி, 11) சண்பகம், 12) மல்லிகை, 13) தும்பை, 14) மருதம், 15) மந்தாரம், 16) அலரி, 17) விஷ்ணுகாந்தி, 18) தேவதாரு, 19) எருக்கு, 20) மாவிலை, 21) அருகம்புல்நுனி என்ற, இவை 21 வகையான இலைகளும், கேதாரநாதராகிய சிவனை அருச்சிக்கஉகந்த நாடறிந்த பத்திரங்களாக ஆகமம் கூறுவனவாகும் என்பது அறியமுடிகிறது.

வில்வபத்திர மஹிமை. (பில்வபிரபாவம்)

பத்திரவகைகள் அனைத்திலும் தலைசிறந்தது வில்வபத்திரமே ஆகும். இது தெய்வாம்சம் பொருந்தியது. இதன் மகிமைகளை சைவஆகமங்கள் பலவாறாக விளக்கிஉள்ளன. இனி அவைகளுள் ஒருசிலவற்றை சான்றுகளால் அறிவோம்.

திரிதளம்து த்ரிமூர்த்தீநாம் ஆகாரம்ச த்ரிதத்வகம்.
இச்சா ஞான க்ரியாசக்தி பில்வ பத்ர த்ரயம் விது :.
தர்சனாத் பில்வ பத்ரஸ்ய ஸ்பர்சநாத் வந்தநாத அபி .
அஹோராத்ர க்ருதம் பாபம் நச்யதே நாத்ர ஸம்சய :.
பில்வபத்ரை ரகண்டைச்ச ஸகிருத் லிங்கம் ப்ரபூஜயேத் .
ஸர்வ பாப விநிர்முக்த: சிவலோகே மஹீயதே .

(ஸகலாகமஸங்கிரஹம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(பொருள்) வில்வத்தின் மூன்றுதளங்களும் மும்மூர்த்திகளின் வடிவமானவை., மூன்றுதத்துவங்-களுடன்கூடிய இச்சா, ஞானீ, கிரியா என்ற மூன்றுசக்திகளும் இதில் மூவிதழில் என்றும் விளங்குகின்றனர் என்றுஅறியவும். வில்வமரம் லக்ஷ்மீவசிப்பதும், தேவர்யாவருக்கும் பிரியமாய் உகந்ததுமான ஸ்ரீவிருக்ஷம் என பெயர்பெற்றதுஆகும். மும்மூர்த்திகள், முக்குணங்கள், முத்தத்துவங்களைக்கொண்டுள்ளதால் இம்மரம் மற்றும் இலை யாவராலும் மிகவும் போற்றி வணங்கத்தக்கது. இந்தவில்வஇலையைப்பார்ப்பதாலும், இம்மரத்தை தெய்வாம்சமாய்கருதி, கண்டு தரிசிப்பதாலும், வில்வமரத்தைத்தொடுவதாலும், போற்றிவணங்குவதாலும், ஒருவரது அறிந்தோ, அறியாமலோ ஒருநாள்முழுவதும் செய்தபாவங்கள் அனைத்தும் அழிந்துவிடும் என்பதில் ஐயம்வேண்டாம். இது நிச்சயம் என்கிறது சைவாகமம் ஆதலால் முச்சூலம்போன்று மூன்றுஇதழ்களுடன்கூடிய, இலைகளால் (உடைந்துபிரியாத, சிதைவுறாத) திரிதளபில்வ பத்திரங்ளால், ஒருமுறை சிவலிங்கத்தை எவனொருவன் பூசைசெய்கிறனோ, அவன் அனைத்துவகையான பாவங்களிலிருந்தும் விடுபட்டவனாகி, சிவலோகத்தில் வெகுகாலம், சிவபோகியாய் வாழ்வான் என்றும், ஸகலாகமஸாரசங்கிரஹம் எனும் நூல்கூறிஉள்ளது. மேலும் பஞ்சமாபாதகச்செயல் எனும் பெருங்குற்றமும் அக்கணமே அகலும்என்கிறது. வில்வத்தை திங்கள் அஷ்டமி, பிரதோஷம், சதுர்தசி திதிகளிலும், இரவிலும் பறிக்கக்கூடாது. தூய்மையாகமட்டுமே இம்மரத்தைதொடவேண்டும். பில்வத்தை கிளையாகவோ, கொத்தாகவோ பறிக்கக்கூடாது. இதனை முற்றியதாகவும், மூன்றுஇதழ் உள்ளதாகவும் தனித்தனியே பறித்திட வேண்டும். வேதாகமங்கள் லக்ஷ்மியை வில்வஇலை, வில்வபழம் ஏந்திஇருப்பவளாகக் கூறுகிறது. வேதத்தில் ஸ்ரீசூக்தம் எனும் பகுதிமந்திரம் பாற்கடலில் இருந்து லக்ஷ்மீவில்வ மரத்தை ஏந்தியவாறு வெளிவந்ததாயும், அவள் அதில் நித்யவாசம் செய்வதாக கூறுகிறது. எவே வில்வஇலையானது ஸகலதேவதைக்கும், சிறப்பாக சிவன், விஷ்ணு இருவருக்கும் மிகவும் பிரியமான, உத்தமமான பூஜாபத்திரமாகும். இதுவே பத்ரராஜம் என போற்றப்படுவதாகும். மேலும் வில்வமகிமைகளைக் கூறும் ஆகமசான்றுகள் பாவம் நீக்குவதை அறிவிக்கின்றன.

மாதா பித்ரோச்ச மித்ரஸ்ய பசூநாம் பிருத்யகஸ்ய ச.
சிசோர் வதம் கிருதம் பாபம் அன்யத் ஸர்வம் ததைவச.
சிவார்ச்சிதேந பில்வேந வ்யபோஹதி நசம்சய: .

மேற்கண்ட சிவாகமவசனத்தால் வில்வஇலையினால் செய்யப்படுகிறத

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அருச்சனையால், சிவனுக்கு அர்ச்சிக்கப்பட்ட வில்வத்தின் மகிமைப்பயனாக, ஒருவனுடைய மிகப்பெரிய பாவங்களான, தாய், தந்தை, நண்பன், ஜீவன்கள், பணியாட்கள், கர்பசிசு, குழந்தை ஆகிய இவர்களைக்கொன்றபாவமும், மற்றய அனைத்துவிதமானபாவங்களும் அப்போதே நீங்குகின்றன என்பதில் சந்தேகமில்லை என்று உறுதியாக கூறுகிறது. மேலும் சிறப்பாக,

ஏகாப்தம் பில்வபத்ரம் ஸ்யாத் ததா சுவேதா துளசீ அபி.
ஷண்மாசம் சார்க்க புஷ்பம்து கரவீரம் தினத்ரயம்.

எனும் சிவாகம வசனத்தால் வில்வம், வெள்ளைத்துளசி, இவ்விரண்டும் ஒருவருடகாலம் தொடர்ந்து பூஜை செய்தபயனையும், வெள்ளைஎருக்கம்பூவானது ஆறுமாதம் தொடர்ந்து பூசைசெய்தபயனையும், அலரிப்பூவானது மூன்றுநாட்கள் பூசைசெய்தபயனையும் ஓரேமுறையில் அளிக்கக்கூடிய சிறப்புத்தகுதிஉடையவை என்று ஆகமங்கள் கூறுகின்றன. வில்வஇலையைக்-கழுவியபின் மீண்டும் பூசைசெய்யலாம். இதற்கு நிர்மால்யதோஷம் கிடையாது.இது பில்வ இலைக்குரிய தனிச் சிறப்பாகும்.

துளசீ பில்வபத்ரம் ச பலாசம் ச சுவணர்கம்.
பிரக்ஷாள்ய பரமேசாநம் அர்ச்சயேத்து புனப்புன:.

(சைவாகமம்)

இவ்வசனத்தால் இவற்றின் தனிச்சிறப்பாக துளசி, வில்வம், பொரசம்பூ, தங்கத்தலாகிய, சுவர்ணபுஷ்பம், இவற்றைக் கொண்டு, முதலில் ஒருமுறைஉபயோகித்து, பூசித்தபின்பும், மகாதேவருக்குச் சாத்திய அதனையே தூயநீரில் கழுவியபின்பு மீண்டும் மீண்டும் புதியதுபோல அருச்சிக்கலாம். இதனையே புஷ்பவிதிப்பாடலும் வலியுறுத்துகிறது.

செழுத்திடுந் துளபமுஞ் சிறந்த வில்வமும்
வழுத்து பொன் மத்தமு மலரு நீலமு
மழுத்து செம்பொன் மலரதனைப் போலவே
கழுத்தநிர் மாலியங் கழுவிச் சாத்தலாம்.

(புஷ்பவிதி)

பூவிற்குப்பதிலான மாற்றுப்பொருள்கள். (புஷ்ப அபாவே யோக்யாநி)

பூசையில் பூவிற்கு குறைஏற்படாதிருக்க, புஷ்பமில்லாதபொழுதில் ஏற்கத்தக்க மாற்றுப்-பொருள்களை சைவாகமங்கள் கூறியுள்ளன. அதுபற்றிய காமிகாமவசன சான்றாவது,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அலாபேஅபீஹ புஷ்பாணாம் பத்ராண்யபி நிவேதயேத்.
பத்ராணா மப்யலாபேது பலானியபி நிவேதயேத்.
பலானா மப்யபாவே து த்ருண குல்ம ஔஷதீ ரபி.
ஓஷதீநா மலாபேது பக்தியா பவதி பூஜித:. (காமிகாகமம்)
புஷ்பம் பத்ரம் ஸமாக்யாதம் ததை வாங்குர ஜாதிகம்.
மூலம் சைவ பலம் சைவ அர்ச்சநீயம் ஸமந்த்ரகம்.
(சைவாகமம்)

மேற்கண்ட சைவாகமவசனங்களின்படி ஆகமபூஜாவிதிமுறையில், புஷ்பங்கள் இல்லாத பொழுதில், பத்திரங்களையும், பூவும், பத்திரங்களும் இல்லாதபொழுதில் பழங்களையும், பூஇலை பழங்கள் இவை இல்லாதபொழுதில் இல்லாதஇடங்கயில் புல், பூண்டுகள், வேர், பச்சிலை மூலிகை முதலியவைகளையும் கைக்கொண்டு அவற்றால் பூசையை செய்யவேண்டும். மேலும், இவை எதுவும் இல்லாதபோது இவற்றை மனதால் கற்பித்துத்தனக்குள் மாணஸ-பூஜையாகவாவது பக்தியினால் தவறாமல் பூசையைச் செய்யவேண்டும். பூசையின்போது பூஜைக்குஏற்ற மலர் மற்றும் இலை, முதலானவை கிடைக்கப்படாதபொழுதில், அல்லது, இவை இல்லாதகாலங்களில், அதற்குப் பதிலாக எவற்றை? எவ்வாறு பயன்படுத்துவது? என்பதுபற்றி, காரணகாதிஆகமங்களின்கூற்றுகளை இனி அறிவோம்.

புஷ்பா அபாவேது பத்ரைச்ச பத்ரா அபாவே ததைவச
ஸர்வ பீஜாங்குரைர் பத்ரைர் அர்ச்சயேத் து மஹாதராத்.
(காரணாகம படலம் 31)

பூசைக்கு இலை, பூ, பழம் இவைகள் இல்லாதபோது தானியவகைகளையும், ஒருவகை தானியமும் இல்லாதபோது முளைத்ததானியமுளைப்பயிரான ஏழுநாள்வளர்த்த அங்குரவகை-களாகிய, இளம்நாத்துகளையும், அல்லது அக்ஷதை எனப்படுகிற உடையாததும், கையால்உமி நீக்கி சிதைவுறாமல் சேமித்ததும், முழுசம்பாரகத்து பச்சஅரிசிகளையும் அல்லது பொரித்த நெல்லின் பொரியான பூவுக்கு நிகரான லாஜத்தையும் பூபோல ஏற்றுக்கொண்டு இவைகளால் பூஜிக்கலாம். இவை எதுவும் இல்லாதபொழுதில் பக்தியோடு மனதால் இவற்றை கற்பித்துச் சேர்த்திடுவதே இறைவனை பூசித்ததாகஆகும் என்கிறது ஆகமம்.

சுவர்ணபுஷ்பசிறப்பு.

கூறப்பட்ட ஒவ்வொரு புஷ்பபத்திரங்களுப்பதில் அவற்றையே பொன்னால்செய்யப்-பட்டவையாக சேமித்து, சுவர்ணபத்ரம், சுவர்ணபுஷ்பவகைகளாக கைக்கொண்டுபூசித்தால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இம்முறையானது உரியதைவிட பத்துமடங்கு அதிகமாக உயர்ந்ததர பயனைத்தருவனவாகும்.

பிரத்யேகம் உக்த புஷ்பாணாம் தச ஸௌவர்ணகம் பலம்.
சுவர்ணாத் தசகுணம் ரத்னம் மாணிக்யாதி நவோத்பவம்
ஸிரக் கிரந்திதேஷு தேஷ் வேவ த்விகுணம் பல மச்னுதே.

(காமிகாகமம்)

ரத்தினபுஷ்பசிறப்பு.

தங்கத்தாலான பத்ரபுஷ்பவகைகளுக்குப் பதிலாக மாணிக்கம் முதலிய நவரத்தினங்-களாலான புஷ்பம் அல்லது தனித்தனியான சிறுசிறுரத்தினமணிக்கற்களால் பூசிப்பது பொன்-பூவினால் பூசிப்பதைவிட அதிகமாக, பத்துமடங்குஉயர்தரமான பயனைத்தரசக்தி உடையதாகும். எனவே நவரத்தினங்களால் அருச்சிக்கலாம். பூசைக்கு ஏற்கத்தக்க ரத்தின வகைகளை ஆகமம் கூறியுள்ளது. அவை

மாணிக்கம் சேந்த்ரநீலம்ச வைடூரியம்ச பிரவளாகம்.
முக்த வஜ்ரம் ததா புஷ்பராகம் ஸ்படிககண்டகம்.
முரகம் சைவ ரத்னாநாம் நவகம் பரிகீர்த்திதம்.

மேலும் இவைகள் யாவற்றையும் மாலையாகத்தொடுத்து, சாத்துவதனால், அதாவது பூமாலை.

சுவர்ணத்தாலான ஹேமபுஷ்பமாலை, ரத்தினமாலை, (இலை) பத்திரமாலை, பழமாலை முதலான இவைகள் பூசையில் இருமடங்காக பயன்தருபவை என்கிறது காமிகாகமம். மேலும் சிலவற்றை தைவிக புஷ்பமாக கூறுகிறது.

பில்வம்ச கரவீரம்ச பத்மம் குமுதமேவச
சத்வாரிபுண்ய புஷ்பாணி தைவிகாநி ஸமாஹரேத் .

(ஆகமம்)

வில்வப்பூ, அலரிப்பூ, தாமரைப்பூ, நீலோத்பலப்பூ அல்லது அல்லிப்பூ ஆகிய இவைநான்கும் தைவீகஅம்சமுள்ள புண்ணியமலர்கள் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

நாமார்ச்சனைக்கேற்றப்பழவகை. (அர்சனார்ஹபலானி)

உரியபூக்கள் மற்றும் பத்திரங்கள் பூசைக்குக் கிடைக்காத போதும், அல்லது விருப்பமான பயனைநாம்பெறவிரும்பும்போதும், நாம் இறைவனின் 108பெயர்கூறிச்செய்யும் அருச்சனைக்கும், சிறப்புஅலங்காரமாலைக்கும் ஏற்ற உரியபழவகைகளை சைவாகமப்படி காண்போம். அதாவது,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜம்பூ டாடிம ஜம்பீர திந்த்ரிணீ பீஜபூரகா:
ரம்பா தாத்ரீ ச பதரி ரஸாலப் பனஸோ அபிச.
ஏஷாம் பலைர் யஜேத் தேவம் ஸர்வகாம பலப்ரதை :
(சைவாகமம்)

மேற்கண்ட சைவாகமவசனத்தால், நாவற்பழம், மாதுளம்பழம், எலுமிச்சம்பழம், புளியம்பழம், கொய்யாப்பழம், வாழைப்பழம், நெல்லிக்கனி, இலந்தைப்பழம், மாம்பழம், பலாப்பழம் மற்றும் அபிஷே கநிவேதவிதிகளில் கூறப்பட்ட பிறபழவகைகள், ஆகிய இவற்றைப் பூவைப்போலவே தனித்தனியாக உரியஎண்ணிக்கையில் எடுத்து கைக்கொண்டு, தேவனைப்போற்றி அருச்சனை செய்வது யாவருக்கும் அனைத்துவிதமான விரும்பியபயனையும் விரைவாகத் தரவல்லது.

தேவதைக்குக் கூடாதமலர்கள். (தேவதாவர்ஜியகுசுமானி)

பூசையில் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் கூடாதவற்றை ஆகமம் குறிப்பிடுகிறது. அதாவது,

நீபகம் கோவிதாரம்ச சிரீஷம் மதயந்திகம் I
பூதிகந்தாநி புஷ்பாணி குரண்ட குசுமாநிச I
ஏகவர்ணாந்ய கந்தாநி புஷ்பாணி பரிவர்ஜயேது II
(ஆகமசங்கிரஹம்)

நாக்ஷதை ரர்ச்சயேத் விஷ்னும் ந துளஸ்யா விநாயகம்.
ந தூர்வயா மஹேசானீம் ந கேதக்யா சிவம் யஜேத்.

மேற்கண்டவசனப்படி பூஜையில், முழுஅரிசிகளான அக்ஷதையால் விஷ்ணுவையும், துளசியால் விநாயகரையும், அருகம்புல்லால் பார்வதியையும், தாழம்பூவால் சிவனையும், பூசித்தல்கூடாது என்று அறியவும். இவற்றை சிறப்புக்கிரியைகளிலும் மற்றும் விழாநாட்களின் அலங்கரிப்பு-களிலும் பூசையில்கலந்திடலாம் என்கிறது ஆகமம். மேலும் விரிவாக சிலவற்றை தெய்வ-வழிபாட்டில் நீக்கத்தக்கதாக "மந்திர மகோததி" எனும் நூல் கூறுகிறது.

அதாவது,

விநாயகேது துளசீ நார்ப்பயேத் ஜாதுசித் புத:
அக்ஷதா நர்க்க துத்தூரெள விஷ்ணெள நைவார்ப் பயேத்புத :
பந்தூக கேதகீ குந்தம் கேஸரம் குடஜம் ஜபாம்.
சுங்கரே நார்ப்பயேத் வித்வான் மாலதீம் யூதிகா மபி.
சுக்தெள தூர்வார்க்க மந்தாரான் மாயூரம் தகரம் ரவெள.
(மந்திரமகோததி)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மேற்கண்ட மந்திரமகோததி எனும் சாஸ்திரநூலின் வசனத்தின்படி அக்ஷதை, எருக்கு, ஊமத்தை, இவைகளால் விஷ்ணுவையும், செம்பரத்தை, தாழை, முல்லை, கேசரம், குடஜம். ஜபா மாலதீ, யூதிகா இவ்வகைமலர்களால் சிவனையும், அருகு, எருக்கு, மந்தாரம், இவற்றால் கௌரியையும், வில்வம், கையாந்தகரை (தகரம்) நாயுருவி (மாயூரம்) இவற்றால் சூரியனையும், துளசியால் விநாயகரையும் ஒருபோதும் பூசித்தல் கூடாது என்பதை அறியமுடிகிறது. மேலும் தெய்வத்திற்கு விருப்பமான நிறமும் கூறப்படுகிறது. அதற்கான ஆகமசான்றுகள்,

சுவேதம் ரக்தம் ததா பீதம் கிருஷ்ணம் சேதி சதுர்விதம் .
சுவேதம் பீதம் ஹரேர் இஷ்டம் ரக்தம் ரவி கணேசயோ: .

எனும் வசனத்தால் பூஜைமலர்கள் யாவும் வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் என்று நிறத்தால் நால்வகைஆகும் என்றும், வெண்ணிறம் மற்றும் மஞ்சள்நிறபூக்கள் விஷ்ணுவுக்கு விருப்பமானவை என்றும், சிவப்புநிறமலர்கள், சூரியன் கணபதி இருவருக்கும் விருப்பமானவை என்றும், வெள்ளைநிறபூக்கள் சிவனுக்கு மிகவும் விருப்பமானவை என்றும், நூல்கள் பலவும் கூறுகின்றன. மேலும், குறிப்பிட்ட சிலகாலங்களில் விலக்கியவைகளும் ஏற்கத்தக்க மலர்களாகும் என்று விதிவிலக்கும் கூறப்பட்டுள்ளது. அதற்குரிய சிவாகமவசன சான்றுகள்,

உத்ஸவாதிஷு யாத்ராயாம் பரிவேஷ கிரியாசுச.
ஸகளாநாம் அலங்காரே க்ராஹ்யோ வர்ஜ்யோபி ஸர்வதா.
வர்ஜ்யபுஷ்பாணி க்ராஹ்யாநி மண்டபாநாம் து மண்டனே.

(சுப்ரபேதாகமம்)

எனும் மேற்கண்டவசனத்தால் பூஜையில் நீக்கப்பட்ட பத்ரபுஷ்பங்கள் யாவும், தெய்வங்களுடைய, திருவிழாகாலங்களிலும், தெய்வமானது வீதிஉலாவரும்பொழுதும், வேட்டைத்திருவிழாநடக்கும் போதும், புதுஇடத்தில் சுவாமிஎழுந்தருளும் விஜயவிழா(பரிவேஷம்) எனும் தெய்வத்-திருமேனியாகிய உருவச்சிலைகளின் விழாவிலும், சிறப்பான புஷ்பாலங்காரச் செயலிலும், அனைத்துவகை மலர்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கவைகளேஎன்றும் அக்காலத்திற்கும் அச்செயலுக்குமட்டும் சேர்ப்பது குற்றமாகாது என்றும் கூறுகின்றன என்பதை அறியவும்.

புஷ்பமண்டபாலங்காரப்பலன்.
(இறைக்கு பூப்பந்தலமைப்பதன்பயன்)

பூஜையில் தனித்தனிமலர்களால் அர்ச்சிப்பதுடன், பொதுவாக அந்ததெய்வத்தின் அருச்சனைப்பூக்களைவிட அளவில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாலுமடங்குஅதிகமான புஷ்பங்களால், பூசிக்கும் தெய்வத்திற்கு சிறப்புஅலங்காரம் செய்யப்பட வேண்டும் என்பது ஆகமவிதியாகும். பொது-விதியாக அலங்காரம் நாலுபங்கு இருக்கவேண்டும். சிறப்பாக பூமாலைகளால் தெய்வத்தை சுற்றியும், மூடியும் அலங்கரிப்பதுமிகவும் சிறப்புமிக்க பயன்களைத்தருவது என்று ஆகமங்கள் கூறுகின்றன. சிவலிங்கத்தில் செய்யக்கூடிய சிறப்புமிக்க புஷ்பாலங்கார மகிமையை கூறும் ஆகமசான்றுகள்,

சுகந்த யுக்தைர் புஷ்பை: ச ஸம்யக் லிங்கம் ப்ரபூஜயேத் .
மாலாபிர் வா சுகடிதைர் அனந்தம் பலம் ஆப்நுயாத்.
மாலாபிர் வேஷ்டயேத் வேதீம் லிங்கம் ஸம்பூஜயேத் நர : .
சிவோ தேவ்யா ச புத்ரேண மோததே பூஜயா அநயா.
லிங்க வேதீ பவேத் தேவீ, லிங்கம் ஸாக்ஷாத் மகேச்வர: .
தயோஸ் ஸம்பூஜநாத் ஸ்யாதாம் தேவீ தெவச்ச பூஜிதௌ.

(இதன் பொருள்) சிவலிங்க பூசையில், பொலிவும்மணமும்உள்ள பலவகைமலர்களால், நன்கு தொடுத்துக்கட்டப்பட்ட பூமாலைகளால் சிவனைஅலங்கரித்தால், எல்லையற்றபயனை அடைவர். சிறந்த பூமாலைகளால் சிவலிங்கத்தில் ஆவுடைபீடத்தையும், ருத்ரபாகமெனும் லிங்க-பாணத்தையும், சுற்றிக்கட்டி அலங்கரிப்பதால் சிவபெருமான், உமாதேவீ மற்றும் அவர்களின் புத்திரர்களான கணபதி, முருகன் ஆகிய இவர்கள் நால்வரும் மகிழ்ந்துஅருளுவார்கள். லிங்கபீடமே உமையவளும், லிங்கமே மகேச்வரனும் ஆவதால், சிவலிங்கத்தின் சிறப்பு அலங்காரத்தோடுகூடிய பூசையானது, தேவன், தேவீ, இருவருக்கும் செய்யப்பட்ட பூசையாகி, அவர்களுக்கு மகிழ்ச்சி தருவதாகி, லிங்கம் ஒன்றிலேயே இருமடங்குபயனும்கிட்டும் என்கிறது. சைவாகமம். உலகஅன்னை தந்தையர் அருளால் மேலும் தெய்வத்தின்மீது பூபந்தலிட்டு பூசிப்பது விரும்பிய உத்தமபயனைத் தரும் என்கிறது. தெய்வங்களின் புஷ்பமண்டபாலங்கார மகிமையைக் கூறும் சான்று,

சிவஸ்யோபரி யக் குர்யாத் சுகதம் புஷ்ப மண்டபம் .
சோபிதம் மாலிகாத்யை : ச ஆபீடாந்த ப்ரலம்பிபி : .
அத்யாச்சர்ய மஹாயானைர் திவ்ய புஷ்போப சோபிதை:.
ஸர்வைப் பரிவிருதச் ஸ்ரீமான் கச்சேத் சிவபுரம் சுகீ.

சிவலிங்கம், சோமாஸ்கந்தர், நடேசர் முதலான சிவபெருமானுக்குத் தலைக்கு மேலே, சுகம் தரும் வகையில் பொலிவான புஷ்பமண்டபத்தை, மேலிருந்து, தரைப்பீடம் வரையில், தொங்கவிடப்பட்ட பூமாலைகளால் எவர் அழகுறஅமைக்கிறாரோ, மேலும் அரியமலர்மாலைகளால் வியக்கத்தக்க பெரியவிமானத்திலும், வாகனங்களிலும் இறைவன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருக்குமாறு எவர் அலங்காரத்தைச் செய்விக்கிறாரோ, அவர் இவ்வுலகில் செல்வஸ்ரீமானாகவும், யாவரும் வியந்திடும்வகையில் அவரது சுற்றத்தார் அனைவருடனும் சுகமாக வாழ்ந்துமுடிவில், சிவபுரம் செல்லுதலாகிய சிவலோகபதமுக்தியே பெறுவார் என்பது திண்ணம் என்று சைவாகமங்கள் உறுதியிட்டுச் சொல்லுகின்றன. சிவலிங்கத்தில் பூசை செய்வதால் அனைத்து தெய்வங்களுமே பூசிக்கப்பட்ட-வர்களாக ஆவார்கள் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஆவாஹநாதி காலேஷு ஆசார்யோ குருரூபதிருத்.
அபிஷேகாத் யலங்காரேது ஆசார்யோ மாத்ருரூபவான்.
நைவேத்ய தூபதீபாதௌ அரச்சனே மந்த்ரரூபவான்.
ஸ்தோத்ரபிரதக்ஷிணே காலேது ஆசார்யோ பக்ததரூபவான்.
(சைவாகமம்)

(இதன்பொருள்) இறைவனை பூசிக்கும்பொழுது குருவானவர் பலநிலையில் திகழ்பவராக ஆகமம் கூறுகிறது. அதாவது, ஆவாஹநாதி காலத்தில் குருரூபவானாயும், அபிஷேகம் அலங்காரம் முதலானவற்றை செய்யும்போது தாய்ரூபத்திலும், நைவேத்யம், தூ பதீபார்ச்சனை-களை செய்யும் காலங்களில் மந்திரரூபியாகவும், தோத்திரப்பிரதக்ஷிணங்களை செய்யும் காலத்தில் பக்தரூபியாகவும் விளங்குகிறார் என்கிறது. இதனால் பூசையில் புஷ்பஅலங்கார காலத்தில் தாயுமானவராக அர்ச்சகர் இருந்து உண்மையான தாயன்போடு அழகுடன் அலங்காரத்தைச் செய்யவேண்டும் என்பது அறியப்படவேண்டியது.

நந்தவனப்பணியும், நன்மைகளும். (புஷ்ப உத்யானபலம்)

ஆத்மார்த்தே வா பரார்த்தே வா உத்யானம் கல்பயேத் நர : .

என்று ஸ்ரீமத்காரணாகமம் மண்ணுலகில் மனிதன்தன்பொருட்டோ, பிறர்பொருட்டோ, பூந்தோட்டத்தை அமைக்கவேண்டும் என்று, கட்டளைஇடுகிறது. பலகாலங்களில், பொது-வானதாக கோயிலில் நடைபெறும் பூசைக்கு என்று கோயிலின்பொருட்டான, நந்தவனத்தை அமைக்கும் விதிமுறையானது உத்தரகாரணாகமம் 103-வது படத்தில் விரிவாக கூறப்பட்டு உள்ளது. கோயில்களும், நந்தவனங்களும் மனஅமைதிக்காகவும், அழகுக்காகவும் ஏற்பட்டுத்தப் பட்டவைஅல்ல. பல்வேறு பகுதியில், வாழும் மக்களுக்குத் தோன்றும் நோய்களின் நிலைக்கேற்ப, பலவாறாக தெய்வஉருவங்கள் ஏற்படுத்தப்பட்டு, அத்தெய்வங்களுக்கு சிறப்பாக ஒவ்வொரு வழிபாட்டு மூலிகையை, பூஜைக்கான பத்ரபுஷ்பங்களாகத்தினமும் பயன்படுத்தியஅதன் மூலமாக, இறைவனின் பெயரால், மக்களுக்கு தொல்லைகள்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தொற்றுநோய்கள் ஏற்படாமல் இருந்திடும்வகையில், பாதுகாப்பு செய்யப்பட்டன. இவற்றை மூடநம்பிக்கை என்று எண்ணி ஒதுக்காமல் மருத்துவ அறிவியல்ரீதியாக ஆய்வுசெய்தால் முன்னோர்களின் அறிவியல்பூர்வமான நம்பிக்கையின் வெளிப்பாடே கோயில்கள் என்பதை நாம் நிரூபிக்கவும், உணரவும்முடியும். வாழ்க்கையில் நறுமணம்பரப்பி, நன்மைபலதந்து நமக்கு மேன்மைதரும் மலர்களுக்கு, நமது நெஞ்சைக்கவரும் பேரழகு, நறுமணம், நோய்களை தீர்க்கும் மருத்துவகுணம், இறையருளை வாரிவழங்கும் தன்மை, என்று மஹத்துவங்கள் ஏராளம். அன்பு, பக்தி, நம்பிக்கை, ஆனந்தம், போன்ற நல்லகுணங்களை நம்மனதில் உண்டாக்கி, ஆன்மீகப்பாதையில், உயர்வு உள்ளவர்-களாக மாற்றும்சக்தி மலர்களுக்குஉண்டு. அதேபோன்று மூலிகைகளின் மருத்துவ குணங்-களுடன், தோல்நோய், ஒவ்வாமை, மலேரியா, வசூரி, ஜூரம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி, குணப்படுத்தும் ஆற்றல்உடையனவாகவும் பூசைமலர்கள் விளங்குகின்றன. ஆதலால் மகிமைமிக்க மலர்வனம் அமைத்து, இறைவனைக்குறித்து தாமரை முதலிய நீர்மலர்களை நித்தமும் சேமித்துஅளிப்பவர்கள், மற்றும் பூந்தோட்டத்தைப்புதியதாய் அமைப்பவர்கள், தனவானாக சிவலோகத்தில் மகிழ்ந்து வாழ்வார்கள் என்கிறது சுப்ரபேதம் எனும் சிவாகமம். இங்கு சான்றுகளில் ஆராமம் என்பது பூந்தோட்டத்தையும், ஜலபுஷ்பம் என்பது தாமரை மற்றும் கருநெய்தல் மலர் ஆகிய நீர்ப்பூக்களையும் குறிப்பதாகும்.

ஜலபுஷ்பம் ஸுபுஷ்பம்வா தேவ முத்திச்ய நிக்ஷிபேத் .
நாநா புஷ்பை ரலங்கிருத்ய நாநா போகம் ஸமச்நுதே .
ஆராமம் தேவ தேவஸ்ய யோ நர: கிருதவான் புவி .
ஸ ஏவ தனவான் ஸ்ரீமான் இஹலோகே சுபூஜித : .
(சுப்ரபேதாகமம்20-5-6)

ஸ்தலபுஷ்பம் ஜலபுஷ்பம் புஷ்பயாநே ஸமோததே.
ஆராமம் தேவதேவஸ்ய யோ நரக் குருதே யதி.
ஸஏவ தனவான் ஸ்ரீமான் இஹாமுத்ரச பூஜ்யதே.
(மகுடாகமம்)

பரமனின்பூசையில் பத்திரபுஷ்பங்கள். (பூஜாபத்ரபுஷ்பம்)

சைவசமயத்தில் ஒப்புயர்வற்ற உன்னத சிவபூஜையாகிய சிவபுண்ணியக்கிரியையில் உகந்த உரியபத்ரபுஷ்பவகைகளை, இனி சிவார்ச்னாசந்திரிகை எனும் நூலின்படி அறிவோம். பூசைக்கு விதிக்கப்பட்ட அஷ்டபுஷ்பவகைகள் முதலான உயர்தரபுஷ்பங்களை மூலமந்திரத்தை உச்சரித்துக்கொண்டும், மிருகீமுத்திரையைக்கைக்கொண்டும், உள்ளன்போடு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சாத்திஅருச்சிக்க வேண்டும். அவை தும்பைப்பூ, சுரபுன்னை, மந்தாரம், நந்தியாவர்த்தம், ச்ரியாவர்த்தம், அலரி, எருக்கு, மகிழம்பூ, மருதாணி, வெள்ளைலொத்தி, நூறுஇதழுடையத்தாமரை, பொன்னூமத்தை, பலாசம், பாடலம், சண்பகம், கொன்றை, கர்ணிகாரம், கும்மட்டி, மாதுளை, மருதம், மயிற்-கொன்றை, தேவதாரு, பச்சிலைமரம், முன்னை, மருக்கொழுந்து, அசோகம், பத்ரா, அபராஜிதம், ஆயிரமிதழுடைய தாமரை, செங்கழுநீர், செந்தாமரை, நீலோற்பலம், குசும்பம், குங்குமமரம், மலைமல்லி, தருப்பை, நாயுருவி, கையாந்தகரை, கமுகு, சரளம், மலையத்தி, கடம்பம், மா, இலுப்பை, நாகம், ஹேமாகுலீ, குன்றிச்செடி, நிலப்பனை, வேஜிகை, ஜாதிமல்லி, பட்டி, மாலதி, ரித்தி, (மூலிகை) நொச்சி, விஷ்ணுகிராந்தி, வாழை, நன்னாரி, தேவதாளம், துவிகண்டி, கிரந்திபர்ணி என்னும் இவற்றின் பூக்கள் ஆகும்.

பருவகாலத்திய சிறப்புமலர்கள். (ஷட்ருது குசுமானி)

சிறந்தமலரென பலமலர்கள் கூறப்பட்டாலும், பருவகாலவிசேடத்தை அனுசரித்துப் புஷ்பவிசேடத்துக்குப் பெருமையுண்டு. அதுஎவ்வாறெனில் கடம்பம், செண்பகம், செங்கழுநீர்பூ, புன்னைப்பூ, தருப்பை, கண்டங்கத்திரி என்னும் இந்த புஷ்பங்களால் 1வசந்தருதுகாலமான, சித்திரை ரூ வைகாசி மாதங்களில், சிவனை அர்ச்சனைசெய்தால், அச்வமேதயாகம் செய்த பயனைத்தரும். பாதிரிப்பூ, மல்லிக்கைப்பூ, நூறுஇதழுடையதாமரைப்பூ இவற்றால், 2கிரீஷ்மருது காலமாகிய ஆனி ரூ ஆடி மாதங்களில் செய்யப்படும் சிவார்ச்சனையானது, ஸகலயாகங்களுச் செய்தபயனைத்தரும். தாமரை, மல்லிகை புஷ்பங்களால், 3வருஷருதுகாலமான ஆவணி ரூ புரட்டாசி மாதங்களில் செய்யப்படும் சிவார்ச்சனையானது அச்வமேதயாகம் செய்தபலனைத் தரும். பொன்னூமத்தைப்பூ செங்கழுநீர்பூ, சுஜாதம் (வில்வப்பூ), நீலோத்பலப்பூ இவைகளால், 4சரத்ருதுகாலமான, ஐப்பசி ரூ கார்த்திகை மாதங்களில் செய்யப்படும் லிங்கபூசையானது ஸத்ரயாகம் செய்தபலனைத்தரும். அலரி, சுஜாதம், நீலோற்பலம் என்னும் மலர்களால், 5ஹேமந்தருதுகாலமான மார்கழி ரூ தை மாதங்களில், செய்யப்படும் லிங்கபூஜை இந்திர-பதவியை, இந்திரபோகத்தை, நூறுயாகம் செய்ததன் பலனைத்தரும். கர்ணிகாரபுஷ்பத்தால் 6சிசிரருதுவாகிய மாசி ரூ பங்குனி மாதங்களில் செய்யப்படுகிற லிங்கபூசையானது அனைத்து வகையான யாகங்களையும் செய்தபயனைத்தரும். அவ்வாறே ஆனி முதலான பன்னிரண்டு மாதங்களுக்கு தனித்தனியே மிகச்சிறந்த, ஸர்வோத்தமபுஷ்பமாகமுறையே, 1)வெள்ளை-எருக்கம்பூ, 2)வில்வப்பூ, 3) நாயுருவிப்பூ,, 4) தும்பைப்பூ, 5) கருநெய்தலெனும் நீலோத்பலப்பூ, 6) தாமரைப்பூ, 7) சரக்கொன்றைப்பூ,8) கண்டங்கத்திரிப்பூ, 9)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புலிநகக்கொன்றை (வ்யாக்ரீ), 10) வன்னிப்பூ, 11) சண்பகப்பூ, 12) பாதிரிப்பூ (பாடலம்) ஆகியவை சிவார்ச்சனைக்கு உத்தம புஷ்பங்களாகும்.

ஆலயபூசையின் அரியமலர்கள்.

ஆலயத்தில் தினமும் பிராதக்கால (காலஸந்தி)பூஜையில் ஆகமப்படி நந்தியாவர்த்தம், ச்ரியாவர்த்தம், வெள்ளெருக்கு, வெண்டாமரை, புரசம்பூ, புன்னைப்பூ, சிறுசண்பகம், பட்டிப்பூ, சிவந்த அகஸ்தியப்பூ, மகிழம்பூ, ரித்தி எனும் ஒஷதி, த்விகண்டி, வேஜிகை, பாடலம், அசோகம், கதலீ (வாழைப்பூ), சங்கினி (வெண்நிற சங்குப்பூ) எனும் புஷ்பங்கள் சிவலிங்கார்ச்சனைக்கு சிறந்தவைகள் ஆகும். தும்பைப்பூ, அலரி, சரக்கொன்றை, பொன்ஊமத்தை எனும் சிவமல்லிகை வியாக்ரம், கண்டங்கத்திரி (ப்ருஹதீ) பாதிரி, தாமரை, கருநெய்தல், செண்பகம், குரண்டம் என்னும் புஷ்பங்கள் தினசரி உச்சிகால மதிய பூசைக்கு மிகச்சிறந்தவை. நடுநிசிப்பூசையில், ஜாதிப்பூ, கருநெய்தல்பூ, கடம்பப்பூ,ரோஜாபூ, தாழம்பூ, கமுகு, (பாக்குமரப்பூ), புன்னைப்பூ, தந்தி என்னும் பூக்களும், ஊமத்தையின் புஷ்பமும், குருவேரும், வில்வபத்ரமும் ஆகிய இவை அர்த்தராத்திரி பூஜைக்கு மிகவும் சிறந்தவைஆகும். கடம்பம், ஊமத்தம், ஜாதி என்னும் இவற்றை இரவில் மட்டுமே அர்ப்பணிக்கவேண்டும்.

பூமாலை புனையும்முறை. (ஸ்ரக்பந்தனவிதி)

ஒவ்வொருநிறமுடைய பூக்களால் தனித்தனியாக, ஒரேநிறத்தில் மாலைகள் கட்டப்படுவது உத்தமமாலாகிலுப்தி எனும் மாலைகட்டும்முறை ஆகும். (இது மிகச்சிறந்தது). பலநிறபூக்களால் பலவண்ணமாக கட்டப்பட்ட மாலைகள் மத்திமம் (சிறந்தது). இலையும், பூவும் கலந்து கட்டப்பட்ட மாலைகள் அதமம் (ஏற்றது / நன்று) என்கிறது ஆகமம். வாழைநாரினால்மட்டுமே எப்போதும் பூமாலை கட்டப்படவேண்டும். கால்படாமலும், பூசிதைவுறாமலும் தொடுத்து தயாரித்துஅளித்திட வேண்டும். கீழேதரையில் தவறிவிழுந்த மலரை எடுத்து மாலையில் சேர்க்கக்கூடாது. அவற்றை விலக்கிடவேண்டும். நாள்பட்டத்தையும், சோபை (அழகு) இழந்ததையும், அழுகியதையும் மாலையில் சேர்க்கக்கூடாது. முழுமலர்களால் மட்டுமே சிதைக்காமல் கட்டப்படவேண்டும்.

மலர்களின் நிகர்நிலைத்தகுதிகள். (உத்கிருஷ்டசமதாவிதி)

1எருக்கு, 2அலரி, 3வில்வம், 4கந்தபத்ரிகை, 5வெண்தாமரை, 6நூறுஇதழுடையதாமரை, 7ஆயிரம்இதழுடையதாமரை, 8கொக்கு-மந்தாரை, 9ஊமத்தை, 10தும்பை, 11நாயுருவி, 12தர்பை, 13வன்னி,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

14கொன்றை, 15சங்கம்பூ, 16கண்டங்கத்திரி, 17சதபத்ரா, 18மிளகுச்செடி, 19நொச்சிச்செடி, 20வெள்ளெருக்கு, 21பெருந்-தும்பை, 22நீலோத்பலம் என்னும் இவைகளில் 1எருக்கு முதலானவற்றில் முறையே ஒன்றிற்கு அடுத்ததாக கூறப்பட்ட மற்றொன்று ஆயிரம்மடங்கு அதிகமான பலனைத்தரக்கூடியவை ஆகும்.

அர்க்கபுஷ்ப ஸஹஸ்ரேப்யோ பகபுஷ்பம் விசிஷ்யதே ।
பகபுஷ்ப ஸஹஸ்ரேப்யோ ஹேமதுத்தூரகம் வரம் ।
துத்தூரக ஸஹஸ்ரேப்யோ சமீபுஷ்பம் விசிஷ்யதே ।
ஸர்வாஸாம் புஷ்பஜாதீநாம் ஸ்ரீமந்நீலோத்பலம் வரம் ।.

(பூர்வகாமிகமம்)

மலர்களில் ஒத்ததகுதியுடையவைகள். (நிகர்நிலைத் தகுதிவிவரம்)

கரவீரஸமா ஞேயா ஜாதீ விஜயபாடலீ.
சுவேதமந்தார குசுமம் சதபத்ரஞ்ச தத்ஸமம்.
நாகசம்பக புன்நாகா துர்தூரகஸமா: ஸ்மிருதா: .

(காமிகம்)

அவற்றுள் வெள்ளைஎருக்கம்பூ பத்துச்சுவர்ணத்தைத்தானம் செய்ததோடொக்கும் (நிகராகும்). நீலோத்பலப்பூ ஆயிரம்சுவர்ணபுஷ்பத்தால் அருச்சனை செய்ததோடொக்கும். துளசி, கருந்துளசீ, இந்திரவல்லி, விஷ்ணுக்கிராந்தி, நன்னாரி, குங்குமம், கரும்பு என்னும் இவற்றின் பூக்கள் வெள்ளெருக்கம் பூவுக்கு சமமாகி சமமானபலன் தரும். நந்தியாவர்த்தம், விஜயம், நூறுஇதழுடையதாமரை, மந்தாரம், மா, இலுப்பை, வெள்ளைவிஷ்ணுகிராந்தி, சிறுசெண்பகம், கதலி (வாழை) நன்னாரி என்னும் இவற்றின் பூக்கள் கரவீரம் எனும் அலரிப்பூவுக்கு ஒப்பானதாகும். ரித்தி எனும் ஓஷதி, சகதேவீ, நாகநந்தி, செண்பகம், என்னும் இவற்றின் பூக்கள் வில்வதளத்திற்கு (சமமாகும்) ஒக்கும். பாதிரிப்பூ, மகிழம் பூ, தாமரைப்பூ இவை தும்பை மலருக்கு ஒக்கும். ஜாதிப்பூ, மல்லிகை, இலுப்பை, சங்கம், நாகம், சூரியாவர்த்தம், சிங்ககேசரம், மஹாபத்ரா என்னும் இவற்றின் புஷ்பங்கள் நாயுருவிப்பூவுக்கு ஒப்பானவை ஆகும். அசோகம், வெள்ளைமந்தாரம், என்னும் இவற்றின் இலை மற்றும் பூக்களும், ஏழுநாட்-களில் (வளர்ந்த) விருத்தியடைந்த வால்நெல், சம்பாநெல், கோதுமை, நீவாரம், நெல், மூங்கிலரிசி, மஞ்சாடி, பயறு, மொச்சை, விலாமிச்சை, உளுந்து என்னும் இவற்றின் அங்குரமுளைகளும், (அங்குரமுளைப்பயிர்) ஆகிய இவைகள் கொன்றைப்பூவுக்கு நிகராகும். வைரம், பத்மராகம், மரகதம், நல்முத்து, இந்திரநீலம், மஹாநீலம், சூரியகாகந்தம், சந்திரகாந்தம் ஆகிய ரத்தினங்களும், ரத்தினபூஷ்பங்களும், ஆயிரம்சுவர்ண புஷ்பங்களும், அலரிப்பூ, நீலோற்பலம் என்னும் இருமலர்களுக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிகராகும். கருநெய்தல்பூ (நீர்ப்பூ) எல்லாப்பூக்களினும் சிறந்தததென்பது எல்லா ஆகமங்களின்றுணிபு. சில ஆகமங்களில் கரவீரம் எனும் அலரி சிறந்ததென்றும், வேறுசில ஆகமத்தில் கொக்குமந்தாரை எனும் பகபுஷ்பம் சிறந்ததென்றும், மற்றொரு ஆகமத்தில் சரக்கொன்றை எனும் மலைமரப்பூ ஆரக்வதம் எல்லாவற்றினும் சிறந்ததென்றும் கூறப்பட்டிருக்கின்றன. சிலர் ஆகமங்களின்படி தாமரைப்பூவே சிறந்தது எனக் கூறுகின்றனர். அரியபுஷ்பத்தால் பெறுதர்கரிய பயனை அடையலாம்.

நீக்கத்தக்க மலர்களின் நிர்ணயமுறை -

> கேதகீ சாதிமுக்தம்ச யூதீச நவமல்லிகா.
> சிரீஷ ஸர்ஜ பந்தூக குசுமாநி விவர்ஜயேத்.
> அங்கோல பத்ரகுசுமம் தியஜேத் நிருபதரூத்பவம்.
> வைபீதகாநி பத்ராணி குசுமாநி விவர்ஜயேத்.
>
> (காமிகம்)

தாழை, குருக்கத்தி, காட்டுமுல்லை, காட்டுவாழை, வேங்கை, அழிஞ்சில்இலை, அரசஇலை, ஆனந்ததிகா, மதயந்திகா, வாகை, ஆச்சா, உச்சித்திலகம், ஆமல், மாதுளை, தென்னை அல்லது நீர்த்திப்பிலி, குமுதம், பருத்தி, வேம்பு, பூசணி, இலவம், சிந்திதம், வோடம், மலையால், பொன்னாங்காணி, விளா, புளி என்னும் இவற்றின் பூக்கள் மற்றும் இலைகள் தெய்வவழிபாட்டில் விலக்கத்தக்கவை ஆகும். தாழம்பூவை சிவபூசைக்கு விலக்கிய ஆகமவிதியின் விலக்கானது, அர்த்தராத்திரி பூசையைத்தவிர ஏனைய பிறகாலங்களில் செய்யப்படும் பூசையில்மட்டும்தான் எனக்கொள்ளவும். ஆதலால் அர்த்தயாம இரவுபூசையில் மட்டும் தாழையைஉபயோகிக்கலாம் என்பது ஆகமஅறிஞர்களின் கருத்துஆகும். தாழம்பூவை பகல்காலத்தில் உபயோகிக்கக்-கூடாது. கிரிகர்ணிகையை விலக்கியது, நீலநிறகிரிகர்ணிகை மலருக்குமட்டுமே பொருந்தும். நீலோத்பலம் அல்லாத பிறநீலநிறமுள்ள சங்குப்பூ முதலியனவும் சிவனுக்கு விலக்காகும். பலாசம் கூடாதென்ற விதிக்கூற்றின்விலக்கை, முள்உள்ள பலாசத்திற்குமட்டும் என்றுகொள்ளவேண்டும். இவ்வாறே ஜபாபுஷ்பம் (செவ்வரத்தம்பூ), மகிழம்பூ என்னும் இவை சிலஆகமங்களில் விதித்து ஏற்கப்பட்டும், சிலஆகமங்களில் விலக்கப்பட்டும் இருக்கின்றன. பூசைமலர்களில் இவை ஏற்கக்கூடும், ஏற்கக்கூடாதுஎன்ற இவற்றின்முடிவை, அம்மலர்களின் பயன்வேறுபாட்டை அனுசரித்தும், பூஜையின் பேதத்தாலும், அவரவர்களின் முன்னோர்கடைபிடித்துவந்த, ஆகமத்தை அனுசரித்தும், பூசிக்கப்படும் தேவதாமூர்த்தியின் குணபேதத்தாலும், நிச்சயம் செய்து கடைபிடித்துக்கொள்ளவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விலக்கப்பட்ட பூக்களை ஆலயபூஜாமண்டபத்தை அலங்கரிப்பதற்கு உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

அஷ்டபுஷ்பார்ச்சனையின் மந்திரவகை.
(பூசையில் எண்மலர் கூற்றுவகை)

(1) எட்டுவகையான மந்திரங்களால் எட்டுவகையான மலர்களை தெய்வத்திருவுருவத்தில் எட்டுஇடத்தில் சூட்டுவது அஷ்டபுஷ்பார்ச்சனம் எனப்படுவதாகும். இதற்குஉரிய மந்திர வகைகளை இனி அறிவோம். (1) ஓம் ஹாம் சிவாஸநாய நம: என்று கூறி தாமரைப்பூவை சிவனது ஆஸனஇருக்கையில் வைத்தும், 2) ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம: என்று கூறி சிவனது திருமேனியில் வெள்ளெருக்கம்பூவை சாத்தியும், 3) ஓம் ஹாம் ஹ்ருதயாய நம: என்று கூறி பொரசு எனும் முருக்கன்பூவை சிவனது இருதயத்தில் சாத்தியும், 4) ஓம் ஹீம் சிரஸே நம: என்று கூறி நந்தியாவட்டம் பூவை சிவனது தலையில் சாத்தியும், (5) ஓம் ஹூம் சிகாயை நம: என்று கூறி மல்லிகைப்பூவை சிவனது தலைமுடியில் சாத்தியும், (6) ஓம் ஹைம் கவசாய நம: என்று கூறி கஸ்தூரிபட்டை எனும் அலரிப்பூவை சிவனது தோள்பட்டையில் சாத்தியும், 7) ஓம் ஹ: அஸ்த்ராய நம: என்றுகூறி சிவமல்லிகை எனப்படுகிற கொக்குமந்தாரைப்பூவை சிவனது கைகளின்தோள்மீது சாத்தியும், 8) ஓம் ஹாம், ஹௌம், சிவாய நம: என்று கூறி நீலோத்பல மலரை சிவனது தலைஉச்சியின் நடுவேபிரம்மரந்திரத்தில் பஞ்சாக்ஷரத்தால் சாத்தியும், அஷ்டபுஷ்பார்ச்சனையை செய்துமுடித்தல் முறையாகும். இவ்விதமாக அஷ்டபுஷ்பார்ச்சனையை உரியதான எட்டுவகைமலர்களாலோ, கிடைத்த எட்டு-மலர்களைக்கொண்டோ பூசையைசெய்தல் விதிமுறையாகும். (ஐஐ) அஷ்டபுஷ்பார்சனைக்கான வேதமந்திரவகை 1அபாம்புஷ்பம் முதலாக 2அக்னிபுஷ்பம், 3வாயுபுஷ்பம், 4தவப்புஷ்பம், 5சந்திரபுஷ்பம், 6நசக்ஷத்திரபுஷ்பம், 7பர்ஜன்யபுஷ்பம், 8சம்வத்ஸ ரபுஷ்பம் முதலியவற்றின் அம்சமானவைகளாக யோபாம் புஷ்பம் வேத எனத்துவங்கும் வேதமந்திரஸ்வரூப மலர்களால் அஞ்சலி செய்வது காணப்படுகிறது. மேலும், வேதத்தில் எட்டுவகையான லிங்கங்களின் பெயர்களால் செய்யப்படுவது ஒருமுறை. அது 1) ஓம் ஹிரண்யாய நம: (2) ஓம் சுவர்ணாய நம: 3) ஓம் திவ்யாய நம: 4) ஓம் பவாய நம: 5) ஓம் சர்வாய நம: 6) ஓம் சிவாய நம: 7) ஓம் ஜ்வலாய நம: 8) ஓம் ஆத்மாய நம: என்று பூசித்தல். (ஐஐஐ) மற்றொரு வகையாக 1) ஓம் ஹிர்ணய லிங்காய நம: 2) ஓம் சுவர்ண லிங்காய நம: 3) ஓம் திவ்ய லிங்காய நம: 4) ஓம் பவலிங்காய நம: 5) ஓம் சர்வலிங்காய நம: 6) ஓம் சிவலிங்காய நம: 7) ஓம் ஜ்வலலிங்காய நம: 8) ஓம் ஆத்மலிங்காய நம: என்று, யசுர்வேதம் எட்டுவகைலிங்க நாமாக்களால் சிவபெருமானைப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போற்றிப் புகழ்கிறது. சைவாகமம் எட்டுவிதமலர்களால் எண்-குணத்தனான இறைவனை பூசித்திடுமாறுக்கூறுகிறது. இத்தகைய அஷ்டபுஷ்ப அருச்சனைக்கு உரியமலர்கள் முறையே

அர்க சம்பக புன்னாக நந்தியாவர்தாநி பாடலம்.
பிருஹதீ கரவீரம் ச துரோண புஷ்பாஷ்டகம் த்விதம்.

என்ற சைவாகமவசனப்படி 1எருக்கம்பூ,2செண்பகப்பூ, 3புன்னைப்பூ, 4நந்தியாவர்த்தம்பூ, 5பாதிரிப்பூ,6பிருஹதீ (கண்டங்கத்திரிப்பூ), 7அலரிப்பூ, 8தும்பைப்பூ ஆகிய எட்டுமலர்களையும் எட்டுநாமமந்திரத்தால் சேர்த்து பூசித்தலாகும். (ஐஏ) நான்காவதாக மற்றொரு வகையில், (1) ஓம் பவாய தேவாய நம: 2) ஓம் ஹாம் சர்வாய தேவாய நம: 3) ஓம் ஹாம் ஈசாநாய தேவாய நம: 4) ஓம் ஹாம் பசுபதயே நம: 5) ஓம் ஹாம் ருத்ராய தேவாய நம: 6) ஓம் ஹாம் உக்கிராய தேவாய நம: 7) ஓம் ஹாம் பீமாய தேவாய நம: 8) ஓம் ஹாம் மஹாதே தேவாய நம: என்றும், (ஏ) ஐந்தாவதாக மற்றொருமுறையில் அகவழிபாடாகிய மானஸபூஜையில், கூறியுள்ளவாறு நினைந்து அர்ப்பணிப்பது, 1அஹிம்சை, 2இந்திரிய நிக்ரஹம், 3க்ஷமா, 4தயா, 5ஞானம், 6தபம், 7ஸத்யம், 8ஸத்பாவம் என்கிற முறையே 1கொல்லாமை, 2பொறியடக்கல், 3பொறுமை, 4அன்பு, 5இறைஅறிவு, 6தவம், 7வாய்மை, 8அருள் எண்ணம் ஆகிய சைவசமயத்தின் ஸத்குணஅடிப்படையான பண்புகளையே மலராகக்கருதிஅளித்தல் பூசித்ததாகும். (ஏஐ) ஆறாவதாக வேறுவகையில் ஓம் எனும் பிரணவத்தை முதலாகவும், நம: என்ற மந்திர-பல்லவத்தை முடிவிலும் கொண்டுள்ளதாகவும், எட்டுமூர்த்திசீவரராகக்கருதிப் பெயர்களால் பூசித்தல் மற்றொருமுறை. அதாவது முறையே 1) ஓம், லூம், ஹாம், க்ஷ்மாமூர்த்தி அதிபதயே சர்வாயநம: (இதுபோலவே), (2) ஓம் ரூம் ஹாம் வன்னிமூர்த்தி அதிபதயே பசுபதயே நம: (3) ஓம் சூம் ஹாம் யஜமானமூர்த்தி அதபதயே உக்ராய நம: (4) ஓம் ஷூம் ஹாம் அர்க்கமூர்த்தி அதிபதயே ருத்ராய நம: (5) ஓம் வூம் ஹாம் ஜலமூர்த்தி அதிபதயே பவாய நம: (6) ஓம் யூம் ஹாம் வாயுமூர்த்தி அதிபதயே ஈசாநாய நம: (7) ஓம் ஸூம் ஹாம் இந்துமூர்த்தி அதிபதயே மஹாதேதேவாய நம: (8) ஓம் ஹூம் ஹாம் வியோமமூர்த்தி அதிபதயே பீமாய நம: இவ்விதமாக எட்டுமூர்த்திகளின் பெயர்களான நாமமந்திரங்களால், எட்டுமலர்களால், முறையே அஷ்டமூர்த்தங்களான 1நிலம், 2நீர், 3நெருப்பு, 4காற்று, 5ஆகாயம், 6சூரியன், 7சந்திரன், 8ஹோமம் செய்கிற யஜமானர் ஆகிய எட்டுவடிவங்களில் இறைவன் இருப்பதாக இறைவனைப்பசுபதியாகக்கருதி பூசிப்பது சைவாகமப்படி ஒருவகையான அஷ்டபுஷ்பார்ச்சனம் ஆகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நீர்ப்பூக்களின் நிகரிலாப்பெருமை. (ஜலபுஷ்பமஹிமை)

மிகச்சிறந்த நீர்ப்பூவாகிய நீலோத்பலத்தையும், உயர்தரவெண்தாமரையையும், அதன் மகிமைகளைஅறிந்து எவன் ஒருவன்பூசிக்கிறானோ, அவன் வீடு, மனைவி, மக்கள், வாஹநாதி ஸகலயோகங்களையும், ஸகலபாக்யங்களையும்பெற்று உலகில் சிறந்துவாழ்வான் என்கிறது மந்திரபுஷ்பமாக கூறப்படுகிற வேதமந்திரம். அந்த வேதமந்திர சான்று வசனம்,

"யோபாம் புஷ்பம் வேத, புஷ்பவான் ப்ரஜாவான் பசுமான் பவதி, ய ஏவம் வேத, யோ அபாமாயதனம் வேத, ஆயதனவான் பவதி"

(வேதம்)

இதன் பொருள் (அபாம் புஷ்பம் ஸ்ரீ நீரின் பூவை, யோ ஸ்ரீ யார், வேத ஸ்ரீ அறிவாரோ (ஆயதனம் ஸ்ரீ வசிப்பிடம் அல்லது முக்தி ஸ்ரீ வீடுபேறு, உடையவனாக ஆகிறான்" என்கிறது. (பத்மபுஷ்கரிணி / தாமரைகுளம்) ஆயதனவான் பவதி" ஆதலால் பொருள் மாறுபடினும் அந்தஎழுத்து சக்திமகிமையால் இதுவே மந்திரபுஷ்பம் என்று போற்றப்படுகிறது. மானுடப்பிறவியும், மலர்ப்பூசையும்.

எளியமலர்களை இறைவனுக்கு அருச்சிப்பதால், பெறுதர்கரியபயனை நாம்அடைவதற்கு சிவாகமசெந்நெறிஉள்ளபோது, காலத்தை வீணாக்கமல் இதனைப்பின்பற்றி, உயிர்கள் தாழ்ந்திடாது உய்யவேண்டும் என்பதை, ஆதிசங்கரர் தமது சிவானந்தலஹரியில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார். அந்த சுலோகம் எளிதில் கிடைக்கும் மலர்களாக எருக்கம்பூ, தும்பைப்பூ முதலானவற்றைக் குறிப்பிடுகிறது.

அர்க்க துரோண ப்ரபிருதி குசுமை: அர்ச்சனம் தே விதேயம்,
ப்ராப்யம் தேன ஸ்மரஹர பலம் மோக்ஷ ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ :.
ஏதத் ஜானன் னபி சிவசிவ வியர்த்தயன் காலம் ஆத்மன: ,
ஆத்ம துரோகீ கரண விவச: பூயஸா அதப் பதாமி.

(சிவானந்தலஹரி)

இச்சுலோகம் அனைவரையும் வாழும் ஜீவனகாலத்தை வீணாக்காது, எளியமுறையிலேனும் நித்தமும், கடவுளைப்போற்றிடுமாறு உபதேசிக்கிறது. கிடைப்பதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்றவர்கள், யாவரும் சதாசிவரைவழிப்பட்டால்மட்டுமே தமது பிறவியைப்பயனுள்ளதாக ஆக்கியவர்களாயும், செய்யவேண்டியதைச்செய்தவர்களாயும் ஆவார்கள் என்று நமது இதிஹாஸமாகிய மஹாபாரதத்தின் துரோணபர்வத்து நீதிசுலோகமான சுபாஷிதம் உபதேசிக்கிறது. அந்த சுபாஷிதநீதி சுலோகமாவது,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

துர்லபம் ப்ராப்ய மானுஷ்யம் யே அர்ச்சயந்தி ஸதாசிவம்.
தேஷாம் ஹி ஜன்ம ஸாபல்யம் க்ருதகிருத்யாஸ்து சோத்தமா:
(மகாபாரதம்)

இதனையே திருவள்ளுவப்பெருந்தகை "கற்றதனாலாயபயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" என்கிறார். தமிழ்மறையானதிருமுறையில் திருநாவுக்கரசு சுவாமிகள் புழுவாய் பிறந்தாலும், இறைவனை மறவாதிருக்க ஓர் வரத்தை தாம்கரையேறிய கடலூரின் தேவாரத்தில் வேண்டுகிறார். திருப்பாதிரிப்புலியூர் தேவாரப்பதிகப்பாடலானது,

புழுவாய் பிறக்கினும் புண்ணியா உன்அடி என் மனத்தே,
வழுவாதிருக்க வரம்தரல் வேண்டும் இவ் வையகத்தே,
தொழுவார்க்கு இரங்கி அருள்செய் திருப்பாதிரிப்புலியூ ரரனே,
செழுநீர் புனர்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே.
(அப்பர்)

இவ்விதம் சான்றோர்களால் கூறப்படுவதால் நாமும் பரமனை தினமும் சிந்தித்து, மலர்களால் போற்றிப்புகழ்ந்திருந்து பணிந்துதொழவேண்டும் என்பதே சைவசமயம் கூறும் நன்நெறியின் ஒழுக்கச்செயலாகும் என்பதை யாவரும் உணரலாம். இவ்விதம் தேவர்களே எடுத்துக்காட்டாக சிவனைப்பூசித்து வாழ்கின்றனர் என்பதையும், தேவர்கள் இறைவனைப் பூசித்து நமக்கு வழிகாட்டுகின்றனர் என்பதை உணர்த்துவதை தேவாரத்தில் "பூவார் மலர்கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்" என்கிறார் திருஞான சம்பந்தர். திருவண்ணாமலையார் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே,

"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை" பிரிவிலா அடியார்க்கு
வாராத செல்வம் வருவிப்பானைமந்திரமும் தந்திரமும் மருந்துமாகி
தீராநோய்தீர்த்து அருளவல்லான்தன்னை திரிபுரங்கள் தீயெழத்தின்
சிலைக் கைக்கொண்ட,
போரானை புள்ளிருக்கு வேளூரானை போற்றாதே ஆற்றநாள்
போக்கினேனே
(அப்பர்)

என்று வைத்தியநாதப்பெருமானைத்துதிக்கையில், திருநாவுக்கரசர் இறைவனை தினமும் தேவர்கள் மலர்கொண்டு ஆயிரம்பெயர்கூறி ஸஹஸ்ரநாமஅருச்சனை செய்வதைக் குறிப்பிடுகிறார். ஸ்ரீகாளத்திப்பாடலில் அப்பர்சுவாமிகள் சிவபெருமான்தம்முடியில் "நறுங்கொன்றைப் போதினுள்ளான்" என்று உயரிய சரக்கொன்றைமலர்களை அணிந்தவராக சிவனை குறிப்பிட்டுஉள்ளார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆகமபூஜையில் அஷ்டபுஷ்ப வகைகள்.
(மலர்வகைத் தொகுப்புகளின் சான்றுகள்)

(1) அர்க பங்கஜ பில்வம் ச நந்தியா வர்த்தம் ச பாடலீ.
கரவீரம் சம்பகம் ச நீலோத்பல மதா ஷ்டகம்.
(காமிகாகமம்)

(2) பத்மம் சைவார்க்க புஷ்பம்ச நந்தியா வர்த்தம் பாடலீ.
துரோண புஷ்பம் ச மந்தாரம் கரவீர மதோ த்பலம்.
அஷ்ட புஷ்ப மிதிக் யாதம் ஸர்வ தேவாத் மகம்விது :.
(காரணாகமம்)

(3) கரவீர த்வயம் சைவ நந்தியா வர்த்தம் ததைவச.
மஹாத் ரோணம் ததார்க் கஞ்ச மல்லிகா சம்பகம் ததா.
நீலோத்பலம் ததாசிரேஷ்டம் அஷ்டபுஷ்பம் சுயோஜயேத்.
(ஸகலாகமஸங்கிரஹம்)

(4) அர்க்க சம்பக புன்னாக நந்தியா வர்த்தம்ச பாடலீ
பிருஹதீ கரவீராணி துரோண புஷ்பாணி சார்ச்சயேத்.
(காரணாகமம்)

(5) பங்கஜார்க்க பலாசம்ச நந்தியாவர்தம்ச மல்லிகா.
கரவீரம் பகம் சைவ நீலோத்பல மதாஷ்டகம். (அம்சுதமாகமம்)

(6) அர்க்கபுஷ்பம்ச பில்வம்ச அபாமார்க்க கரவீரகம்.
பங்கஜம் நாகநந்தீச நந்தியாவர்த்தம்ச மல்லிகா.
அஷ்டபுஷ்பம் ததாவத்ஸ பிராதஸ் ஸந்தியாம்து புஷ்பகம்.
(காரணாகமம்)

(7) துரோணபுஷ்பம் ததாமந்தாரம் சங்கபுஷ்பகம்.
சுவேதம் பலாச துத்துராம் வியாக்யாதம் வியாக்ர புஷ்பகம்.
சமீ சைவது மத்யான்ஹே ப்யஷ்டபுஷ்பம் சுயோஜயேத்.
(காரணாகமம்)

(8) அபரான்ஹார்சனா புஷ்பம் பூமூலம் சம்பகம் ததா.
வகுளம் கிருஷ்ணவல்லீச மல்லிக த்வயமேவச.
ஜாதீச தாந்த ஸம்யுக்தம் ஸாயே சைவார்தயாமகே.
(காரணாகமம்)

இவ்விதம் மேற்கண்ட ஆமகவசனங்களால் அஷ்டபுஷ்பவகைகளை அறிந்து பயன் பெறலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆமகபூசையின் அருஞ்சிறப்பு.

வேதாகம வழிப்பாட்டில் அஷ்டபுஷ்பார்ச்சனை மிகவும் சிறப்பும், தனித்தன்மையும் வாய்ந்து விளங்குகிறது. வேதத்தில் ஹிரண்யலிங்காயநம: முதலான அஷ்டலிங்கங்களின் நாமார்ச்சனையும், பவதேவர் முதலான எட்டுமூர்த்தீச்வரர்களின் நாமார்ச்சனையும் கூறப்பட்டு உள்ளது. அவற்றுடன் ஆகமத்தில் சம்ஹிதாமந்திர மூலமந்திரங்களால் அஷ்டபுஷ்பார்ச்சனை கூறப்பட்டுள்ளது. ஒவ்வொருபூசையிலும் எட்டுதருணங்களில் இந்த அஷ்டபுஷ்பார்ச்சனை செய்யப்படுவதாலேயே அப்பூசையானது, ஆகமபூசை என்பதை தெளிவுப்படுத்திச் சிறப்பிக்கிறது. ஆதலால் அஷ்டபுஷ்பங்களின் தொகுப்பு பலவாறாக பூஜாகாலத்திற்கும், தெய்வத்திற்கும் ஏற்றவகையில் பலஆகமங்களில் கூறப்படுகிறது. எட்டுகாலஆலயபூசைக்கும் தனித்தனியாகவும், உத்தம மத்யம அதமநிலைகளில் மூவகையாகவும், தேவதைகளுக்கேற்ப, மாறுபட்டும், காம்யபூஜைக்கு ஏற்பவும், பலமலர்வகை எட்டு, எட்டாக கூறப்பட்டுள்ளன. இவற்றை முன்னோர்கள், சான்றோர்கள் தொடர்ந்து கடைபிடித்துவந்த வழக்கமான சிஷ்டாசாரப்படி கடைபிடிப்பதுமுறையாகும். அஷ்டபுஷ்பார்ச்சனையின் பயன் யாதெனில் அடியவர்களுக்கு இறைவனின் எண்குணங்கள் சித்திப்பதே ஆகும். எண்குணத்தானாகிய, இறைவனுக்குரிய சிவத்தன்மையாகிய எட்டுகுணங்களும் ஆத்மாக்களுக்கு கைகூடுவதற்க்கும், அஷ்ட-ஐச்வர்யங்கள், அஷ்டமாஸித்திகள் முதலியன கிட்டுவதற்கும் பூசையில் அஷ்டபுஷ்ப்பார்ச்சனை முக்கியமாக செய்யத்தக்கது. பூசையில் உரிய பூவை சந்தனம்சேர்க்காது ஒருபோதும் சாத்துதல் கூடாது. இதனை "புஷ்பம் கந்தேன ஸம்யுக்தம் கந்தம் புஷ்பேனசார்சயேத்" என்று ஆகமங்கள் வலியுறுத்தியுள்ளன. ஐம்பெரும்பூதங்களின் அம்சங்களாய் இடம்பெறுகின்ற பூசைப்பொருள்களில் ஸகலத்திற்கும் ஆதாரமாய்உள்ளபூமியின்அம்சமாக. "கந்தவதீப ப்ருதிவீ" எனும் பூமியின் இலக்கணத்தின்படி, மண்அம்சம் இன்றி உலகில் எதிலும் வாசம் என்பதுஏற்படுவதுஇல்லை என்பதால், பூசையில் நறுமணமுள்ள சந்தனமும், மணமுள்ளமலரும் இணைத்தே ஸமர்ப்பிக்கப்படவேண்டும் என்கிறது ஆகமம். இந்த கந்தபுஷ்ப பார்திவ உபசரிப்பினால் மண்ணுலகும், மன்னனும், மக்களும், மகிழ்ந்துவாழ்வது திண்ணம் என்பது ஆகமகருத்தாகும். அகவழிபாடு, புறவழிபாடு, மானஸ பூஜை ரதவிமான மண்டபாதிபூஜை, யாவிலும், மிகச்சுருக்கமாக செய்யப்படுகிற பஞ்சோபசாரபூஜையிலும்கூட, இவ்விரண்டும், சந்தனமும், மலர்களும் தவறாமல் இடம்பெறுவதை உற்றுநோக்கி உணர்ந்திடவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருமுறையில் மலர்பூசையின் மஹிமை.

தமிழ்மறையாம் பன்னிருதிருமுறைகளிலும், ஆகமங்களின்படி அடியார்களால் மலர்வழிபாடு பற்றி அதிகமாக குறிப்பிடப்பட்டுஉள்ளது. அவற்றுள் சிலவற்றை இங்கு தொடர்ந்து தினமும் மலர்தூவி வழிபட்டதைக் கூறுகிறது..

வாச நலஞ் செய்திமையோர் நாடோறு மலர்தூவ
வீசனெம் பெருமானார் ருனிதாக வுரையுமிடம்
யோசனைபோய்ப்பூக் கொணர்ந்தங்கொரு நாளுமொழியாமே
பூசனைசெய் தினி திருந்தான் புள்ளிருக்கு வேளூரே.
(வைதீஸ்வரன் கோயில் தேவாரம்)

நொச்சியே வன்னிகொன்றை மதிகூவிளம்
உச்சியே புனைதல் வேடம் விடையூர் தியான்
கச்சியே கம்பம் மேவய கறைக்கண்டனை
நச்சியே தொழுமினும் மேல்வினை நையுமே
(காஞ்சீபுரம் திருஞானசம்பந்த தேவாரம்)

(நொச்சி, வன்னி, கொன்றைமலர்களின் பூசையால் வினைகள் நீங்கும் எனக் கூறுகிறது)

விண்ட மாமலர் கொண்டு விரைந்து நீர்
அண்ட நாயகன் றன்னடி சூழ்மின்னல்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே .

(திருவான்மியூர் அப்பர் தேவாரம்)

(நீர்ப்பூக்களால் தொழுதிடபாவம் நீங்குமெனக் கூறுகிறது).

மலர்களின் மருத்துவகுணப்பயன்பாடுகள்.

இறைவனால் படைத்தருளப்பட்டுள்ள இம்மண்ணுலகில் பூக்கள் தாம் எத்தனைவகைகள் பூக்கள் ஒவ்வொன்றிடமும் பலமருத்துவகுணங்கள் அடங்கியுள்ள விந்தைதான் என்ன? உயிர்கள் இறைவனால் படைக்கப்பட்டவைஅல்ல. உயிர்கள் நித்தியமானவை, (தோன்றி அழியாதவை) அவ்வுயிர்கள் உரையும் இடமும், உயிர்கள் அறம்செய்யஉதவிடும் உன்னத ஸாதனமும் நமதுஉடலேஆகும். இவ்வுடலைப் பற்றிஇருந்து உடலைச்செயலிழக்கச்செய்திடும் பலவகை நோய்களைப்போக்கி, நமக்கு தேஹஆரோக்கியத்தைத்தரவல்ல ஒப்பற்றவல்லமை-களைப் பொருந்திஉள்ளவையே அரியபல

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பத்திரபுஷ்பங்களைஉடைய தாவரமூலிகைகளை இறைவன் படைத்து, அவற்றின் மருத்துவகுணங்களால் உயிர்கள் நலம்பெறும் வழிமுறை-களையும், தாவரபத்திரபுஷ்பங்களால் எளியமுறையில் செய்யத்தக்க, நோயிக்குஏற்ற உரிய சிகிச்சைமுறைகளையும் கூறும் சித்தமருத்துவம், ஆயுர்வேதம், ஆகமம் போன்ற சாத்திரங்களைப் பின்பற்றி, உடல்நோய்களைநீக்கி, தேஹாரோக்கியத்தை யாவரும் பெற்றிட இறைவனின் அறநூல்கள் பெரிதும் உதவுகின்றன. சில தாவரச்செடிகொடிகளின் அனைத்துஉறுப்புகளும், (பஞ்சாங்கங்களும்) மருத்துவகுணமுள்ளவையாகும். சிலவற்றில் இலைகளும், சிலவற்றில் மலர்களும், சிலவற்றில் இலை, பூமொட்டுகளும் மருத்துவகுணம்கொண்டவைகளாக பலவாறாக பயனளித்து தாவரஇனங்கள் மனிதஇனத்திற்கு நீண்டஆயுள்தந்து, காத்துஉதவுகின்றன. சிறப்பும், மருத்துவகுணமும்உள்ள இப்பூவகை, இலைவகைகளுக்குள் பலவும் இறைவழிபாட்டில் முக்கியமானவையாக முதலிடம் பெற்றவைகளாக இருந்துகொண்டு, நறுமணத்தாலும், வாசத்தாலும், அபிஷேகபாநீயாதி ஊரல்தீர்த்தங்களாலும், அர்ச்சகர் மற்றும் அடியவர்களுக்கு நோய்நீக்கும் மருந்தாகின்றன. ரோஜாப்பூ பன்னீராகவும் பயன்தருகிறது. முல்லை, மல்லிகை முதலிய பலமலர்கள் அத்தர் தயாரிப்பிலும், வழிபாடுகளிலும் பயன்தருகின்றன.

மருத்துவகுணங்களால் மருத்துவத்துறையில் மருந்துதயாரிப்பில் பலவகைப்பூக்கள்

இப்பூக்களில் பல தைலம் தயாரிக்கஉதவுகின்றன. நாம் அத்தைலத்தினால் அநேக நன்மைகளைப் பெறுகிறோம். செம்பருத்தி முதலிய பல பூக்கள் சர்பத் தயாரிக்க உதவுகின்றன. அந்தசர்பத்தை நாம்உண்பதனால் எத்தனையோ குணநலங்கள் ஏற்படுகின்றன. மேலும் சிலபூக்களிலிருந்து கஷாயம் இறக்கி மருந்தாக அனுபானமாக உபயோகப்படுத்தும் அளவுக்கு மலர்கள் உயர்ந்துவிளங்குகின்றன. சிலபூக்களைத் தண்ணீரில்ஊறவிட்டு மணம்மிக்க குடிநீர் தயாரிக்கிறோம். சிலபூக்களைஅரைத்து மேலேபற்றிட்டுக்குணம் அடைகிறோம். மற்றும் சில பூக்களை வதக்கித் துணியில்முடிச்சிட்டுப் பொறுக்கக்கூடிய சூட்டுடன் ஒத்தடம் கொடுத்துக் குணம்பெறுகிறோம். தவறாக உண்டவிஷத்தை முறிக்கவேண்டுமா? அதற்கெனச் சிலபத்திர புஷ்பங்கள்உள்ளன. காமஇச்சையை அதிகம்பெறவும் சிலபூக்கள் உதவுகின்றன. உடலின் கட்டிவீக்கம் இவைகளைத்தணிக்கச் சிலபூக்கள் சிலபூக்கள் எருவாய், கருவாய் உறுப்புகளில் ஏற்படும் பிணிகளைப் போக்கவல்லனவாய்உள்ளன. சீரணசக்தியை உண்டாக்குவதற்கென்றே சிலபூக்கள்உள்ளன. உடலின் பலத்தைப்பெருக்கிக்கொள்ளவும் இப்பூக்களில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிலஉதவுகின்றன. உடலின் தாதுக்களின் கொதிப்பைக்குறைக்கவும், தேஹஉஷ்ணத்தைத்தணிக்கவும், சுரத்தைத் தணிக்கவும், தாதுவிருத்திக்கும், வாயு, பித்தம் இவைகளைக் கண்டிக்கவும், சிலசிறப்புப்பூக்கள் இப்பூவுலகில்உள்ளன. குழந்தைப்பேறு கிடைக்கவும், சுகமானபிரசவம் ஏற்படவும் பலபூக்கள் உதவுகின்றன. பூக்களின் மருத்துவகுணங்கள் நமக்கு வியப்பை உண்டாக்கினாலும் இவை முக்காலும் உண்மை என்கிறது ஆயுர்வேத சித்தமருத்துவசித்தர்களின் பாடல்கள். பொதுவாக உடலுக்கு ஆரோக்கியம் அளிக்கும் பூவகைகள் அனேகம்உள்ளன என்பது உண்மையாகும். மேலும் கோயில் கட்டிடத்தில் ஒவ்வொரு வர்கத்தின் கட்டிடஅமைப்பிலும் தாமரைஇதழ் முதலான பூவேலை அமைந்துள்ளது. தெய்வத்திருமேனியான கோயில் எனும் உடலுக்கு ஜீவநலம்தந்து ஓம்புதலுக்காகவே அமைக்கப்பட்டுள்ளன என்றுஅறிக. எல்லா தெய்வங்களுக்கும் ஒருசிறப்பு இலையும் பூவும் உண்டு. பூஎன்பது ஓர்சிறந்தமங்களப்பொருள், இதில் தாமரை பத்மநிதி எனப்படும். உலகில் தாமரை என்றபெயரில் 24வகை தாவரங்கள் உள்ளதாக மருத்துவ நூல்கள் கூறுகின்றன. தெய்வங்களின் திருவுருவமேனியில் சிலைகளில் பலபூக்கள் தலை, காது, கழுத்துகளில் இடம்பெற்றுள்ளதைக்காணலாம். மேலும் முற்காலத்தில் பீர்க்கு-பூக்குமானால் மாலைப்பொழுது என்றும், அல்லிமலர்ந்திடுமானால் இரவு எனவும், தாமரை மலர்ந்தால் பகல் என்றும், பீர்க்கு அல்லி தாமரை போன்ற மலர்கள் காலம் காட்டும் இயற்கைக்கடிகாரங்களாக விளங்கின. இவை மேகம்மூடிக் கதிரவனைக் காணமுடியாத போதும் இவற்றால் பொழுதை அறியலாம். இச்சிறப்புளை அறிந்து, மலர்ச்செடிகளைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்துப் பயன்பெறவேண்டும். செந்தமிழ்நூலான நன்னூல் ஒருபாடலில் நல்லாரிசியருக்குப்பூவினை உவமையாக காட்டுகிறது. அப்பாடல்,

மங்கல மாகி இன்றியமை யாது
யாவரும் விரும்பி மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே.

ஒரு குறளில் விருந்தோம்பலை அனிச்சமலருடன் திருவள்ளுவர் ஒப்பிட்டுக்கூறிஉள்ளார். அக்குறள்

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திறிந்து
நோக்கக் குழையும் விருந்து. (குறள்).

இதனால் அப்பூவின் அதிகமென்மை விளங்கும். இவ்விதம் பலவித மனோபாவனைகளையும், நவரசங்களையும்கூட, மலர்கள் யாவும் நிறம், குணம் இவற்றால் உணர்த்த உதவுகின்றன. பல மலர்கள் முகரப்படுவதாலேயே மூக்கடைப்பு, ஜலதோஷம், தலைவலி, கண்வலி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இவற்றை போக்கி உதவுகின்றன. நாம் குளித்திடும்ஜலம், எண்ணை முதலானவைகளில் பூவைபோட்டு உபயோகிப்பதால் ஸகலதோஷமும் அகலும் காலதோஷமில்லை என்று தருமசாத்திரநூல்கள் கூறுகின்றன.

தாமரைமலரின் தனிச்சிறப்பு.

தாமரைமலரே மலர்களின் அரசனாக பலவாறு விளங்குகிறது.

1.வெள்ளைத்தாமரை	13. மேட்டுத் தாமரை
2.சிவப்புத் தாமரை	14. முழுகு தாமரை
3.நீலத் தாமரை	15. கிருஷ்ண தாமரை
4.ஓரிலைத் தாமரை	16. அந்தரத் தாமரை
5.மலைத் தாமரை	17. மஞ்சள் தாமரை
6.ஆகாசத் தாமரை	18. ஈரிலைத் தாமரை
7.வட்டத் தாமரை	19. மூவிலைத் தாமரை
8.கற்றாமரை (கல்)	20. நூறுஇதழ் தாமரை (சதபத்ரீ)
9.நிலத் தாமரை	21. சிற்றாமரை
10.கடல் தாமரை	22. பல்லிதழ் தாமரை (பகுபத்ரீ)
11.குளிர் தாமரை	23. பெருந்தாமரை
12.அல்லித் தாமரை	24. பொற்றாமரை

இவ்விதமாக தாமரை பலபெயர்களில் விளங்குவதாகும். சிலவகையே வழிபாட்டிற்கு உரியவை. மற்றவை மருத்துவத்துறைக்கானவை. தாமரைமலரை சமைத்துஉண்பதால் இதயநோய் ஏற்படாது. இவ்வாறு பலவகையிலும் பயன்படும் அனைத்து உறுப்புகளை உடையது தாமரை ஆகும்.

ரோஜாவின் சிறப்பு.

இவ்விதமே நிலத்தாமரை சிற்றாமரை என்றும் ஸ்தலாப்ஜம் என்றும் போற்றப்படும் ரோஜாப்பூவானது பலவகையில், பலநிறமாய் புஷ்பராஜா என்றும் பிறநாட்டினர் புஷ்பராணி என்றும் போற்றுவதாக விளங்குகிறது. இது முட்கள்நிறைந்த ஒருவகைக்குத்துச்செடி. பூக்களின் நிறவேற்றுமைகளினால், இச்செடியில் பலவகைசாதிகளுண்டு, வெள்ளை, இளஞ்சிவப்பு, நற்சிவப்பு, மஞ்சள், பச்சை, கலப்புநிறம் போன்ற பூக்களைத்தரும். செடிகளை நாம் பல இடங்களில் காணலாம். ரோஜா இதயத்துக்கு வலிமையும்தரும், முகர்ந்தால் சளிகுறையும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மெல்லியஇதழ்களை தேனிலோ அல்லது சாதாரணமாகவோ தின்றால் மலச்சிக்கல் மறையும், இதழின் சாற்றைப்பிழிந்து ஒருதுளிநாசியில் விட்டுக்கொள்வதால் தலைவலிநீங்கும். குல்கந்து செய்து உண்டால் உடல்சூடுதணியும். நம்நாட்டில் பயிராகும் ரோஜாமலர் இரண்டு வகைப்படும். அவை "பஸ்ரா" என்றும், "எட்வர்டு" என்றும் வழக்கத்தில் கூறப்படுகிறது. இதில் பஸ்ரா ஜாதிமலரே சிறந்ததாகும். ரோஸ்அத்தர் தயாரிக்க உதவுவது இம்மலரே ஆகும். ரோஜாவின் வசீகரவண்ணத்தையும், வனப்பையும், மணத்தையும்கண்டும், நுகர்ந்தும் களிக்காதவர் எவருமே இல்லை. ஆண்பெண் இருபாலரும் ரோஜாவை விரும்பிகண்டு மகிழ்வதைப்போல மற்நெற்த மலரையும் கண்டுமகிழ்வதில்லை. ரோஜாப்பூவிற்கு பன்னீர்ப்பூ, குலாப்பூ, சிற்றாமறை என்ற பிறபெயர்களும் உண்டு. இதனை நாட்டுரோஜா, காட்டுரோஜா என இருவகையில் கூறுவர். நாட்டுரோஜா என்பது நம் வீட்டிலும், காட்டிலும், தோட்டத்திலும் சுயேச்சையாக வளருகின்றது. இச்செடி இந்தியாவில் எங்கும் பயிரிடப்படுகிறது. காட்டுரோஜா என்ற மற்றஜாதீ ரோஜாப்பூ பார்வைக்கு மிக அழகாகச்சிவந்தவண்ணத்துடன் காணப்பட்டபோதிலும் நறுமுணமுடையதன்று. இதுவே நம்நாட்டில் அதிகமாகப் பயிரிடப்பட்டு மாலைக்கட்டப் பயன்பட்டுவருகிறது. இந்த காட்டுரோஜா திடமான இதழ்களுடன் பெரியதாகவும், பலநிறங்களிலும் நீண்டகாம்புடன் பலநாள் உதிராது இருக்கக்கூடியது. ரோஜாவின் பூவும், மொட்டும், சமையலிலும், உணவிலும், மருந்துகளிலும், பன்னீர் தயாரிப்பிலும் பயன்படுகிறது.

மூலிகைகளின் மஹிமை.

மனிதசக்தியைவிட மேலானசக்திகள் உடையது. மூலிகைகள் நமது வாழ்க்கையில் ஏற்படும் அதிர்ஷடங்கள், தோஷம், பிணி, ரோகம் ஆகியவைகள் ஒருசில மூலிகைகளைப் பார்ப்பதாலும், நினைப்பதாலும் அவைகளின் ஸ்பரிசம் நம்மேல் படுவதாலும் விலகுகின்றன என்பது சாஸ்திரோக்த உண்மை. வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் யாவும், அனைத்து மரம், செடி, கொடி, இலை, பூ, காய்கனி, தானியங்கள் அனைத்தையும் பலவாறும் போற்றியும் விசேஷமாக பலமூலிகைகளை வேதமானது ஒஷதிசூக்தத்தாலும் போற்றிப்புகழ்கிறது. ஒஷதி வனஸ்பதிப்யோ என்றும், நமோ விருக்ஷேப்ய: என்றும், நமஓஷதீப்ய: என்றும், பர்ணம் வனஸ்பதே என்றும், துதித்துள்ளதாலும் இவற்றின் மஹிமைகளை நாம் நன்குஉணரலாம். சிவாகமத்தில் தேவதைகளின் சிலைக்கு அடியிலும், லிங்கத்தின்தடியிலும் வைத்திடவும், ஊரல்நீரைத்தயாரிக்கவும், அதிககலசநீராட்டல் முறையிலும், யாகத்தால் விசேஷதிரவியஆகுதி ஹோமத்திற்கும் பலவகையான நீராட்டலுக்காக சிறப்புமிக்க மூலிகைகள் ஆகமங்களில் கூறப்பட்டு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ரித்தி, ஸஹதேவி, பிராம்ஹீ முதலானவை மிகமுக்கியமானவையாகும். பஞ்சௌஷதி என்றும், நவௌஷதி என்றும் இருவகையில் கூறும். ஒன்பதுவகை ஒஷதிகளை மிருகேந்திர ஆகமம் குறிப்பிடுகிறது.

> ஸஹதேவீ மதபிராம்ஹீம் திராயந்தீம் லக்ஷணாவதீம்.
> சங்கபுஷ்பீ பலாபீஜா ஜ்யோதிஷ்மதி அபராஜிதா:.
> விஷ்ணுகிராந்தீ பலாமோடா பில்வ தாத்ரீ பலா(அ)மிருதா:
> சதாஹ்வா சாரிபா தூர்வா வியாக்ரீ புநர் நவ.
> (மிருகேந்திராகமம்)

மேலும் சிந்தியவிச்வாகமத்தில் ஐவகைஒஷதிகள் (மூலிகைகள்) பஞ்சௌஷதீ என்று குறிப்பிடப்-பட்டுஉள்ளன. அவை,

> ஸஹதேவீ ஏகபத்ரம் ச பத்ரம் வை கங்கதம் ததா
> விஷ்ணுகிராந்திம்ச பஞ்சைதே பஞ்சௌஷத மிதிஸ்மிருதம்.

இவற்றுள்பல உலர்ந்தசரக்குகளாக, நாட்டுமருந்துகடைகளிலும், ஆயுர்வேத சித்தமருந்தக மூலபொருள்களிலும் கிடைப்பவை. இவற்றுள்பல பத்ரபுஷ்பமாய் பூசையிலும் இடம்பெறும். இவற்றின் பெயர் விவரங்களை குருமுகமாய் அறிதல் முறையாகும்.

மலர்களின் மறுபெயரும் மகத்துவப்பயனும்.

பூவினங்களின் பிறபெயர்களை தமிழ் மற்றும் சமஸ்கிருதத்திலும், குணம், நிறம், வகை, மஹிமை, தேவதை, பயன் முதலியவற்றை சுருக்கமாக குறிப்புகளால் இனி சிலவற்றை அறிவோம். இங்கு த.பெ ஸ்ரீ என்பதை தமிழ்பெயர் என்றும், இங்கு ச.பெ. ஸ்ரீ என்பதை சமஸ்கிருதபெயர் என்றும் இனி பொருள்கொள்ளவும்).

(1) த.பெ. **வெண்டாமரைப்பூ** (வெள்ளைநிறத் தாமரைமலர்)
ச.பெ சுவேதாப்ஜம், புண்டரீகம், தவளாம்போருஹம், ஸிதஸ ரோருஹம், புஷ்கரம், புண்ட்ரம், கைரவம், சாரவம், இது சாத்விகமலர். வெள்ளைநிறம், நீர்ப்பூவகை, சிவப்பிரியம், இதன் தெய்வம் சிவன், பயன் - ஞானசித்தி தருவது. ஸகலதேவதைக்கும் உகந்தமலர், அனைத்து மலரினங்களிலும் உயர்ந்தது.

(2) த.பெ. **செந்தாமரைப்பூ மற்றும் இலை** (பத்மபத்ரம் உத்தமபத்திரம்)
ச.பெ. ரக்தாப்ஜம், ரக்தபத்மம், அருணாம்புஜம், குசேசயம், ஸரோஜம், நளினம், ராஜீவம், அரவிந்தம், பத்மம், பங்கஜம், அருணகமலம், வனஜம், கோகனதம். இது ராஜஸபுஷ்பம், சிகப்புநிறம், நீர்ப்பூ, தேவீபிரியம், தேவதை - லக்ஷ்மீ, ஸகலதேவதைக்கும் ஏற்றது, செல்வமளிப்பது. இதன் இலை பிய்த்து பூசிக்கத்தக்க உரியபத்தரமாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(3) த.பெ.**பொற்றாமரைப்பூ** (நூறிதழ்த்தாமரைப்பூ, ஆயிரமிதழ்த்தாமரை) ச.பெ. ஹேமாப்ஜம், சுவர்ணபத்மம், ருக்மாப்ஜம், சதபத்ரீ, ஸ ாத்விகமலர், வெளுர் மஞ்சள்நிறம், நீர்ப்பூவகை. நூறு அல்லது ஆயிரம் இதழுடைய மிகஅரியவகை மலர். சிவப்ரீதிகரம். இதன்

தேவதை உமாதேவி.

(4) த.பெ.**செங்குவளைப்பூ, செங்கழுநீர்பூ, செந்நெய்தல்பூ.**
ச.பெ. ரக்தகல்ஹாரம், ரக்தோத்பலம், அருணேந்தீவரம், ரக்தாப்ஜம். இது ராஜஸபுஷ்பம். சிகப்புநிறம், நீர்ப்பூவகை. ஸர்வதேவதாயோக்யம், இஷ்டசித்திதருவது, நீரோடைமலர், இதன் தேவதை சூரியதேவன்.

(5) த.பெ. **கருங்குவளை. கருநெய்தல், நீலத்தாமரை, கருநைதல்.**
ச.பெ. நீலோத்பலம், நீலகல்ஹாரம், நீலேந்தீவரம், நீலாப்ஜம், நீலபுஷ்கரம், இந்திவரம், கர்ணபூரம், குவலயம் முதலியன. ஸாத்விகமலர். நீலநிறம், நீர்ப்பூவகை. சிறப்பு - ஸர்வதேவதாபிரியம், இதன் தேவதை - உமாதேவி இம்மலர்மிகவும் மென்மையானது, உயர்ந்ததரமானது. மூவுலகிலும் இது அரியமலர். இது ஒப்பற்ற உத்தமபுஷ்பம் ஆகும்.

(6) த.பெ. **செவ்வாம்பல் (செவ்வல்லி, சிவப்புநிற அல்லிப்பூ)**
ச.பெ. ரக்தகுமுதம், அருணகுமுதம், கைரவம், ராஜஸம், சிகப்புநிறம். நீர்ப்பூவகை. குணம் - ராஜஸம், தேவதை - தேவியர்மலர்.

(7) த.பெ. **வெள்ளாம்பல்** (வெள்ளைஅல்லி)
ச.பெ. சுவேதகுமுதம், குவலயம், குமுதினீ முதலியன. சாத்விகுணம். வெள்ளைநிறம், நீர்ப்பூ-வகை. சந்திரன் தேவதை.

(8) த.பெ. **நீலாம்பல்** (நீலஅல்லி)
ச.பெ. சியாமகுமுதம், நீலகுமுதம், நீலாம்புஜம், நீலநீரஜம். தாமஸகுணம், நீலநிறம், கிராமதேவதை.

(9) த.பெ. **தாழம்பூ** (தாழைமலர்)
ச.பெ. : கேதகீபுஷ்பம். சிவன் மற்றும் கணபதிக்கு விலக்கி விசேஷ நாளில் சேர்க்கலாம்.

(10) த.பெ.**தருப்பைப்பூ** (நாணல்பூ மற்றும் தருப்பைநுணிகள். பத்திரம்)
ச.பெ. குசபுஷ்பம், அதஸீபுஷ்பம், தர்பசுமம், தர்பாக்ரம், சரசுமம் முதலியன. இது சாத்விகபூ. வெள்ளைநிறம், ஸர்வதேவதாபிரியம், மணமற்றபோதும் உயர்ந்ததரமான உத்தமமானபுனிதமலர். இத்தர்பையின்முனைகளை மட்டும் கைப்பிடிவிரல் நீளத்தில் எடுத்துப்பூசித்தல் நன்று. உத்தம அருச்சனையாகும். தருப்பைகளின்நுணியில் கங்கை முதலான ஸ கலநதீ தீர்த்ததேவதைகள் உள்ளதால் இது மிகவும் புனிதமான பத்தரபுஷ்பமாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(11) த.பெ. **புன்னைப்பூ,** சுரப்புன்னை.
ச.பெ. புன்னாகம், கேஸரம், சாத்விகமலர். வெள்ளைநிறம். வாயுதைவதம், சிவபிரீதிகரம், அஷ்டபுஷ்பாத்மகம், மரப்பூவகை. மிகச்சிறந்த மலர்களுள் ஒன்றாகும். கிருஷ்ணருக்கும், நாகருக்கும், நாகதோஷம் நீக்கவும் நன்று.

(12) த.பெ. **மந்தாரைப்பூ (வெண்மந்தாரை & செம்மந்தாரை)** சிவமல்லிகை, கொக்கு மந்தாரைப்பூ, வெண்பூ, கொக்கிறகுப்பூ.

ச.பெ. மந்தாரபுஷ்பம், பகபுஷ்பம், சிவமல்லிகா, ரக்தமந்தாரம், சுவேதமந்தாரம், பாரிஜாதம், வெள்ளைப்பூ, சாத்விகம். சிகப்புநிறப்பூ. மரப்பூ (கோட்டுப்பூ). இந்திரதைவதம், மலர்சிறப்பு ராஜவசியத்தைச் செய்யும். கண்ரோகத்தை நீக்கவல்லது. சிவபெருமானுக்கு மிகவும் உகந்த விருப்பமலராகும்.

(13) த.பெ. **நாகலிங்கப்பூ : அலர்நந்தி.**
ச.பெ. நாகநந்தீ,நாகலிங்கீ,சாத்விகமலர்.வெள்ளைநிறப்பூ.மரப்பூவகை. சிவதைவதம், வாசுகீ எனும் நாகப்பிரீதிதம், சிவசாயுஜ்யத்தைத்தரும் சிறப்புடையது. மருத்துவகுணமுள்ளது.
நாகதோஷத்தை போக்குவது. உத்தமமலர்.

(14) த.பெ. **கோங்குப்பூ** (கொங்கம்பூ) (முள்ளுமுருங்கைப்பூ) .
ச.பெ. கர்ணிகாரம், வங்ககுசுமம், கர்ணிகா முதலானவை. சாத்விகராஜஸகுணமுள்ளது. மஞ்சள்நிறம், இது சரஸ்வதீதைவதம், வாக்சித்திஅளிப்பது. கள்ளுண்டபாவத்தை நீக்கவல்லது, மரப்பூவகையைச் சார்ந்தது. இதுவே விருக்ஷோத்பலம், மரக்குவளை எனவும் பெயர்பெறும்.
(15) த.பெ. **அசோகம்பூ** (நெட்டிலிங்கம்பூ) .

ச.பெ. அசோகபுஷ்பம், கர்ணபூரம், வஞ்சுளம், சித்ரகம், மன்மதகுசுமம், சாத்விகம், வெள்ளை, மரப்பூவகை, இதன் உறுப்புகள் பஞ்சாங்கம் யாவும் மருத்துவகுணமுள்ளது. பெண்களின் கருப்பை மற்றும் உதிரநோய்களை நீக்கவல்லது. சிவலிங்கத்தை உடைத்த பாவத்தைஅகற்றும் மகிமையுள்ளது.

(16) த.பெ. **வெள்ளைப்பாதிரி & செம்பாதிரிப்பூ.**

ச.பெ. பாடலீசுகுமம், ஸிதபாடலம், துருமபாடலீ, விஜயபாடலீ, ரக்தபாடலீ, மோகா, வெள்ளைநிறம் சாத்துவீககுணம். சிவபிரீதிதம். உத்தமபுஷ்பம், ஜலவாஸநாபுஷ்பம், மரப்பூ (கோட்டுப்பூவகை) சிறந்த எட்டுவகை அஷ்டபுஷ்பங்களுள் ஒன்று, அதிகமகத்துவம் மிக்கது. சிகப்புநிற பாதிரிப்பூ உகந்ததுஆகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(17) த.பெ. **வெண்பொரசம்பூ**
(வெண்பொரசு&செம்பொரசு,கிளிமூக்குப்பூ).
ச.பெ. பலாசபுஷ்பம், ஆஷாடம், கிம்சுகம், கிம்சுகபுஷ்பம் முதலியன. செம்பொரசு ஸ்ரீ கிம்சுகம், மஞ்சள்பொரசு ஸ்ரீ மஞ்சள்நிறபொரசம்பூ, வெண்நிறப்பூ, சாத்விக குணமுள்ளது. இது பிரம்ம-தைவதம், சிவப்ரியமானது. அஷ்டபுஷ்பாத்மகமான, உத்தமபுஷ்பம், நிர்மால்யதோஷ மற்ற சிறப்பு உடையது. திருஷ்டிதோஷத்தை நீக்கவல்லது. மரப்பூவகை. முள்உள்ள வேறு பொரசமரப்பூவானது விலக்கத்தக்கது என்பர்.

(18) த.பெ. **சரக்கொன்றை** (இதழி).
ச.பெ. ஆரக்வதம், சம்யாகம், கிரிபுஷ்பம், சாம்பவம் முதலியனவாம். சாத்விகராஜஸமிச்ரகபுஷ்பம். மஞ்சள்நிறப்பூ, மரப்பூவகை. இதன் பஞ்சாங்கமும் மருத்துவகுணமுள்ளவை. பூசையில் இது தாயைக்கொன்ற பாவத்தையுகற்றும் மகிமைஉடையது.

(19) த.பெ. **மகிழம்பூ** (முகிழ்)
ச.பெ. வகுளம், பகுளபுஷ்பம், கேஸரம், சாத்விகம்,வெள்ளைநிறப்பூ, மரப்பூவகை, வாகீசீதைவதம். சுகமளிப்பது.

(20) த.பெ. **மாதுளம்பூ** (பூவும் இலையும் ஏற்றது)
ச.பெ. மாதுலிங்கம், டாடிமம், பலபூரம், டாடிமீபத்திரம். பூசைக்கு இதுவும் சிறப்புபத்திர வகையாகும். ராஜஸகுணம். இளஞ்சிவப்புநிறப்பூ, கோட்டுமரப்பூவகை. விசேஷமாக புஷ்பம், இலை இரண்டும்ஏற்றது. இதன் பஞ்சாங்கமும், பழஓடும், மருத்துவகுணத்தால், பெண்நோய் கருப்பைகோளாறுகளை நீக்கி சுகவாழ்வு தருபவை. பூசையில் ஸெ ளபாக்யம் தருவதாகும்..

(21) த.பெ. **பொன்ஊமத்தைப்பூ** (மஞ்சள்நிறபுஷ்பம்) உத்தமமலர்
ச.பெ. துத்தூரம், துர்தூரகம், ஜாம்பூநதம், காஞ்சனகம், மதாரம் என்பனவாகும். மஞ்சள்நிறப்பூ. சாத்விகராஜஸகுணமிச்ரகப்பூ. கோட்டுப்பூவகை, மருத்துவகுணம்மிக்கது. மஞ்சள்நிறபூ மட்டும் சிவனுக்கு ஏற்றது. வெள்ளைநிறம் நடேச, பைரவாதியர்க்கு ஏற்றது, விஷ்ணுவிற்கு இம்மலர் பூசைக்கு விலக்கானது. கருமைநிறஊமத்தம்பூ துர்தேவதைக்கே ஏற்றது.

(22) த.பெ. **எருக்கம்பூ & இலை** (வெள்ளை எருக்கம்பூவும், இலையும்)

ச.பெ. சுவேதார்க்கம், ஸிதார்க்கம், வைவஸ்வதம், அர்க்கபத்திரம், வெள்ளைநிறபூ, சாத்விகமலர், மரப்பூவகை. இது சூரியதைவதம். அஷ்டபுஷ்பவகைகளில் ஒன்று. உத்தமமலர் நீலநிறஎருக்குப்பூ சிவனுக்குக்கூடாது. இது பூஜையில் சூரியனுக்கு ஏற்றது, பார்வதிக்கும், விஷ்ணுவுக்கும் விலக்கானது. இதன் பூசை பிறமாந்தர் குற்றங்களை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
போக்கவல்லது. சிறப்புமிக்க அரியமலர். விநாயகருக்கு ஏற்றதாகும்.

(23) த.பெ. **மயில்கொன்றை, செங்கொன்றை** (உத்தமபுஷ்பம்)
ச.பெ. ரக்தசம்யாகம், சிகிசம்யாகம், சம்யாகம் ஆகியன. நல்லசிகப்புநிறப்பூ. ராஜஸகுணப்பூ, மரப்பூ. இதற்கு அக்னிதைவதம், சிவபிரதீதம், அதிகமருத்துவகுணாதிசயங்கள்கொண்டது. சிவபூசைக்கு இது மிகவும் உகந்தமலர். இது கொன்றைமரவகையில் ஒருவகை. சுரக்கொன்றை இல்லை.

(24) த.பெ. **ஆத்திப்பூ & ஆத்திஇலை** (பத்ரம் & புஷ்பம்) , காயித்திப்பூ.
ச.பெ. தாதகி, வெள்ளை, கோட்டுப்பூ (மரப்பூ) சிவபூசைக்கு உகந்தது.

(25) த.பெ. **ஞாழல்பூ** (புலிநகக்கொன்றைப்பூ)
ச.பெ. வியாக்ரநகீ வியாக்ரீ, தரசக்ஷு:, மஞ்சள்நிறப்பூ, ஸாத்விகராஜஸ மிச்ரகம், மரப்பூவகை,
சிவனுக்கு உகந்தது. பெரியசெடிப்பூ.

(26) த.பெ. **பொன்னாவிரைப்பூ**
ச.பெ. ஹிரண்யாவடம், ஹேமாபடம், கநகாவடம் ஆகியனவாம். மஞ்சள்நிறப்பூ, மிச்ரகம், மரப்பூ, சிவபூசைக்கு ஏற்றது. மகிமைமிக்கது.

(27) த.பெ. **அலரிப்பூ & இலை**
(செவ்வலரி & வெள்ளலரி) கஸ்தூரிபட்டடை
ச.பெ. கரவீரம், சிதகரவீரம், ரக்தகரவீரம், சத்ரிணீகுசுமம், கரவீரபுஷ்பமும், கதவீரபத்ரமும் பூசைக்கு ஏற்றவை. சிகப்புநிறப்பூ, ராஜஸம் வெள்ளைநிறப்பூ, சிவனுக்கு ஏற்ற சாத்விகப்பூ. ராஜஸம், கோட்டுப்பூவகை. பிரம்மதைவதம், ஸர்வதேவபிரியம், சிவன் மற்றும் காளீபூசைக்கு ஏற்ற உத்தமபுஷ்பம், அஷ்டபுஷ்பத்திவகைகளில் ஒருவகை. பூவினங்களிலேயே மிகவும் உயர்தரமானது எனும் சிறப்புஉடையது. பூசையில் உபயோகிப்பதால் இஷ்டசித்திதருவது.

(28) த.பெ. **சம்பகப்பூ** (சண்பகப்பூ) செண்பகமலர்.
ச.பெ. சம்பகம், கௌமாரம், த்ருமசம்பகம், சாம்பேயம், ஹேமம் என்பனவாம். மஞ்சள்நிற-மிச்ரகப்பூ. கந்ததைவதம் (முருகனுக்கு சிறந்தது). உத்தமபுஷ்பம், அஷ்டபுஷ்பங்களுக்குள் ஒன்றானது. ஸர்வதேவதாபிரியகரம். மருத்துவகுணம்மிக்கது. இதில் சிவப்புநிறமும்உண்டு. இதில்உள்ள சிறுசெண்பகம் என்ற ஒருவகையும் பூஜைக்குஏற்றது. வெள்ளைநிறப்பூவும் ஏற்றது.

(29) த.பெ. **பவழமல்லிகை** (செம்மல்லிகை)
ச.பெ. பாரிஜாதம், பவழம் போன்று செந்நிறமான காம்புடைய வெள்ளைநிறமலர். ராஜஸம், மரப்பூவகை. மென்மையும், மணமும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மிக்கது. அரியமலர்வகை. மலரந்து தரையில் உதிரும் மலர்இனம்.

(30) த.பெ. **வெட்சிப்பூ** (இருவாட்க்ஷிப்பூ , வேட்பாலைப்பூ)
ச.பெ. குடஜம், ஸப்தலா, மஞ்சள்நிறம் மிச்ரகபுஷ்பம், கோட்டுப்பூவகை. உகந்தது மகிமைமிக்கது.

(31) த.பெ. **குளஞ்சிப்பூ** கிச்சிலிப்பூ, நாரத்தம்பூ, குளுஞ்சிப்பூ. இலையும் பூசைக்கேற்றது.
ச.பெ. நாரங்ககுசுமம், குளுஞ்சிகம். வெள்ளைநிறப்பூ. சாத்விககுணம், கோட்டுப்பூவகை. மருத்துவகுணம் மிக்கது. முள்உள்ள மரப்பூவகை. இலையும் அருச்சனைக்கு உகந்த பத்திரம் ஆகும். பழமும் அபிஷேகம் நிவேதனத்திற்கு ஏற்றதாகும்.

(32) த.பெ. **கடம்பம்பூ.** கதம்பமலர், கடப்பமரப்பூ. நீர்க்கடம்பு.
ச.பெ. கதம்பகுசுமம், நீபபுஷ்பம், நிசுளம், ஹிஜ்ஜலம், நீர்கடம்பு, சிகப்பு, ராஜஸகுணம், மரப்பூவகை. இதன் தெய்வம் முருகன். (கந்ததைவதம்) தேவிக்கு உகந்தமலர் இதுவுமாகும். சிறந்ததலவிருக்ஷமாக விளங்குவது.

(33) த.பெ. **வில்வப்பூ & வில்வஇலை.** கூவிளம், மாலூரம்.

ச.பெ. பில்வகம், ஸ்ரீபுஷ்பம், ஸ்ரீசுமம், லக்ஷ்மீகம், லக்ஷ்மீபுஷ்பம், பில்வபுஷ்பம் என்பனவாம். இது வெள்ளைநிறப்பூ, சாத்விககுணமலர். முள்ளுபாகமான மரப்பூ, ஸ்ரீதைவதம், சிவப்ரியமான உத்தமப்பூ. சிவலாயத்து தலவிருக்ஷமலர். இதன் அனைத்து உறுப்புகள் பஞ்சாங்கமும், பூசைஹோமத்திலும் மருத்துவத்திலும் சிறந்ததாகும்.

(34) த.பெ. **நாகமல்லிப்பூ** / மரமல்லிகைப்பூ, பாரிஜாதப்பூ.

ச.பெ. தருமல்லிகா, நாகமல்லிகா, த்ருமமல்லிகா, தருமல்லி, குசுமம் என்பனவாம். இது வெள்ளை, சாத்விகப்பூ. மரப்பூவகை. இது ருத்ரதைவதம், சிவப்ரியகரம். உயர்ந்து வளர்ந்து மலரை உதிர்க்கும் மல்லிகைமரம்.

(35) த.பெ. **வன்னிப்பூ.** (பூங்கதிர்) (பூவும் ரூ இலையும்).

ச.பெ. வந்ஹிபுஷ்பம், சமீபுஷ்பம், சமீபத்ரம், சிவம். மஞ்சள்நிறப்பூ, மிச்ரகப்பூ, மரப்பூவகை. இது
அக்னிதேவரின்பூவாகும்.

(36) த.பெ. **மருதானிப்பூ.** அழவனப்பூ, மருதோன்றி மலர்க்கதிர் (பூவும் இலையும் ஏற்றது).
ச.பெ. குரபகம், மருவகம், குரவம் என்பவை. வெள்ளைநிறப்பூங்கொத்து, சாத்விகப்பூ, மரப்பூ, தேவியர்க்கு உகந்தது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(37) த.பெ. நறவம்பூ. குங்குமமலர்.
ச.பெ. குங்குமப்பூ, குசுமம், கேஸரம், லோஹிதம், ரக்தகுசுமம், சிகப்புநிறப்பூ. மரப்பூவகை. இது நவக்ரஹ தோஷத்தை நீக்கும் சிறப்புஉடையது.

(38) த.பெ. இலுப்பைப்பூ
ச.பெ. மதுமத்தம், மதூகபுஷ்பம், மதுமத்தமா, மதுமதீ, கௌபேரகுசுமம் என்பனவாகும். மஞ்சள்-நிறமிச்ரகபுஷ்பம். மரப்பூவகை. வாசம்மிக்கது. இது குபேரரின் மலர். மகிமைமிக்கது, இம்மர் துர்கைக்கு உகந்தது. இதன் பூசைஹோமத்தால் செல்வம் பெருகும்.

(39) த.பெ. மாவிலங்கைப்பூ. மாவிலங்கஇலை. (பத்ரம் விசேஷமானது).
ச.பெ. மாவிலங்கம், வாருணம், லிங்கம், மாதுலிங்கம் எனப்படும். வெண்மைநிறம். சாத்விக-குணம். மரப்பூவகை, வருணதைவதம், சிவப்ரியமானது.

(40) த.பெ. வாகைப்பூ. காட்டுவாகைப்பூ. பெருவாகைப்பூ (மஞ்சள்பூ)
ச.பெ. சிரீஷபுஷ்பம், சைரீஷம், சிரீஷம் எனப்படும். வெண்மைநிறம், சிவப்புநிறம். மிச்ரகம். மரப்பூ, இது நிருதிதேவரின்பூ. சில தெய்வங்களின் பூசைக்கு ஏற்றமலர்.

(41) த.பெ. சந்தனப்பூ & சந்தனஇலை. (பத்ரம் ரூ புஷ்பம்).
ச.பெ. சௌகந்திகம், சந்தனம், பாடீரம், பத்ரகம், கந்தத்துருமம், மலயகிரிஜம், கந்தலீபத்ரம், ஸ்ரீபர்ணம், ஸ்ரீகண்டம் எனப்படும். வெண்மைநிறம், சிவப்புநிறம். சாத்விகமலர். லக்ஷ்மீதைவதம், மரப்பூவகை. உகந்தபூ, இது பூசையால் பெருந்துயரைத் தீர்க்கவல்லது.

(42) த.பெ. தேவதாருப்பூ & பத்திரம் (பூவும், இலையும் பூஜைக்கேற்றவை)
ச.பெ. மஹதீபுஷ்பம், தேவதாருகம், அகரீவிருக்ஷம், சுரத்ருமகம், தேவகுசுமம், காட்டுவனஸ்பதி மரப்பூவகை. வெள்ளைப்பூ, விசேஷ தருபுஷ்பம். இது பூசையால் காம்யஸித்தி அளிக்கக்கூடியது.

(43) த.பெ. வெள்ளலோத்தி. வெள்ளலொத்தி.
ச.பெ. சுவேதலோத்ரபுஷ்பம், ஸிதலோத்ரகம், லோத்ரகுசுமம் எனப்படும். வெள்ளைநிறம். சாத்விகமலர். மரப்பூவகை. சிவபூசைக்கு உகந்தது. ஸ கலதேவதார்ச்சனைக்குஏற்றது. இது பூசையால் ஞானமளிப்பது.

(44) த.பெ. கசாம்பூ. காசாஞ்செடிப்பூ.
ச.பெ. அதஸீபுஷ்பம், சாத்விகம், வெள்ளைநிறம், சிவனுக்கு ஏற்றது.

(45) த.பெ. விஷகை
ச.பெ. விஷம், விஷகா, வெள்ளைநிறம், சாத்விகம், சிவப்பிரியம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(46) த.பெ. **மாம்பூ.** (மாம்பூங்கொத்து & இலை ரூ தளிர் பழம் யாவும் பூசைக்கு ஏற்றவை)
ச.பெ. சூதம், ரஸாலம், ஸஹகாரம், ஆம்ரகம், சூதகலிகா, ரஸாலபுஷ்பம் என்பனவாம். சூதபத்ரம்
(இலை), சூதபல்லவம்(தளிர்) இவை ஏற்றவை. வெள்ளைநிறப்பூ. சாத்விகமலர். மரப்பூவகை. மன்மதனின்கணைமலர். உத்தமமலர்.

(47) த.பெ. **திலகம்பூ.** மஞ்சாடிப்பூ. சாலமரப்பூ.
ச.பெ. தமாலபுஷ்பம், திலககுமம், கிருதமாலம், தாபிச்சம் என்பவை. சிகப்பு. ராஜஸபுஷ்பம், மரப்பூவகை பூசைக்கு உகந்தது.

(48) த.பெ. **ஸரளப்பூ.** கானர்ப்பூ.
ச.பெ. ஸரளபுஷ்பம். வெள்ளைநிறப்பூ. சாத்விகமலர். மரப்பூவகை. சாம்பிராணி பிசினியைத்தருவது.

(49) த.பெ. **பன்னீர்ப்பூ.** (பூவும், இலையும் (ப்தரம் & புஷ்பம்).
ச.பெ. ஹாலிகா. ஹைமா, ஹைமம் முதலியன. வெள்ளை, சாத்விகம். மரப்பூவகை. பூசைக்கு உகந்தமலர் இலைகள்.

(50) த.பெ. **அரளிப்பூ** (மலையடிமரப்பூ. விஷக்கொட்டையுடையது).
ச.பெ. விஷகா, கிரிகர்ணிகா. வெள்ளைநிற, மஞ்சள்நிறப்பூக்கள். மிச்ரகம். மரப்பூவகை. மத்யமப்பூ. கொட்டை விஷமாகும். கரவீரம் இதுவல்ல. அதமபுஷ்பவகை. மலைப்பகுதிக்கு ஏற்ற பூசைமலர்.

(51) த.பெ. **மருதம்பூ** & இலை (மருதமரப்பூவும், இலையும் பூசைக்கு ஏற்றவை)
ச.பெ. அர்ஜுநம், அர்சுனபத்ரம். வெண்மருது. வெள்ளைப்பூ. வெள்ளைநிறமரப்பட்டையுள்ள மரத்தின் இலையும், பூவும் சிறந்தவை.

(52) த.பெ. **முருக்கம்பூ** வெண்முருக்கன்ப்பூ, இத்திப்பூ, இச்சில், இருளி.
ச.பெ. ப்லக்ஷம். சிக்ரு. ஜடீ:, ஜடினீ, வெள்ளை. சாத்விகப்பூ. மரப்பூவகை, உத்தமபூவிலை. இது யாகவிருக்ஷம். இதன் தெய்வம் சிவன்.

(53) த.பெ. **முல்லைப்பூ** (பூவும் இலையும் பூசைக்கு ஏற்றது).
ச.பெ. குந்தபுஷ்பம், குந்தபத்ரம், சூலபத்ரம், மாகதீ, வெள்ளைநிறப்பூ. சாத்விகம். கொடிப்பூ. ஸர்வதேவதாயோக்யம். வில்வவகை. பஞ்சவில்வத்தில் இதுவும் ஒன்றாகும்.

(54) த.பெ. **மல்லிகைப்பூ** குண்டுமல்லிகை
ச.பெ. மல்லிகா, மாகதீ, மாதவம், மாதவீ. வெள்ளை. சாத்விகம். கொடிப்பூ. தலையில் அணிவதால் கண்பார்வை கூர்மைஅடையும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
கண்சிவப்பை நீக்கஉதவும். சிறந்த மூலிகைமலர்.

(55) த.பெ. காந்தல் கொடிமல்லிகை
ச.பெ. காந்திநீ, கிரிஜா. வெள்ளை. சாத்விகம். கொடிப்பூ.

(56) த.பெ. காட்டுமல்லிகை வனமல்லிகை, கொகுடிப்பூ.
ச.பெ. நவமல்லிகா, வனமல்லிகா, மாதவீ. வெள்ளை. சாத்விகம். கொடிப்பூ.

(57) த.பெ. பத்ராக்ஷிப்பூ.
ச.பெ. பத்ரா, பத்ரீ, வெண்நிறப்பூ, சாத்விகம்.

(58) த.பெ. கிறுகத்திரிப்பூ.
ச.பெ. மஹதீ, வெள்ளைநிறப்பூ, சாத்விகம்.

(59) த.பெ. மௌவல்பூ கொடிமல்லிகை, மாதவம்.
ச.பெ. மஹதீ, மாலதீ, ஒருவகை கொடிமல்லிகைப்பூ. உயர்ந்தவகை லதாங்கீ.

(60) த.பெ. கூதாளி. தாளிப்பூ, கொடிப்பூ, கருமுகை (பூ ரூ இலை)
ச.பெ. தாளிசீ, கராகரீ, தாளீசபுஷ்பம், லக்ஷ்மீ, தாளீசபத்திரீ, தேவதாளீ. கொடிவகைப்பூவில் சிறந்த மலர்.

(61) த.பெ. காக்கணம். காக்கொன்றைப்பூ. காக்கரட்டான்பூ
ச.பெ. சிதகாக்கணம், கிருஷ்ணகாந்திகா, குரண்டகம், ஜலஜபுஷ்பம். வெள்ளைகாக்கொன்றை, வெள்ளைகாக்கணம், கொடிப்பூவகை, கருங்காக்கணம், கருங்காக்கொன்றை மருத்துவ மூலிகைச்செடிமலர்.

(62) த.பெ. ஜாதிப்பூ. சிறுசெண்பகம், ஜாதீபத்ரம் (பூவும், இலையும் பூசைக்குஏற்றது)
ச.பெ. மாலதீ, ஜாதீ, ஜாஜீபுஷ்பம், ஜாஜீபத்ரம். வெள்ளை. ஸாத்விகம். கொடிப்பூ. இதன் தெய்வம் ஈசானதேவர். இது ஸர்வதேவபிரியம். மாலை மற்றும் இரவுநேரப்பூசைக்கு ஏற்றது. முற்றிலும் மருத்துவ மகிமைஉள்ளது.

(63) த.பெ. சங்குப்பூ. (வெள்ளைச்சங்குப்பூ, சங்கபுஷ்பிகா, தவளசங்கம்), கிலுகிலுப்பைப்பூ.
ச.பெ. சங்கபுஷ்பம், சங்கிநீ, வெண்காக்கொன்றைப்பூ. வெள்ளை. சாத்விகம். கொடிப்பூ. வெள்ளை பூசைக்குஏற்றது. நீலசங்குப்பூ சில தெய்வங்களுக்கு மட்டும் ஏற்றது.

(64) த.பெ. குருக்கத்திமலர்.
மற்றும் குருக்கத்திஇலை பூசைக்கு ஏற்றவை.
ச.பெ. குந்தம், மாதவீ, ஜாதீ. இதன்இலை விசேஷபத்ரம். இது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பிரம்மஹத்திதோஷத்தைப் போக்கும் மகிமைஉடையது. கொடிப்பூ. பூசைக்குஏற்றது. வெள்ளைப்பூ மற்றும் நீலநிறப்பூ என்ற இருவகை உண்டு.

(65) த.பெ. **கொகுடிப்பூ.** குண்டுமல்லிவகை
ச.பெ. வெள்ளைநிறம், சாத்விகமலர், கொடிப்பூவகை. ஸ கலதெய்வத்திற்கும் ஏற்றது.

(66) த.பெ. **பிச்சிப்பூ.** வெள்ளைநிறப்பூ, ஜாதிமல்லிகை.
ச.பெ. பட்டிகா, சுவேதப்பட்டி, மாலதீ, ஜாஜீ, கொடிப்பூவகை, சாத்விகமலர், பூசைக்கு ஏற்றது.

(67) த.பெ. **வல்லாரை இலை.** (9வகை மூலிகைகளில் ஒன்று)

ச.பெ. பிராம்மீ, ஞானவிருத்திதா, ஞானதம்.(9-ல் 1). பூசைக்கு ஏற்றது.

(68) த.பெ. இண்டம்பூ. இண்டங்கொடிப்பூ , ஈயக்கொடிப்பூ, ஈயப்பூ.

ச.பெ. ஸீஸகுசுமம். ஸீஸகா. இது சிவனுக்கு உகந்தது. வெண்ணிறப்பூ, கொடிப்பூவகை.

சாத்விகமலர் வகை.

(69) த.பெ. கண்டங்கத்திரிப்பூ. கத்தரிப்பூ, வங்கம்பூ, வழுதுணைப்பூ, சிகப்புகண்டங்கத்திரி.
ச.பெ. பிருஹதீ, கண்டகாரிகா, கண்டகீ, மஹதீ, வியாக்ரீ, வங்கம் என்பனவாகும். சிகப்புமலர். ராஜஸகுணபுஷ்பம். இதன் இலை விசேஷபத்திரம். கொடிப்பூ. மருத்துவணாதிசயம்மிக்கது. சிறந்த அஷ்டபுஷ்பத்தில் ஒன்றானது.

(70) த.பெ. **பட்டிப்பூ** செம்பட்டிப்பூ, சிகப்புபட்டீ. விருக்ஷிப்பூ.
ச.பெ. பட்டீ, பட்டிகா, ரக்தபட்டீ, ரக்தபட்டகம், குரவம், சிகப்புநிறப்பூ, ராஜஸபுஷ்பம், நிலப்பூவகை, ஸர்வதேவப்ரியம், கண்திருஷ்டி, தோஷஹரம். மருத்துவகுணமுள்ளது, உண்ணக்கூடியது.

(71) த.பெ. நாயுருவிப்பூ & நாயுருவிஇலை (ஸர்வாங்கமும் யாகத்திற்கு ஏற்றது).
ச.பெ. அபாமார்க்கம், மாயூரம், தார்மிகம், பவித்ரகம். வெள்ளை. சாத்விகம். மூலிகைசெடி. நிலப்பூவகை. பூங்கதிர்வகை. பத்ரம் என்பது. இதன் தனிஇதழ்கள். சிவனுக்கும், சரபர், ருத்ரன், சுதர்சனனம், பாசுபதாதிஸ்திரம் முதலான தேவதைக்கு மிகவும் உகந்தது. இது யமதருமரை அதிதேவதையாகக்கொண்டது. பாவம்போக்கவல்ல இச்செடியின் அனைத்துபாகமும், மருத்துவ-

குணாதிசயமும் கொண்ட மூலிகைகளாக உள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
(72) த.பெ. பூளைப்பூ- பூனைப்பூண்டு, பீசாப்பூண்டு, பீளைப்பூண்டுசெடி (பூவும், இலையும்)
ச.பெ. பத்ரீ, பத்ரா, மஹாபத்ரா. வெள்ளை. சாத்விகமலர், இது இருவகை சிறுபூளை, பெரும்-பூளைச்செடி, செடிப்பூ. மகிமைமிக்க மூலிகை.

(73) த.பெ. தும்பைப்பூ-
ச.பெ. துரோணபுஷ்பம், சிவபுஷ்பம். இருவகை சிறுதும்பை & பெருந்தும்பை, மஹாதுரோணம். காசித்தும்பை, வெள்ளைநிறத்தும்மைப்பூ. சுத்தசாத்விகமலர். நிலப்பூவகை. சிவனதுபூ. இது ஜன்னிசுரம், சீதளவியாதிகளையும், விஷத்தையும் போக்கும் உயர்ந்தமூலிகைசெடி. உயர்தரமான அஷ்டபுஷ்பவகைகளுள் ஒன்று. பசுவைக்கொன்றகோஹத்தை தோஷம் நீக்கும் மகிமைபெற்றது.

(74) த.பெ. செவ்வந்திப்பூ- ஜெவிந்திப்பூ, சாமந்திப்பூ, மஞ்சசாமந்திப்பூ.
ச.பெ. ஜயந்திகா, ஜயந்தீ, பத்ரா, பகுபத்ரிகா, ஸவாந்திகா, சேவந்திகா, செவ்வியம் என்பன. இதில் வெள்ளைநிறமும், மஞ்சள்நிறமும் உண்டு. மஞ்சள்சாமந்தியே மிகவும்சிறந்தது. மஞ்சள்நிறப்பூ. மிச்ரகுணப்பூ. நிலச்செடிப்பூவகை. போகமோக்ஷங்களைத்தரும். வெற்றித்தரக் கூடியது. மருத்துவமகிமை பொருந்தியது. எல்லா தெய்வங்களுக்கும் எக்காலத்திலும் ஏற்றது. இது துளிர்சாமந்தி (துலுக்கசாமந்தி) என்பது இல்லை. இதுவேறு. வெள்ளைநிறமும் சிவனுக்கு ஏற்றமலர்.

(75) த.பெ. ஊமத்தம்பூ. (வெள்ளை ஊமத்தைப்பூ) (வெள்ளைரூ மஞ்சள்பூ)
ச.பெ. துத்தூரகம். தூர்த்தம், உன்மத்தம், இது விஷ்ணுவுக்கு, உமைக்கும் விலக்கத்தக்கமலர். வெள்ளைநிறம்மட்டும் உக்ரமானகேசமூர்த்திகளுக்கு ஏற்றது. மருத்துவகுணம் மிக்கது. இது பைரவர், நடராஜர் பூசைக்கு உகந்தது. மஞ்சள்நிறப்பூ மட்டும் சிவனுக்கு விருப்பமானது. இதன்பூ இலை, காய், வேர் யாவும் பலநோய் நீக்கி காக்கக்கூடியவை.

(76) த.பெ. கொக்கிறகம்பூ மற்றும் இலை (பத்ர புஷ்பம் ஏற்றவை)
ச.பெ. பகபுஷ்பம், வெள்ளைநிறசாத்விகமலர். செடிப்பூவகை. விஷ்ணுவுக்கும், உமைக்கும் விலக்கத்தக்கது. சிவனுக்கு ஏற்றது.

(77) த.பெ. நந்தியாவட்டம்பூ. வலம்புரிப்பூ. நந்தியாவட்டை, ஒற்றைநந்தியாவட்டை.
